REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමී

Puthiya Poomi

சுற்று 12 | ஏப்ரல் 2005 | பக்கம்12 | விலை 12/- | சுழற்சி 79

- பேச்சுவார்த்தையை முன்னெடுக்காது பொதுக் கட்டமைப்பை இழுத்தடித்து
- பொருட்களின் விலைகளை உயர்த்தி வாழ்க்கைச் செலவை அதிகரித்து
- தனியார் மயத்தை துரிதமாக்கி அந்நியருக்கு நாட்டை விற்று
- சொத்து சுகம் படைத்தோருக்கு வாய்ப்பு வசதிகளை அதிகரித்து
- நாட்டு மக்கள் அனைவருக்கும் துன்ப துயரங்களை வாழ்வாக்கி

## ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தின் ஒரு வருட சாதனை?

ஆட்சி அதிகாரத்திலிருக்கும் ஐ. ம. சு. மு. அரசாங்கம் தனது ஒரு வருட காலத்தைப் பூர்த்தி செய்துள்ளது. ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரக் கதிரையில் அமர்ந்து பத்து வருடங்களைப் பூர்த்தி செய்து விட்டார். புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தம் வந்து மூன்று வருடங்கள் முடிவடைந்து விட்டன. சுனாமிப் பேரழிவு இடம் பெற்று மூன்று மாதங்கள் சென்று விட்டன. இவ்வாறு வருடங்கள் மாதங்கள் முடிவடைந்து "பூர்த்தி நிகழ்வுகள்" இடம் பெற்றுச் செல்கின்றனவே தவிர நாடும் மக்களும் எதிர் நோக்கிய எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டதாக இல்லை. அதற்குப் பதிலாக மேன்மேலும் பிரச்சினைகள் மக்கள் மீது சுமத்தப்பட்டு துன்ப துயரங்களை அனுபவிக்க மக்கள் விடப்பட்டுள்ளனர். அதே வேளை சொத்து சுகம் அதிகாரம் படைத்தோருக்கும் அந்நிய சுரண்டல் காரர்களுக்கும் எல்லாவற்றையும் அனுபவிக்க சகல வாய்ப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யுத்தமாக்கப்பட்ட இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு என்பது ஏமாற்றத்துக்கு உள்ளாகியிள்ளது. அது அப்படியென்றால் சுனாமிப் பேரழிவிலிருந்து வடக்கு கிழக்கு மக்களுக்கு புனரமைப்பு புனர்நிர்மாணத்திற்கு ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு விடும் என்று கூட நம்பப்பட்டது. புலிகள் இயக்கம் சில படிகள் இறங்கி வந்து பொதுக் கட்டமைப்புக்கு தயார் என்று கூறியும் அரசாங்கம் அதனை இழுத்தடித்து வருகிறது. இதனை ஜே. வி. பி.யும் சிஹல உறுமயவும் கடுமையாக எதிர்க்க அரசாங்கம் அதற்கு அஞ்சி கொடுக்கவும் இயலாது மறுக்கவும் முடியாது காலத்தை இழுத்தடித்து வருகிறது. இவ்வாறே பொருட்களின் விலைகள் கேள்வி நியாயமின்றி உயர்ந்து செல்கிறது. 2500ரூபா சம்பள உயர்வு வழங்கியதாகப் பெருமை பேசிக் கொள்ளும் அரசாங்கத்தில் அந்தச் சம்பளஉயர்வை விடப்பலமடங்கு நிலையில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. எரிபொருட்களின் விலைகளும் மின்சார தொலைபேசி போக்குவரத்து கட்டணங்களும் மேலும் கூட்டப்படவுள்ளன. நெல்லுக்கு 15-16 ரூபா விலை கொடுத்து விவசாயிகளிடம் வாங்கியதாகக் கூறிக் கொண்ட அரசால் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்நிலையிலே அரசாங்கம் மின்சார சபையையும் எஞ்சிய பெற்றோலிய கூட்டுத்தாபன

தொடர்ச்சி 12ம் பக்க

## மேல் கொத்மலைத் திட்டத்தை அமுல்படுத்த அரசு பிடிவாதம்

### அதனை எதிர்த்து செயற்பாட்டாளர்கள் மாநாடு

இம்மாதம் 10 ஆம் திகதியன்று அட்டனில் மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் செயற்பாட்டாளர்களது மாநாடு நடைபெறும். மலையகத்திற்கும் நாட்டிற்கும் அனைத்து மக்களுக்கும் நாசத்தை ஏற்படுத்தப்போகும் அத்திட்டத்தை தடுத்து நிறுத்த முன்னெடுக்கப்பட வேண்டிய மக்கள் போராட்ட இயக்கங்கள் பற்றி அங்கு திட்டமிடப்படவுள்ளது. அதில் நாடெங்குமிருந்து தமிழ் சிங்கள பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். இவ்வியக்கம் தொடர்ச்சியாக பல எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தமை தெரிந்ததேயாகும். அரசாங்கம் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவது என முடிவெடுத்துள்ளது. போலியாக எதிர்ப்பை தெரிவித்து வந்த இ.தொ.கா வழமைபோல் காட்டிக் கொடுத்துவிட்டு சுயநல அரசியல் லாபத்திற்காக அடிபணிந்துவிட்டது. ம.ம.முன்னணி அதற்கு எப்போதும் ஆதரவாகவே செயற்பட்டு வருகிறது.

நாடு ஏற்கனவே சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளது. நீர் மின்சாரம் தேவை என்று கூறிக்கொண்டு ஏற்கனவே நாட்டில் கட்டப்பட்ட நீர்தேக்கத் திட்டங்களால் நாட்டின் சூழலுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கொத்மலை திட்டத்தின் அணையில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டின் பல பகுதிகளில் நில நடுக்கங்கள் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அதனால் நீர்த்தேக்கத் திட்ட அணைகளில் உடைப்பேற்பட்டால் மலைநாட்டில் தாழ் நிலப்பகுதிகளில் மக்களும் நிலமும் நீரில் மூழ்கடிக்கப்படும் அபாயம் இருப்பதாக புவியியல் விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர். மேல் கொத்மலைத்திட்டத்தினால் கட்டப்படவுள்ள தலவாக்கொல்லை, மேல் கலிடோனியா ஆகிய இரண்டு பாரிய நீர்த்தேக்கத்திட்டங்களால் நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் தலாவாக்கொல்லை முதல் டயகம வரையிலுள்ள பகுதிகளின் பெருநிலப்பரப்பு நீரில் மூழ்கடிக்கப்படவுள்ளது. மேலும் தமிழ் மக்களின் குடிசனச் செறிவில் வீழ்ச்சி ஏற்படும் புதிய பேரினவாதக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படும். பாதுகாப்புக்கெனக் கூறி பல இராணுவ முகாம்கள் ஏற்படுத்தப்படும். இவற்றால் நேரடியாகவும் மறைமுகமாகவும் மலையகத்தமிழ் மக்களுக்கு அரசியல், சமூக, பொருளாதார

தொடர்ச்சி 12ஆம் பக்க



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரணம் புனர்வாழ்வு புனரமைப்பை அரசாங்கம் உரியவாறு வழங்கமையை எதிர்த்து வடமராட்சியிலும் கொழும்பு கோட்டை புகையிரத நிலைய முன்பாகவும் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதை முதல் மூன்று படங்களிலும் தனியார்மயத்தை எதிர்த்து மின்சார ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதை கடைசிப் படத்திலும் காணலாம்.

## புதிய- ஜனநாயக கட்சியின் 2005 புரட்சிகர மே தினம்

**யாழ்ப்பாணத்தில்**

- சுனாமிப் பொதுக் கட்டமைப்பை வலியுறுத்தி
- பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்த்து
- தொழிலாளர் உரிமைகளை வற்புறுத்தி
- தனியார்மயத்தை கைவிடக் கோரி

**மலையகத்தில்**

- மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து
- தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை வற்புறுத்தி
- பேரினவாத ஒடுக்கு முறைகளை எதிர்த்து
- மலையக மக்களின் புரட்சிகரப் பாதையை வற்புறுத்தி

**ஊர்வலம் - பொதுக் கூட்டத்தில் அணிதிரள்வீர்!**

புதிய- ஜனநாயக கட்சி

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியா ஆசிரியர்கள் மீது காட்டுத் தர்பார் செயலட்டை மூலம் மாணவரிடம் பணப்பறிப்பா?

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் அதிரடி இடமாற்றத்தை ஆசிரியர்களுக்கு கொடுத்து சங்கட நிலைக்கு உள்ளான கல்விப் பணிப்பாளர் அதிலிருந்து சற்றுப் பின்வாங்கிக் கொண்டார் என அறிய முடிகிறது. ஆனால் அதே பணிப்பாளரான அம்மையார் கல்வி அபிவிருத்தி வள நிலையம் என்பதன் ஊடாக செயலட்டை என்ற பாறாங்கல்லை ஒரே நேரத்தில் ஆசிரியர் மீதும் மாணவர்கள் மீதும் சுமத்தி நடக்க வைத்துள்ளார். ஆசிரியர்களுக்கு அவர்களது பாட நூல்களுக்கூடான பாடத்திட்ட கற்பித்தலை சுதந்திரமாக முன்னெடுப்பதைத் தடுத்து இச்செயலட்டை மூலம் கற்பித்தலைச் செய்யுமாறு நிர்ப்பந்தம் செய்யப்படுகின்றது. அதே நேரம் செயலட்டை என நாலு பக்கப் பிரசுரம் அச்சிட்டு அதனை மாணவர்கள் ஒவ்வொருவரும் 150 ரூபா கொடுத்து வாங்குமாறு வற்புறுத்தப்படுகின்றனர். இதில் அப்பட்டமான வியாபாரமே நடக்கிறது. இதன் மூலம் இலவசக் கல்வி என்பதே மறுக்கப்படுகிறது.

இச் செயலட்டை என்பதில் எவ்வித புத்தாக்கமும் கிடையாது. இது ஒரு மேலதிக வாசிப்பு நூலல்ல. இது மாணவர்களின் சுய சிந்தனையை மழுங்கடிக்கிறது. மாணவர்கள் மனனம் பண்ணி எழுதுவதை வலியுறுத்துகிறது. அதே வேளை கணிப்பீடு பரீட்சைகள் மேல் பரீட்சைகள் என வேலைப் பளுவோடு மல்லாடி வரும் ஆசிரியர்களின் செயற்பாட்டை பல மடங்காக்கி அவர்களது கற்பிக்கும் ஆற்றல்களை அமுக்குகிறது.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பெயரில் முன்னெடுக்கப்படும் இச் செயலட்டை முறையானது அப்பட்டமான வியாபாரமாகும். அதன் கணக்கு விபரம் கூட மர்மமானதாகும். ஒரு மாணவனிடம் செயலட்டையின் பெயரால் 150 ரூபா வசூலிப்பது என்பது எவ்வளவு அநியாயமானது. தெற்கு வலயத்தில் பல ஆயிரக்கணக்கான மாணவர்களிடம் லட்சக் கணக்கில் கறக்கப்படும் பணம் யாருடைய கையிலும் எவருடைய பைகளிலும் சென்றடைகின்றது என்ற கேள்விக்கு உரிய பதில் வேண்டும். இது தான் இலவசக் கல்வியின் லட்சணமா? இதே கல்வி வலயத்தில் ஆசிரியர்களிடம் சுனாமி நிதி வசூலிக்கப்பட்ட பிரச்சினை பூதாகரமாகி பின் அது புலிகளின் மேலிட தலையீட்டால் நிறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கல்விக் கூடங்களும் அவற்றை நிர்வகிக்கும் கல்விப் பணி மனைகளும் அதன் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் ஊழியர்களே யாவர். அத்தகையோர் மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் மீது அதிகாரக் கடிவாளத்தைக் கைப்பிடித்து குதிரை விட முடியாது. கல்விப் பணிப்பாளர் அவருடன் சில அதிகாரிகள் ஒரிரு அதிபர்கள் சேர்ந்து வுவுனியா தெற்கு கல்வி வலயத்தில் காட்டுத் தர்பார் நடாத்த முற்படுகின்றனர். இதனையிட்டு வவுனியா கல்விச் சமூகத்தினரும் மக்களும் விசனம் அடைந்துள்ளனர். இது பற்றி மாகாணக் கல்வி அமைச்சு உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வவுனியா மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வவுனியா

சி. மங்களேஸ்வரன்

# ஊவா பல்கலைக் கழகத்திற்கு அஞ்சுவதேன்?

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. அதனை நடைமுறைக்கு கொண்டு வரும் போக்கில் பதுளை இங்குறுகமுவ தோட்டப்பகுதியில் முப்பத்தைந்து ஹெக்டயர் நிலம் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பதுளையில் இப் பல்கலைக்கழகம் அமைவதால் மலையகத் தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு வாய்ப்பாக இருக்கும். கல்விக்கான உந்துதல் மலையக மாணவர்டையே வளரவும் இது ஏதுவாக அமையும். ஆனால் மலையகத்தின் தாதாக்கள் போன்று தொழிற்சங்க- அரசியல் ஆதிக்கம் பண்ணிக் கொண்டிருக்கும் இரண்டு தலைமைகளும் இதனை எதிர்ப்பது ஏன் என்பது தான் மலையக கல்வியாளர்களுக்கு கேள்வியாக உள்ளது. இவர்கள் கூறும் காரணம் பல்கலைக்கழகம் அமைய இருக்கும் இங்குறுகமுவ தோட்ட நிலம் வளமுள்ள ஒன்று என்றும் முப்பந்தைந்து ஹெக்கார் நிலம் சுவீகரிக்கப்படுவதால் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் முதலைக் கண்ணீர் வடிக்கின்றமை தான் வேடிக்கையானதாகும். முப்பத்தைந்து ஹெக்ரயர் தோட்டநிலம் சுவீகரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போன்று ஓலம் வைக்கும் இவ்விரு தலைமைகளும் மேல்கொத்மலை நீர் மின் திட்டத்தின் மூலம் யப்பானியக் கம்பனியால் பறித்து நீரில் மூழ்கடிக்கப்பட உள்ள தலவாக்கெல்லை தோட்ட நிலங்கள் பற்றியோ பாதிக்கப்படும் தொழிலாளர்களின் அவலம் பற்றியோ ஏன் ஓலம் வைக்க முடியவில்லை. இங்கு மேல் கொத்மலைத் திட்டத்தால் வரும் கொந்தராத்துக்களும் கொமிசன்களும் பணச்சாக்கு நிரப்பல்களும் அங்கு பதுளை ஊவாப் பல்கலைக்கழகம் அமைப்பதில் கிடைக்க முடியாத சூழல் என்றே சில வட்டாரங்களில் பேசப்படுகின்றது. அதற்கும் மேலால் மலையகத்தில் பல்கலைக்கழகம் அமைவதால் மலையகத்தின் இளைய தலைமுறையினர் பல்கலைக்கழகத்தை சமூக விழிப்புணர்வுக்கும் அரசியல் நோக்க செயற்பாட்டிற்கும் ஒரு தளமாகப் பாவித்து விடுவார்கள் என்ற உள் ளார்ந்த அச்சம் பிரதான காரணம் என்றே நம்ப வேண்டியுள்ளது. ஏற்கனவே சிறிபாத கல்வியியல் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறும் ஆசிரிய மாணவ மாணவிகளில் பெரும்பான்மையோர் சமூக அக்கறையும் முற்போக்கான சமூகப் பார்வையும் இடதுசாரி அரசியல் போக்கும் கொண்டவர்களாக இருந்து வருவதை இவ் ஆதிக்க தலைமைகள் உள்ளார்ந்து நோக்கி வருகின்றார்கள். அதே போன்று மலையகத்தில் உருவாக்கப்படும் பல்கலைக்கழகத்திலும் வந்து விடுமோ என வஞ்சகத்தனமாக அஞ்சுகிறார்கள் என்பதாலேயே அவர்கள் ஊவாப் பல்கலைக்கழகம் பதுளையில் அமைவதை எதிர்க்கின்றனர். மலையகத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைவதை வரவேற்று அதனை மலையக மாணவர்களுக்கு உச்ச பயனைத் தரக்கூடியதாக மாற்றுவதற்குரிய கோரிக் கைகளையும் ஆலோசனைகளையும் முன்வைக்க வேண்டிய மலையகத்தின் அரசியல் ஆதிக்கத் தலைமைகள் இவ்வாறு பல்கலைக்கழகம் அமைப்பதை எதிர்ப்பதானது முழு மலையகத்திற்குச் செய்யும் பெரும் துரோகமாகும். மலையக மக்களுக்கு காலத்திற்குக் காலம் துரோகம் செய்வதில் என்றுமே பின் நிற்காத கூச்ச நாச்சம் கொள்ளாத தலைமைகளுக்கு இது ஒரு சிறிய விடயமேயாகும். மலையக மக்களும் கல்வி சமூகமும் இதில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

பதுளை

வ. சுரேஸ்குமார்

# பாடசாலை அனுமதியில் இழைக்கப்படும் அநீதிகள்

சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் நலன் பேணல் பற்றி குரல் ஒலிக்கும் இக்காலத்தில் பாடசாலை அனுமதியில் சிறுவருக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றி சிந்திப்பது அவசியமாகும். கல்வி என்பது சாதி, மத, பேதம், பொருளாதார வளம் என்பதற்கு அப்பால் வழங்கப்படவேண்டிய் செல்வம். ஆனால் பாடசாலை அனுமதியில் மதம், பொருளாதார வளம், சமூக அந்தஸ்து என்பவற்றை அடிப்படையாக வைத்து பாகுபடுத்தல் என்பது சிறுவர்களை கல்விச்சாலையில் இருந்து தூரக் கடத்துவதாகும். இதனால் பாடசாலை அனுமதியை இழக்கும் சிறுவர்கள் தூர இடங்களுக்கு செல்ல நேரிடுகிறது. இவ் அவல நிலை உளவியல் ரீதியில் அவர்களை ஆயுதம் ஏந்தா சிறுவர் போராளிகளாக மாற்றுகின்றது.

பாடசாலை அபிவிருத்தி என்ற பெயரில் அரசாங்கப் பாடசாலைகளிலும் மதச்சார்பு பாடசாலைகளிலும் ஆண்டு ஒன்று அனுமதிக்கே பல ஆயிரம் ரூபாய்கள் வசூலிக்கப்படுகின்றது.அரசாங்க பாடசாலைகளில் அவ்வாறான மரபு, சட்டவிரோதமானது. மதச்சார்பு பாடசாலைகளில் அவர்கள் கூறும் இறைவனுக்கே விரோதமானது. எல்லாக்குழந்தைகளும் சம உரிமையுடனேயே உலகில் பிறக்கின்றனர். அதனை சமூக கட்டமைப்பு வெவ்வேறாகத் தரம் பிரிக்கிறது. அத்தரப் பிரிப்பை சமூகத்திற்கு முன்னோடிகளான ஆசிரியர்களோ அன்றி மதகுருமாரோ செய்வது மிகப் பெரும் தவறு.

மேலும் மாணவர் அனுமதியில் பெற்றோருடனான நேர்காணலில் அவர்களின் தொழில் அந்தஸ்து, வருமானம், திருமண உறவு என விசாரித்து சமூக பொருளாதார உளவியல் பிரச்சனைகள் இல்லாத சூழலில் உள்ள குழந்தைகளுக்கு மட்டும் தான் அனுமதி என்ற கொள்கை "தூர நோக்கோடு" பின்பற்றப்படுகின்றது. இது ஹிட்லரின் தூய இனக்கொள்கைக்கு ஒப்பானது. இவ்வாறு கற்றவர்களால் சிறுவர்கள் மீது ஏற்படுத்தப்படும் துஷ்பிரயோகம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த படல் வேண்டும். இதுவும் சிறுவர் துஷ்பிரயோகமேயாகும்.

பாடசாலை அனுமதியில் குழந்தைகள் வாழும் சூழலில் இருந்து கிட்டிய இடத்தில் கல்விகற்கும் வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். போட்டிப் பரீட்சைகள் தேசியப் பாடசாலை அனுமதியில் இருக்கலாம்.

அதேவேளை பாடசாலை அனுமதியில் பிரபல்யமான பாடசாலைகள், நகரப்பாடசாலைகள் கடைப்பிடிக்கும் மாணவருக்கு விரோதமான நடைமுறைகள் தடைசெய்யப்பட வேண்டும்.

எனவே பாடசாலை அனுமதியில் பெற்றேர்களுக்கும் கல்விவட்டத்தினருக்கும் மனப்பாங்கு மாற்றம் அவசியம். சிறுவர் உரிமை பற்றிய மனச்சாட்சி எதிரொலிக்க வேண்டும். அன்றேல் சமூக எழுச்சியும் புதிய சட்டங்களும் அவசியப்படும். இதற்கு இன்று நாடுமுழுவதும் உள்ள சிறுவர் பாதுகாப்பு குழுக்கள் குரல் எழுப்ப முன்வரல் வேண்டும்.

DR. சி. யமுனாநந்தா

# நாலு நடக்கும் உலக'லே

நற்குணன்

## திறந்த வீட்டில் நாய் நுழைந்தாற் போல....

பெப்ரவரி மாத நடுவில் இந்தியக் கடற்படையினர் கொழும்பு, காலி துறைமுகத்தின் கடல் அடியை அளந்து நில அளவை செய்து அப் படங்களைச் சனாதிபதியிடம் இந்தியத் தூதுவர் வழங்கிய படம் அரச ஒளிபரப்பிற் பெருமையுடன் காட்டப்பட்டது. இலங்கையின் பாதுகாப்புடன் தொடர்புடைய துறைமுகங்களை இன்னொரு நாடு எந்த அடிப்படையில் நுணுக்கமாக அளந்து படம் வரைய இயலும்?

இது இந்தியா தனது சுய விருப்பிற் தான்தோன்றித்தனமாகச் செய்த காரியமா, அல்லது இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்ட படி செய்த காரியமா?

உண்மை எதுவாயினுஞ் சனாதிபதி அந்தப் படங்களை இந்தியத் தூதுவரிடம் பகிரங்கமாகப் பெற்றுக் கொண்டதன் மூலம் இந்த நாட்டின் இறைமைக்குப் பங்கம் விளைவித்துள்ளார்.

இது போக காங்கேசன்துறைக் கடற்பரப்பிலும் இவ்வாறான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. படங்கள் இந்தியாவின் வசமே உள்ளனவா அல்லது இலங்கைக்கும் ஒரு பிரதி வழங்கப்பட்டதா? வடக்கில் நடத்திய கடலடி நில அளவை பற்றிய ஒளிவு மறைவுக்கு என்ன காரணம்?

## கடவுள் ஒன்றே!

ஜே. வி. பியை வாங்கு வாங்கென்று வாங்கி அதை ஒரு இடதுசாரிக் கட்சி யென்றும் அது கடைப்பிடிக்கிற இன்றைய இனவாத அரசியல் உபாயங்களெல்லாம் மாக்ஸிய உபாயங்களே என்றும் டெய்லி மிரரில் எழுதியிருக்கிறார் நம்முடைய போரியல் 'நிபுணர்' தராக்கி என்கிற டி. பி. சிவராம். அந்தக் கட்டுரையில், தமிழ்ப் பத்திரிகைகளில் எழுதுவது போலல்லாது விடுதலைப் புலிகளை ஆதரித்தோ அவர்களைப் போருக்குத் தூண்டிவிடுகிற விதமாகவோ அவர் எதையுமே எழுதாதது ஒரு சிறப்பு! அதே வேளை, தமிழிற் செய்வது போலவே, இந்திய மேலாதிக்கவாதிகளது நோக்கம் பற்றி மௌனஞ் சாதிப்பது இன்னொரு சிறப்பு!

இந்திய- ஜே. வி. பி நல்லுறவின் பின்னணி நமது நிபுணருக்குத் தெரியாததா? இந்த நிபுணர் இரண்டு ஆண்டுகள் முன்பு வரை டெய்லி மிரரின் சகோதர ஏடான சண்டேதற்றைம்ஸில் ஒழுங்காக ஒரு பக்தி எழுதி வந்தவரல்லவா. இரண்டு ஏடுகளும் சிங்களப் பேரினவாத ஏடுகளே என்பதை அறிய யாருக்கும் நிபுணத்துவம் தேவையில்லை. ஆனால் நிபுணருடைய உண்மையான எசமானர் யாரென்று இப்போது தெரிகிறது. யாருடைய காசு அவரது பேனாவழியே எழுத்தாக நெளிகிறதோ, அவரே இவர் வணங்கும் கடவுளாவர். அவரே ஜே. வி. பியின் கடவுளுமாவர்.

## கருணை வேண்டாம், உரிமையை மதியுங்கள்

முஸ்லிம்கள் தமது தனித்துவத்தை மிக நீண்டகாலமாகவும் தாம் ஒரு தனித் தேசிய இனம் என்பதைப் பல காலமாகவும் வற்புறுத்தி வந்துள்ளனர். எனினும் அவர்களின் தனித்துவத்தை ஏற்கச் சில தமிழ்த் தேசியவாதிகள் பிடிவாதமாகவே மறுக்கின்றனர். 'ஈழவேந்தன்' என அறியப்படும் கனகேந்திரன் இன்னமும் பொன்னம்பலம் ராமநாதனின் அரசியலை நியாயப்படுத்துகிற இவர் பொன்னம்பலம் ராமநாதன் முஸ்லிம்களை வஞ்சித்ததையும் அவர்களது தனி அடையாளத்தை மறுக்க முயன்று முஸ்லிம் தலைவர்களிடம் மூக்குடைபட்டதையும் நினைவிற் கொள்வது நல்லது. தமிழ்ச் சமூகத்தின் சாபக்கேடுகளான ஆணாதிக்கத்தையும் சாதியத்தையும் இறுதி வரை பற்றி நின்றவர் ராமநாதன். ஈழவேந்தன், ராமநாதனை விமர்சிக்கத் தயங்குகிறவர் மட்டுமல்ல நியாயப்படுத்துகிறவருங் கூட. ஏனைய தமிழ்ப் பாராளுமன்ற அரசியல்வாதிகளும் இதே நிலைப்பாட்டிற் தானா உள்ளனர் என்பதை அவர்கள் தெளிவுபடுத்துவது நல்லது. முஸ்லிம்கள் வேண்டுவது எவரது கருணையையும் அல்ல. தமிழர் சிங்கள மக்களிடமிருந்து கருணையைக் கோரவில்லை. எனவே முஸ்லிம்கட்கும் பரிவாகப் பேசுவதாக நினைத்து அவர்களது சமத்துவத்தை மறுக்கிற எந்த அரசியல்வாதியும் கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டியவராவார்.

## அவர்கள் பூச்சுற்றவே எங்கள் காதுகள்

எம்.எஸ்.சுப்புலட்சுமி இறந்த பின்பு அவரைப் பற்றிய நினைவுக் குறிப்புகள் பலவும் வெளியாயின. காந்திக்கு அவருடன் இருந்த தனிப்பட்ட மரியாதை பற்றியும் பலர் எழுதியிருந்தனர். ஆங்கிலத்தில் வெளியான கட்டுரைகளில், காந்தி தனக்குப் பிடித்த "வைஷ்ணவ ஜனதோ" என்ற பாட்டை அவர் பாடிக் கேட்க விரும்பியதாகவும் எந்தப் பாட்டையும் முறையாகப் பழகாமற் பாடமாட்டேன் என்று மறுத்த எம்.எஸ், அப்பாட்டை முறையாகப் பழகிப் பாடி ஒலிப்பதிவு செய்து காந்திக்கு அனுப்ப முன்பு காந்தியை ஒரு இந்து மத வெறியன் சுட்டுக் கொன்றதாகவும் கண்டேன். என்றாலும் முன்னாள் 'இந்தியாடுடே' இலக்கியப் பகுதி ஆசிரியையான புனைகதையாளர் வாஸந்தி 'தீராநதி ஏட்டில் காந்தி சாவதற்கு முன்னமே எம்.எஸ் பாடியது அவருக்குக்கிடைத்ததாயும் அதுவே அவர் கேட்ட கடைசிப் பாட்டு என்றும் தனது கற்பனையையும் சேர்த்துள்ளார். இது தான் தமிழின் தனித்துவம். யாரும் எதையும் எழுதலாம். பிரபலங்கள் எழுதினால் யாரும் தட்டிக் கேட்பதில்லை. தட்டிக் கேட்கவும் கூடாது. தமிழருக்குக் காதுகள் பூச்சுற்றவே வைக்கப்பட்டுள்ளன போலும். எனவேதான் ஆன்மிகம் முதல் சினிமா வரை, ஒவ்வோரு துறையிலும் கூசாமற் பொய்யுரைக்கிறவர்களால் உச்சங்களை எட்டமுடிகிறது.

## வரவரச் செய்திகள் சோதிடம் போல....

இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திகள் வரவரக் கட்டுக்கதைகள் போல இல்லாவிடின் சோதிடம் போல இருக்கின்றன. இரண்டுக்கும் என்ன வேறுபாடு என்று கேட்காதீர்கள். அதிகம் இல்லை.

இப்போது சில காலமாக செய்தி அறிக்கையை அடுத்து ஒரு சோதிட அறிக்கையும் வருகிறது. நல்ல நேரம் கெட்ட நேரம் என்று எதையெதையோ சொல்வது போல ஒவ்வொரு நாட்பலனும் சொல்லப்படுகிறது. இந்தப் பணிக்காக யார் பேரால் யாருக்குப் படியளக்கப் படுகிறதோ தெரியாது. ஆனாலும் யாருடைய உபயம் என்று ஊகிப்பது கடினமில்லை.

இலங்கை வானொலிச் செய்தியை நம்புகிற மூடர்கள் அதன் சோதிடத்தை நம்பலாம். சோதிடத்தை நம்புகிற மூடர்கள் இலங்கை வானொலி உட்பட எதையுமே நம்பலாம். அது அவர்களது தலைவிதி!

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு முதல் தெற்கு வரை
## மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

சுனாமிப் பேரலை பேரழிவுகளை ஏற்படுத்தி மூன்று மாதங்கள் முடிந்து விட்டன. ஆனால் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரணங்களும் உதவிகளும் அரசாங்கத்தினால் உரியபடி வழங்கப்படவில்லை. இதனை அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் பகிரங்கமாகவே ஒப்புக் கொண்டும் வருகின்றனர். சுனாமி உதவி நிதிக்கென பல நாடுகள் பணம் பொருட்கள் வழங்கின. ஆனால் ஜனாதிபதி பொது வைபவம் ஒன்றில் பேசும் போது சுனாமி நிவாரண நிதிக்கு ஐந்து சதமும் கிடைக்கவில்லை என்று கூறியமை பொய்யா? புளுகா?. ஜனாதிபதி இவ்வாறு கூறிய அடுத்தடுத்த நாட்களில் சில வெளிநாட்டுத் தூதரகங்கள் தாங்கள் வழங்கிய நிதித் தொகைகளை வெளியிட்டன. அது பற்றி ஜனாதிபதி செயலகம் மௌனம் காத்துக் கொண்டது.

அப்படியானால் கிடைக்கப்பெற்ற உதவி நிதி எதற்குப் பயன்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் உதவியாக வழங்கப்பட்ட ஐயாயிரம் ரூபாவிற்குரிய காசோலைகளுக்கான பணம் வங்கிகளில் இல்லை எனக் கைவிரிக்கப்பட்ட சம்பவங்கள் பல பிரதேசங்களில் இடம் பெற்றன. பல பிரதேசங்களில் அரசாங்கத்தின் நிவாரணப் பொருட்களும் அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய உதவிப்பொருட்களும் அதிகாரிகள் ஊழியர்களால் பதுக்கப்பட்டு வெளிச்சந்தையில் விற்கப்பட்டன.

அரசாங்கம் சுனாமிப் பேரழிவுக்குள்ளான மக்களுக்கு முறையாக உதவவில்லை. அதற்கான ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டங்களை முன்னெடுக்கவும் இல்லை. இதனால் வடக்கிலும் தெற்கிலும் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகின்றது. தெற்கில் சுதந்திரதினத்தன்று வீதிகளை மறித்து மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். எல்லாம் தெற்கே செல்கி றது எனச் வடக்கே சிலரும் யாவும் வடக்கிற்கு அனுப்பப்படுகிறது எனத் தெற்கில் பேரினவாதிகளும். கூப்பாடு போடுகிறார்கள். ஆனால் எங்குமே முறையான நிவாரணம் புனரமைப்பு இல்லை என்பதே உண்மை. அத னாலேயே வடக்கு, கிழக்கிலும் தெற்கு மேற்கிலும் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். ஆனால் அரசாங்கம் அசைவதாகஇல்லை. ஏனெனில் சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் சாதாரண உழைக்கும் மீனவர்களும் மக்களுமாவர். உல்லாச விடுதிகள் வசதி படைத்தோரின் கட்டிடங்கள் வீடுகள் மீது ஆட்சியில் உள்ளவர்களுக்கு இருக்கும் அக்கறை சாதாரண மக்களின் மீது இல்லாதிருப்பதாலேயே மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

# வவுனியா ஆசிரியர் இடமாற்றம்
## அநீதியானதா?

மார்ச் மாதம் புதிய பூமியில் "அம்மையார் ஒருவரின் திமிர்த்தனம்" என்ற தலைப்பில் வவுனியா தெற்கு வலய ஆசிரியர் இடமாற்றம் பற்றிய செய்தி பற்றி என்னுடைய கருத்தை வெளியிடவிரும்புகிறேன்.

சுனாமி நிவாரண நிதிக்காக ஆயிரம் ரூபா வழங்க மறுத்த ஆசிரியர்களுக்கே இடமாற்றம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது மொட்டந்தலைக்கும் முழ ங்காலுக்கும் முடிச்சுப் போடமுனைவதாகும்.

வவுனியா தெற் குவலய ஆசிரியர் இடமாற்றங்கள் தேசிய இடமாற்றக் கொள்கைக்கு முரண்பட்டதாக இருக்கலாம். அதில் சில குறைபாடுகளும் முறைகேடுகளும் இடம் பெற்றிருக்கலாம். இடமாற்ற கட்டளைகளை பிறப்பித்த கல்விப்பணிப்பாளர் கடுமையான வார்த்தைகளை பிரயோகிப்பவராகவும் அதிகார ஆணவ ஆதிக்கத்துடன் செயற்படுவராகவும் இருக்கலாம். ஆனால் குறித்த இடமாற்றங்களினால் கஷ்டப்பிரதேசங்களில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை. ஒரு சிலரைத் தவிர ஒட்டு மொத்தமாக நகர்ப்புறப்பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர் கஷ்டப்பிரதேச பாடசாலைகளுக்கோ கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்கள் நகரப்பாடசாலைகளுக்கோ இடமாற்றம் செய்யப்படவில்லை.

சரியாகவோ பிழையாகவோ வவுனியா தெற்கு வலயத்தில் வருடாவருடம் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவதுண்டு. அவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் சாதாரண விவசாயிகளின் தொழிலாளர்களின் தச்சுவேலை மேசன்வேலை செய்யப வர்களின் குடும்பங்களை சேர்ந்தவர்களாவர். அதனால் அவர்களின் எதிர்ப்புக்குரல் ஒலிக்கவில்லை இவ்வருடம் பெரும்பாலும் நகர்புறத்தைச் சேர்ந்த வசதிபடைத்த பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதால் எதிர்ப்புக்குரல்கள் ஒங்கி ஒலிக்கினறன. இப்பிரச்சினையும் பூதாகரமாக்காட்டப்பட்டுள்ளது. அரசியல் செல்வாக்குள்ளோரும் வசதிபடைத்தவர்களும் எப்போதுமே வசதியான பாடசாலைகளிலேயே வேலை செய்கின்றனர். அரசியல் செல்வாக்கற்ற வசதியற்றோர் எப்போதும் கஷ்டப் பிரதேசத்திலேயே வேலை செய்கின்றனர் இந்த இடமாற்றங்களால் பாரிய இடைஞ்சல்கள் ஏற்படப்போவதில்லை. இவை குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டும் இடமாற்றங்களாகும்.

எனவே எதிர்காலத்தில் இடமாற்றங்கள் செய்யும் போது கஸ்டப்பிரதேச ஆசிரியர்களை நகர்ப்புறங்களுக்கும் நகர்ப்புற பாடசாலை ஆசிரியர்களை கஷ்டப்பிரதேசங்களுக்கும் மாற்ற வேண்டும். அதுவே சரியான இடமாற்றமாக இருக்கும்

**வவுனியா வன்னிவாணன்**

**ஆசிரியர் குறிப்பு:**

சட்டத்திற்கும் ஒழுங்குவிதிகளுக்கும் முரணாகச் செய்யப்படும் இடமாற்றங்கள் முறையான இடமாற்றங்களாகா. அவை அதிகாரவரம்பை மீறிய எதேச்சதிகாரமானவையே ஆகும். இடமாற்றம் பற்றிய தேசிய கொள்கைக்கு மாறாக சுற்று நிருபங்களை உருவாக்க முடியாது. இடமாற்ற சபையிலுள்ள தொழிற்சங்கங்களுடன் கலந்துறையாடாமல் வருடாந்த இடமாற்றங்களையும் செய்ய முடியாது. என்பது கவனத்தில்குரியாகும்

# உடப்புஸல்லாவை வைத்தியசாலை
## மூடப்படும் அபாயம்

பெருந்தோட்டங்களால் சூழப்பட்டுள்ள உடப்புஸல்லாவை மாவட்ட வைத்தியசாலை மூடப்படும் அபாயம் நிலவுகிறது. அங்கு எவ்வித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படாமல் உடைந்த பழைய நிலையிலேயே வைத்தியசாலை கட்டிடம் இருக்கிறது.

மகப்பேற்று சிகிச்சை, சிறிய சத்திர சிகிச்சைகள் உட்பட பல ஆரம்ப, நடுத்தர சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வந்த அந்த வைத்தியசாலையில் இன்று சாதாரண தலைவலிக்கு காய்ச்சலுக்கு கூட மருந்தில்லை. ஒரேயொரு வைத்தியர் மட்டுமே கடமையாற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது. வைத்தியசாலையில் போதியளவு தாதிமார்களும், ஊழியர்களும் இல்லை.

பிரதான வீதியிலிருந்து வைத்தியசாலைக்கு செல்லும் பாதை உடைந்த நிலையில் வாகனப்போக்குவரத்திற்கு ஏற்ற சீரில்லாது இருக்கிறது.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக நோயாளிகள் அனுப்பி வைக்கப்படும் நுவரேலியா வைத்தியசாலையும் கூட சீரழிந்த நிலையிலேயே இருக்கிறது. தோட்டப்புறங்களில் இயங்கி வந்த மருந்தகங்களும், வைத்திய சாலைகளும் கூட இயங்கக்கூடிய நிலையில் இல்லை. இதனால் இப் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அவசரசிகிச்சையை மட்டுமன்றி சாதாரண சிகிச்சையைக் கூடப் பெறமுடியாதிருக்கின்றனர். இதனால் பல நோயாளிகளின் நோய்கள் பாரதூரமாகி விடுகிறது. உரிய நேரத்திற்கு உரிய சிகிச்சை அளிக்கப்படாததால் சிலர் இறந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க எதிர்ப்பா?
## ✗ புலி எதிர்ப்பா? ✗

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் இருவருக்கு அளிக்கப்பட்ட விருந்தில் கலந்து கொண்டதன் மூலம் ஜே.வி.பி யினரின் மாக்ஸிச முகமூடி கிழிக்கப் பட்டுள்ளது. இப்போது உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதுபோல் புலி எதிர்ப்பு சுவரொட்டிகள் கொழும்பு நகரில் காணப்படுகின்றன.

அமெரிக்கா உலக மக்களின் பொது எதிரி. இந்த விடயத்தைக் கூட கோட்டை விட்ட ஜே.வி.பி.யினர், பாராளுமன்ற ஆசனங்களைப் பிடிப்பதற்காகவே இனவாதம் பேசுகின்றனர். பாராளுமன்ற ஆசனங்களை இலக்காக வைத்தே இன வேறுபாடின்றி அனைவரும் இனவாதம் பேசுகின்றனர்.

மக்கள் நலன் சார்ந்த எந்த இயக்கமானாலும் இன்று உலகின் பொது எதிரியாக அமெரிக்காவை கணித்துள்ளன. அமெரிக்காவை பொது எதிரி எனக் கூறத் தயங்கும் எவரும் சுரண்டுபவர்களின் நலன்களையே பாதுகாக்கின்றனர் என்பது மாக்ஸிஸ்ட்டுக்களின் நிலைப்பாடு.

ஜே.வி.பி.யினரின் சுவரொட்டிகள் அமெரிக்க எதிர்ப்பையோ உலகவங்கி எதிர்ப்பபையோ வெளிக்காட்டவில்லை. அது புலி எதிர்ப்பு சுவரொட்டியாகவே விளங்குகிறது.


பொது எதிரி யார்? பிரதான எதிரி யார்? நண்பர்கள் யார்? என்பதை நாம் சரியாகக் கணிக்கா விட்டால் எத்தனை தியாகம் செய்தாலும் மக்களுக்கு விடிவு வராது. நாம் சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழ நேரிடும்.




மறைந்த மலையகப் போராளி தோழர் சந்திரகுமாரின் முதல் மாத அஞ்சலியின்போது வெளியிடப்பட்ட செவ்வரும்பு நூலும் அதன் முதல் பிரதியை அவரது துனைவியார் மலர்விழி தோழர் நாராயணசாமியிடம் இருந்து பெறுவதையும் நூல் வெளியீட்டு கூட்டத்தில் தோழர்கள் இ.தம்பையா, சி.இராஜேந்திரன், சோ.தேவராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

# முதுபெரும் தோழர் சி. சிதம்பரம் காலமானார்
## இறுதி வரை உறுதிகுலையாத பொதுவுடைமைப் போராளியாக வாழ்ந்தவர்

புரட்சிகர. பொதுவுடைமை இயக்கத்தின் வடபுலத்து முது பெரும் தோழரான சின்னத்தம்பி சிதம்பரம் கடந்த 26-03-2005 அன்று கிளிநொச்சியில் தனது 85வது வயதில் இயற்கை எய்தினார். காங்கேசன்துறையைச் சேர்ந்த தோழர் சிதம்பரம் (சிதம்பரி) 1920ம் ஆண்டு பிறந்தவர். இரண்டாவது உலக யுத்தத்தைத் தொடர்ந்து வடபுலத்தில் தோற்றம் பெற்ற பொதுவுடமை இயக்கத்தினால் ஈர்க்கப்பட்ட பல இளைஞர்களில் தோழர் சிதம்பரியும் ஒருவரானார். அவர் காங்கேசன்துறைப் பகுதியில் பொதுவுடைமை இயக்கத்தை விரிவுபடுத்தி முன்னெடுப்பதில் முன்னனியில் இருந்து வந்தவர். அன்றைய வடபுலத்து சாதிய தீண்டாமை ஒடுக்குமுறைச் சூழலில் வர்க்க உணர்வும் போராட்டக்குணாம்சமும் கொண்ட ஒரு தோழராக அவர் வளர்ந்து வந்தார். மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை மீது சிதம்பரி தனது வற்றாத பற்றுதியையும் நம்பிக்கையையும் கொண்டிருந்தார். அதன் காரணமாக பல்வேறு நிலைகளிலும் பொதுவுடமைப் போராளியாக இருந்தும் வந்தார். 1966-71 காலகட்டத்தில் மாக்சிச லெனினிசப் பொதுவுடைமைக் கட்சியால் வழிநடாத்தப்பட்ட வரலாற்றுத் திருப்புமுனை மிக்க சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களின் போது தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமைத் தோழர்களில் ஒருவராவும் இருந்து வந்தார். பிரசித்தி பெற்ற மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் போது அப்பிரதேச தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக ஆலயப் பிரவேசக் கோரிக்கையை முன்வைத்து அரசாங்க அதிபர், ஆலய தர்மகர்த்தா, பொலீஸ் அதிபர் ஆகியோருக்கு வெகுஜன இயக்க காங்கேசன்துறை கிளை சார்பில் கடிதமெழுதி போராட்ட முனையைத் திறந்து வைத்தவர்களில் தோழர் சிதம்பரி முன்னணியில் நின்றவர்.



இறுதிவரை கொள்கையாலும் நடைமுறையாலும் மாக்சிச லெனினிசவாதியாக வாழ்ந்து வந்த தோழர் சிதம்பரி தனது முதுமைக் காலத்திலும் புதிய ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாட்டுடனும் செயல்பாட்டுடனும் தன்னை பிணைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தவர். 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற புதிய ஜனநாயக கட்சியின் 25வது ஆண்டு நிறைவு விழாவில் புரட்சிகர கௌரவம் அளிக்கப்பட்ட ஆறு முதுபெரும் பொதுவுடைமைப் போராளித் தோழர்களில் தோழர் சிதம்பரமும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவரது சொந்த ஊரான காங்கேசன்துறை 1990ம் ஆண்டிலிருந்து பேரினவாத ராணுவப் பிடியின் கீழ் இருந்து வருவதால் தோழர் சிதம்பரம் தமது குடும்பத்தினருடன் ஏனைய மக்கள் போன்று இடம் பெயர்ந்த கஷ்ட வாழ்வுக்கு ஆளாகினார். அதன் காரணமாக கிளிநொச்சியில் பிள்ளைகளுடன் இருந்தும் வந்தார்.

தோழர் சிதம்பரத்தியின் மறைவுக்கு புதிய ஜனநாயக கட்சியின் மத்திய குழு தனது ஆழ்ந்த துக்கத்தையும் புரட்சிகர அஞ்சலியையும் தெரிவித்து கொண்டது. கட்சியின் மத்திய குழு சார்பில் வடபிரதேசச் செயலாளர் தோழர் கா. கதிர்காமநாதனும் தோழர் இ. கா. சூடாமணியும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி இறுதி நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர். தோழர் சிதம்பரம் பற்றிய விரிவான கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



## இரகசியப் பொலீஸ் விசாரணை

சுனாமிப் பேரழிவின் காரணமாக உயிர் உடைமைகளை இழந்த வடக்கு கிழக்கு மக்களுக்கு மலையக மக்கள் உணவுப்பொருட்கள் உடைகள் மற்றும் பாவனைப் பொருட்கள் நிதி என்பன சேகரித்துக் கொடுத்தனர். முற்றிலும் மனிதநேய அடிப்படையில் சேகரிக்கப்பட்ட இவ் உதவிகளை மலையக இளைஞர்கள் அமைப்புக்கள் நேரடியாக எடுத்துச் சென்று வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினர். சிலர் அங்கு மீட்புப் பணிகளிலும் உதவினர். இவை அடிப்படை மனித உணர்வும் மனித உரிமை சார்ந்ததுமாகும்.

ஆனால் இவ்வாறு செயற்பட்ட மலையக இளைஞர்களை இரகசியப் பொலீஸ் பிரிவினர் விசாரணை செய்து வருவதாக மலையகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏன் இந்த விசாரணை? மனிதர்களுக்கு மனிதர்கள் உதவுவது தவறா? அல்லது வடக்கு தமிழ் மக்களுக்கு மலையகத் தமிழ் மக்கள் உதவியது தவறா? இவ் விசாரணைகளில் மலையக இளைஞர்கள் அநாவசியமான கேள்விகளுக்கும் மிரட்டல்களுக்கும் ஆளாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மலையகத்தில் பேரினவாத ஒடுக்குமுறை எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். மலையகத்தில் இவ்வாறு இடம் பெறுவது முதற்தடவையல்ல. வடக்கு கிழக்கோடும் புலிகள் இயக்கத்துடனும் மலையக இளைஞர்களுக்கு தொடர்பு இருந்து வருவதாக காலத்திற்குக்காலம் பேரினவாத ஊடகங்கள் கதைகள் கட்டி விடுவது வழமை. சில சிங்களப் பேரினவாத ஏடுகள் மேற்படி கதைகளை இட்டுகட்டி ஊதிப் பெருப்பித்து வந்ததினால் மலையக இளைஞர்கள் மீது பொலீஸ் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டு வந்திருக்கிறது.

## மலையகத்தின் போராளி சந்திரகுமார் நினைவாக

### நூல் வெளியீடும் நினைவுக் கூட்டமும்

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மறைந்த மலையகத்தின் பொதுவுடமைப் போராளி தோழர் பெருமாள் சந்திரகுமாரின் முதல் மாத நினைவஞ்சலியும் நினைவு நூல் வெளியீடும் 19-03-2005 அன்று தலவாக்கொல்லை கல்கந்த தோட்டத்தில் இடம் பெற்றது. புதிய ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேச செயளார் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளை தோழர் அ.ந.வரதராஜ் நெறிப்படுத்தினார் . தேசிய அமைப்பாளர் சட்டத்த ரணி இ.தம்பையா, அரசியல் குழு உறுப்பினர் சட்டத்தரணி சோ.தேவராஜா, கல்வியாளர் சி.இராஜேந்திரன், புதிய மலையகம் வெ.மகேந்திரன் உட்பட நண்பர்கள் தோழர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் நினைவுரை நிகழ்த்தினர்.

தோழர் சந்திரகுமாரின் உருவப்படத்தை அவரது தந்தை ஆர்.பெருமாள் தாய் பெ.தியாகமணி ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர். அவரது துணைவியார் மலர்விழி சந்திரகுமார் உருவப்படத்துக்கு மாலையிட்டதுடன் “செவ்வரும்பு” நூலின் முதற் பிரதியை தோழர் என்.ஆர்.எஸ்.நாராயணசாமியிடம் இருந்தும் பெற்றுக்கொண்டார். கட்டுரைகள், நினைவஞ்சலிகள், கவிதைகள், படங்கள் உள்ளிட்ட எண்பது பக்க நூலாக மேற்படி நினைவு நூல் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அடக்கப்படும் மலைகத் தமிழ்த் தேசிய இனம் என்ற வகையிலும் சரண்டப்படும் தொழிலாள வர்க்கம் என்ற அடிப்படையிலும் மலையக இளைஞர்கள் மத்தியில் எதிர்ப்புணர்வும் போராட்டக்குணாம்சமும் வளர்வது இயல்பானதேயாகும். இந்த எழுச்சி உணர்வு குறுகிய தேசிய வாதமாகவோ அதிதீவிர வாதமாகவோ செல்லாது புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதையில் முன் செல்ல வேண்டும். அதுவே பொலீஸ் அடக்கு முறைக்கு மாற்றுவழியாக அமையக் கூடியதாகும்.

## மாணவனின் மனமுவர்ந்த அஞ்சலி உரை

கடந்த 19ம் திகதி தலவாக்கொல்லை கல்கந்த தோட்டத்தில் இடம் பெற்ற தோழர் சந்திரகுமாரின் முதல் மாத அஞ்சலிக் கூட்டத்தில் மாணவன் த. செல்வகுமார் (நு/ஃகிறேட் வெஸ்டன் த.வி) வழங்கிய அஞ்சலி உரை.

இங்கு வருகை தந்துள்ள சபையோர்களே, முதலில் எனது புரட்சிகர வணக்கத்தை தெரிவித்து கொள்கின்றேன். கல்கந்த தோட்டத்தில் வளர்ந்த நான் இன்றைய முக்கியமான நிகழ்வில் எனது கருத்துக்களை சொல்வதில் பெருமிதமும் மகிழ்சியும் அடைகிறேன். பாரதியார் குறிப்பிட்டது போல வேடிக்கை மனிதனாக வாழ்வது எனக்கு விருப்பமில்லை. காரணம் என்னை வழிநடத்தி இது தான் சரியான பாதை என்று சொல்லிக் கொடுத்த எமது ஆசிரியர் குமார் இன்று எம்மிடம்இல்லை. ஆனாலும் அவர் கூறிய கருத்துக்கள் எமது புலன் வழி சென்று எம்மை வழிகாட்டும் வெளிச்ச வீடுகளாக நம் முன்னே பரந்து கிடக்கின்றன. இன்றைய இளைஞர்கள் ஏதோ பிறந்தோம் ஏதோ வாழ்ந்தோம் என்ற வழியிலே சென்றபோது இதுதான் பாதை இது தான் பயணம் என்று எமக்கு வழி காட்டி ஊக்குவித்தவர் எமது அருமை ஆசான் பெ. சந்திரகுமார் ஆவார். இன்று மூன்று கேள்விகளை இவ்விடத்தில் எழுப்ப விரும்புகின்றேன்.

முதலாவது வினா எமது தோட்டத்தில் பிறந்து வாழ்ந்தவர்கள் கல்வியிலே முன்னேறிய போதிலும் கூட எமது வாழ்க்கை இவ்வாறு தான் அமைய வேண்டும் என வழி காட்டியவர்கள் எத்தனைபேர்? இன்று எமது தோட்டத்திலே எமது வழிகாட்டியாக பிறந்து வாழ்ந்த எமது ஆசிரியரினுடைய முதல் மாத அஞ்சலி நிகழ்விலே இவ்வளவு கல்வியாளர்கள் அறிஞர்கள் வழிகாட்டிகள் வந்து சேர்ந்தமைக்கான காரணம் யாது? நாளை எமது இளைய சமுதாயத்தில் வழிகாட்டிகளாக அமையப்போவது யார்? இவைகளே மூன்று கேள்விகளாக உள்ளன. ஆளும் வளரம் அறிவும் வளரம் என்பார்கள். நாம் வாழ்ந்த வாழ்க்கையிலே எவற்றையெல்லாம் செய்து முடித்தோம் என்பதே கேட்க வேண்டிய கேள்வியாகும். நமது பாதையிலே எத்தனையோ சாதனைகளை நிலை நாட்ட விரும்புகின்றோம். நமது தாய்மார்கள் காலை முதல் மாலை வரை உழைத்து ஓடாகி போனதை விட எதைக் கண்டார்கள். எமது தாய்மார்களதும் விருப்பம் உயர்ந்த கல்வி பெற்று சிறந்த சமூகப்பணி யாளர்களாக விளங்க வேண்டும் என்பதே. இதற்குரிய வழி என்ன? நமது பாதை எது எனத் தீர்மானித்து நமது கல்வியிலே கரிசனை கொண்டு முன் செல்வதினால் தான் எமது தாய் தந்தையரைச் சந்தோஷப்படுத்த முடியும். ஆனால் நமக்கு கல்வி கற்பதற்கு என அதாவது க. பொ. த. உயர் தரம் வரை படிப்பதற்கு நமது தோட்டத்திலே பாடசாலைகள் இருக்கின்றதா என்பதே கேள்வியாகும். சாதாரண கல்வியைப் பெறுவதற்குக் கூட நாம் தலவாக்கலை நகருக்கு செல்ல வேண்டும். விஞ்ஞான கல்வியை பெறுவதற்கு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு நாம் பெருமளவு பணத்தை செலவ ழிக்க வேண்டும். இதனால் தான் எமது பகுதிகளில் இருந்து பல்கலைகழகம் செல்வோர் தொகை மிகக் குறைவாக உள்ளது. எமக்கு அண்மையில் உள்ள சிறிபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு செல் வதற்கு கூட போதுமான கல்வித்தர முடைய விண்ணப்பதாரிகள் இல்லை. இதனால் எமக்கு முன்னே உள்ள பணி மிககடுமையாக உழைப்பது கல்வியிலே மிக கூடுதலான கரிசனை செலுத்துவது என்பதாகும். ஒற்றுமையுடனும் உறுதியான கொள்கையுடனும் வாழ்வது என்பதை நிறைவேற்ற தனது வாழ்விலே உணர்ந்து செயற்பட்டு நமக்கு சரியான பாதை காட்டியவர்தான் ஆசிரியர் சந்திரகுமார். எனவே எவ்வளவு இடர்ப்பாடுகள் வந்தாலும் நமது வழியிலே முன்னேறி செல்வோம் என்பதே எமது மன உறுதியாக கொண்டிருக்கின்றோம். இன்னும் 100 வருடங்கள் சென்றாலும் எமது மக்களுக்கான பாதை மாறப் போவதில்லை. தோட்ட தொழிலாளிகளின் பிள்ளைகள் கல்வி, அறிவு, சமூகச் செயற்பாடு ஆகியவற்றின் ஊடாக பல் வேறு வெற்றிகளை பெறுவார்கள் என்பதை ஆணிதரமாக கூறிக் கொள்ள விரும்புகின்றேன். எமது வாழ்வு நேர்வழிப்பட்டது, விஞ்ஞான பூர்வமானது என்பதால் நாங்கள் எதனைக் கண்டும் அஞ்சப் போவதில்லை. நாளை உண்மை வெல்லும். நேர்மை வெற்றி பெறும். நம்பிகையோடு ஆசிரியர் சந்திரகுமார் காட்டிய புரட்சிகரப் போராட்டப் பாதையில் உறுதியுடன் முன்செல்வோம் எனக் கூறி விடைபெறுவதோடு இவ்வளவு நேரம் எனது பேச்சினை செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி நன்றியினைப் பொழிந்து முடிக்கிறேன்.

## பகிரங்கக் கடிதம்

### மார்க்ஸிய புத்தகங்கள் மீது கோபம் கொள்வதேன்?



பிரதாப் இராமானுஜத்திற்கு!

நீங்கள் அண்மைக்காலமாக உதிர்த்துவரும் பொன்மொழிகளை கேட்டுக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை.

மலையகத்திலிருந்து வளர்ந்திருக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய சிவில் சேவை அதிகாரிகளில் நீங்கள் ஒருவர். தோட்ட உள்ளக கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக இருந்த நீங்கள் ஆறுமுகம் தொண்டமானுடன் ஒத்துப்போக முடியாத நிலையில் அப்பதவியிலிருந்து விலகினீர்கள் என்று சிலர் கூறக் கேட்டு எனக்கு உங்கள் மீது மதிப்பு ஏற்பட்டது. நீங்கள் மலையகத் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் என்றும் சிலர் கூறுவார்கள். 1948 இல் முதலாவது ‘சுதந்திர’ பாராளுமன்றத்தில் இருந்த இலங்கை இந்தியன் காங்கிரஸ் எம். பி. இராமானுஜத்தின் மகன் என்பதை தெரிந்து கொண்ட போது இயல்பாகவே மதிப்பு அதிகரித்தது.

மலையக பாடசாலைகளில் நூலகவசதிகள் குறைவு. இருக்கின்ற நூலகங்களில் நூல்கள் இல்லை. ஆனால் உங்கள் கண்களை குத்தி இருப்பதும் மூளையைக் களைப்படையச்செய்திருப்பதும் அப்பாடசாலை நூலகங்களில் இருக்கும் மாக்ஸியப் புத்தகங்கள் தான் என்பதை நீங்கள் வெளிப்படுத்தியுள்ள போது அந்த மதிப்பு இறங்கத் தொடங்கியது.

கொழும்புத் தமிழ்சங்கத்தின் ஸ்தாபகர் தினவிழா நிகழ்ச்சியொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போது காலாவதியாகிவிட்ட காலாவதியாகிக் கொண்டிருக்கும் மாக்ஸிய தத்துவ புத்தகங்களே மலையகப் பாடசாலைகளில் இருக்கின்றன. அதற்குப் பதிலாக தமிழ்ச்சங்கம் புத்தகங்களை மலையகப் பாடசலைகளுக்கு கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளீர்கள். உங்களுக்கு ஏன் மாக்ஸிய புத்தகங்கள் மீது அவ்வளவு கோபம்?

கொழும்புத் தமிழ்சங்க நூலகத்தில் கூட மாக்ஸியர்களின் புத்தகங்கள் கணி சமாக இருக்கின்றன என்பது உங்களுக்கு தெரியாது. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மாக்ஸியர்கள் அதிக எண்ணிக்கையில் நூல்களை வெளியிட்டுள்ளனர் என்பது உங்களுக்கு தெரியாது. இலங்கையில் காலஞ்சென்ற பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் சி. சிவசேகரம் இந்தியாவில் கால ஞ்சென்ற முனைவர் கோ. கேசவன் போன்ற மாக்சியர்கள் தமிழ் இல க்கியத்திற்கு புதிய அணுகுமுறைகளையும், பங்களிப்புகளையும் செய்துள்ளனர். அதுவும் உங்களுக்கு தெரியாது.

மலையகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மாக்ஸியர்களுக்கு பெரும் பங்குண்டு. இன்றுகூட பலர் மலையகத்தில் உண்மையாக சமூகப்பொறுப்புடனும் அக்கறையுடனும் செயற்படுவதற்கு மாக்ஸிய அடிப்படையே காரணமா கும். அவர்களுக்கு உங்களைப்போன்று உயர் சம்பளத்தில் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளராக வேலை செய்யமுடியாது. ஆனால் மிகவும் துன்பத்திற்கு மத்தியிலும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடன் மலையக மக் களுக்கு சேவை செய்ய முடியும்.

அதுமட்டுமல்ல. உங்களைப் போன்றவர்களை பிரதம அதிதியாக அழைக்கும் அளவிற்கு கொழும்புத் தமிழ்சங்கம் பக்குவப்பட்டதற்கும் மாக்ஸியர்களின் கடின பங்களிப்பே காரணமாகும்.

அதற்காக நீங்கள் இடம் தெரியாமலும் விசயம் புரியாமலும் பேசிவிட்டீர்கள் என்று நான் கூறவில்லை. நீங்கள் உங்களை சரியாகவே அடையாளம் காட்டியுள்ளீர்கள்.

1. உலகமயமாதலில் நன்மை இருப்பதாகவும் தேசிய பொருளாதாரமொன்று இல்லாத நிலையிலேயே உலகமயமாதல் மூலம் கூடிய நன்மைகளைப் பெற முடியும் என்று நீங்கள் அடிக்கடி கூறுவதைக் கேட்டுள்ளேன்.

2. எல்லோரும் மலையகத் தமிழ்மக்கள் என்ற அடையாளத்தை விரும்புகின்ற போது நீங்கள் இந்திய வம்சாவழி என்ற அடையாளத்தையே விரும்புகிறீர்கள்.

3.தற்போது நீங்கள் மாக்ஸிய புத்தகங்கள் மீது வெறுப்பை காட்டியுள்ளீர்கள் (அறிவிற்காகக் கூட மாக்ஸிய புத்தகங்களைப் படிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டை கொண்டிருப்பீர்கள்)

4. இந்தியவம்சாவழி வர்த்தகர்கள் அரசியல் கட்சியொன்றை அமைக்க எடுத்த முயற்சிகளின் பின்னால் நீங்கள் இருந்ததாகக் கூறப்பட்டது.

ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழ்நிலையில் சிறந்த அதிகாரத்துவ முதலாளித்துவாதியாக ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ சார்பு இந்திய மேலாதிக்க சார்பு நிகழ்ச்சி நிரலை மலையகத்தில் முன்னெடுக்க உங்களால் செயற்பட முடியாது. நீங்கள் அதிகாரத்துவத்துடன் இருந்தாலும் மலையக சமூகத்தை பொறுத்தவரையில் ஒரு ஆளும் வர்க்க அடிமையாகவே இருக்கிறீர்கள். மலையகத்தில் புதிய வடிவங்களில் இன்னும் பல அடிமைகளை உருவாக்க முயற்சிக்காதீர்கள். ஏனெனில் அந்த அடிமைகளின் விடுதலைக்காகவும் மாக்ஸியர்கள்தான் போராடவேண்டியுள்ளனர் என்பதையும் தங்களுக்கு தெரிவிக்கின்றேன்.

இப்படிக்கு சு. சிட்டுலிங்கம்
பூண்டுலோயா.

## அமைதியை குலைக்கும் மதமாற்றம்

தைப்பொங்கலன்று உலாவந்த சப்பறத்திற்கு வைப்பதற்காக பூப்பறித்தவர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இன்னும் சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குள்ளிருக்கின்ற கொலத்தன தோட்டத்தில் நடைபெற்றுள்ளது.

அத்தோட்டத்திலுள்ள பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் பெந்தகோஸ்து மதத்திற்கு சேர்க்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மத்தியில் செய்யப்படும் மதப்போதனைகளும், ஆராதனைகளும் அங்கு வாழும் இந்துக்களுக்கு எதிராகவும் தாங்கள் ஏற்கனவே இருந்த இந்து சமுதாயத்திற்கு எதிராகவும் அவர்களை தூண்டிவிடுவதாக இருப்பதாகவே அறிக்கை செய்யப்படுகிறது.

அண்மையில் பெந்தகோஸ்து சமயத்திற்கு சேர்ந்த ஒருவராலேயே மேற்படி இந்து சமய சப்பறத்திற்காக பூப்பறித்த இந்து ஒருவர் தாக்கப்பட்டார். மலையக தோட்டப்புறங்களில் அதிகமாக பெந்தகோஸ்து மதத்திற்கு மத மாற்றம் செய்யப்படுகின்றனர். என். ஜி. ஓ. போன்று வேலைகளை ஆரம்பித்து பலர் தோட்டத்தொழிலாளர்களை பெத்தகோஸ்து மதத்திற்கு மாற்றி வருகின்றனர். ஒரு மதத்தை அனுஷ்டிப்பது, அதிலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறுவதெல்லாம் ஒருவரின் தனிப்பட்ட சுதந்திரமாகும். அது எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆனால் தொழிலாளர்களை ஏமாற்றி மதமாற்றம் செய்வதும் மதமாற்றம் செய்யப்பட்டவர்களை ஏனைய மதத்தவர்களுக்கு எதிராக துாண்டி அமைதியையும் ஐக்கியத்தையும் குலைப்பதையும் அனுமதிக்க முடியாது. ஏற்கனவே இந்துமத நம்பிக்கைகளால் சிறைப்படுத்தப்பட்டிருப்பவர்களை விடுவிப்பதற்கான மார்க்கத்தயன்றி மேலும் சிறைப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அங்கீகரிக்க முடியாது.

அது மட்டுமல்ல தொழிலாளர்களுக்கு விஞ்ஞானத்தையும், அறிவையும் ஊட்டுவதற்கு பதிலாக அவர்கள் மத்தியில் மூடநம்பிக்கைகளையும் விஞ்ஞானத்திற்கு முரணான பழக்கவழக்கங்களையும் மதமாற்றுபவர்கள் வளர்த்து வருகின்றனர். பிற சமயத்தவர்களை தீண்டத்தகாதவர்களாக நடத்தும்படி மதமாற்றப்பட்ட தொழிலாளர்கள் தூண்டப்படுகின்றனர். பிறரை ஏமாற்றி மதத்திற்கு சேர்க்கும்படியும் மூளைச் சலவை செய்யப்படுகின்றனர்.

நோய்க்கு மருந்து குடிக்க வேண்டாம் என்றும் நோயாளிகள் வைத்தியர்களிடம் போகக்கூடாது என்றும் போதிக்கப்படுகின்றன்.

இவ்வாறான சமூக விரோத நடவடிக்கைகள் மதநம்பிக்கைகள் என்ற பேரில் முன்னெடுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்தோட்டக்காணியில் ஏற்கனவே பேரினவாத குடியேற்றம் இருக்கிறது. இன்னும் பல குடியேற் றங்கள் ஏற்படுத்தப்படவிருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று 12 ஏப்ரல் 2005 பக்கம் 12 விலை 12/– சுழற்சி 79

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

# அமெரிக்க படைகளின் வரவை எதிர்த்து இடதுசாரிகளின் கூட்டறிக்கை

சுனாமி ஏற்படப்போவதை அறிந்திருந்தும் உரிய நேரத்தில் உரிய நாடுகளுக்கு அறிவிப்பை செய்யாத அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நயவஞ்சகத்தை சாடியும், மீட்புப்பணிப் படைகள் என்றபெயரில் அமெரிக்க மரையன் படையினர் இலங்கைக்கு வந்து நிலை கொண்டுள்ளதை எதிர்த்தும், இடதுசாரி அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் கூட்டறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளன.

அக்கூட்டறிக்கையில் புதிய- ஜனநாயக கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி உட்பட நான்கு கட்சிகளும் நான்கு முக்கிய இடதுசாரி அமைப்புகளும் பத்திற்கு மேற்பட்ட தொழிற்சங்கங்களும் கையெழுத்திட்டுள்ளன.

உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதில் 60 வீதத்திற்கு மேல் பாதிப்பிற்குள்ளான வடக்கு கிழக்கு மக்கள் அரசாங்கத்தால் புறக்கணிப்பட்டுள்ளதை வன்மையாக கண்டிக்கும் அவ்வறிக்கையில் சுனாமி பாதிப்பிலிருந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்று கூறிக்கொண்டு அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அபிலாஷைகளையன்றி வேறு உள்நோக்கங்கள் கொண்டவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீளக்கட்டியமைத்தல் நடவடிக்கைகள் விஞ்ஞானபூர்வமான அடிப்படைகளை கொண்டதாகவும் சாதாரண மக்களின் பாதுகாப்பையும் வாழ்க்கையையும் உறுதிசெய்வதாகவும் இருக்க வேண்டும். அதற்காக மக்களை முதன்மைப்படுத்துவதான இடதுசாரிகட்சிகளினதும் தொழிற்சங்கங்களினதும் வெகுஜன அமைப்புகளினதும் கூட்டமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவ்வறிக்கையில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

சுனாமிப் பாதிப்பிற்கு பிறகு இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள வெளிநாட்டு நிதி உதவி பற்றிய விபரங்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று நீதி மன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளது. காரணம் அரசாங்கத்திற்கு கிடைத்ததாகக் கூறப்படும் வெளிநாட்டு உதவிகள் பற்றி வெளியிடப்படும் தகவல்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றன. நேரத்திற்கு ஒரு தகவல் வெளியிடப்படுவதுடன் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு அதிகாரியும் வேறுவேறு தகவல்களை தெரிவிக்கின்றனர்.

உதவிகள் என்ற பேரில் இங்கு படை அனுப்பிய அமெரிக்கா பிரிட்டன் இந்தியா பாகிஸ்தான் என்பன அவற்றினுடைய இராணுவ பொருளாதார உள் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின்றன. அமெரிக்கா அதன் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுக்க இந்து சமுத்திர பிராந்தியத்தில் தமது அடிப்படைகளை பதித்துக்கொள் வதற்கு சுனாமிப் பாதிப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டது. இந்தியா அதன் பிராந்திய மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இலங்கை அரசாங்கம் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே சுனாமிப் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அதாவது நிதியுதவி செய்ய முன்வரும் நாடுகளினதும் நிறுவனங்களினதும் அக்கறைகளையும் உள்நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் நிபந்தனைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் கொண்டிருப்பதாகவே சுனாமி உதவிகள் இருக்கின்றன.

இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புகளை ஆளும் வர்க்கத்தினர் அவர்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்திக்கொள்கின்றனர். பஞ்சப்பட்டுப்போயிருந்த இலங் கை ஆளும் வர்க்கத்தினருக்கும் மோசடிக் காரர்களுக்கும் குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டு உதவிகள் என்ற பெயரில் பணம் கிடைத்திருக்கிறது. இன மத வேறுபாடுகளை கடந்து சுனாமி தாக்கியிருப்பதால் இன மத பேதமற்ற மீளமைப்புகளை மேற்கொள்ளப்போவதாக அரசாங்கம் பிரசாரம் செய்கின்றது. ஆனால் வடக்கு கிழக்கில் உடனடி நிவாரணங்களை மேற் கொள்வதற்கே தயக்கம் காட்டியது.

வடக்கு கிழக்கிலும் மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விடுதலை புலிகள் இயக்கத்தையும் உள்ளடக்கிய பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தவும் அரசாங்கம் தயக்கம் காட்டிவருகிறது. பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி வடக்கு கிழக்கில் மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தின் பேரினவாத நிலைப்பாடு தடையாக இருக்கிறது. எனினும் பொருளாதார ரீதியாக இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு சுனாமிப் பாதிப்புகள் சாதகமாக அமைந்துவிட்டது. அமெரிக்காவிற்கு செம்டெம்பர் 11 இற்கு பிறகு என்ற நிலைமைபோன்று டிசம்பர் 26 ற்கு பிறகு என்ற நிலைமை சாதகமாகவே அமைந்துவிட்டது. சுனாமிப் பாதிப்பை மையமாகக் கொண்டு தென்னாசியப் பகுதிகளில் அமெரிக்கா அதன் தலையீட்டை செய்ய வாய்ப்பேற்பட்டுள்ளது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ச் புஷ்சும், கிளிங்டனும் இங்கு வந்து சென்றனர். இலங்கையில் அதன் பொருளாதாரரீதியான விஸ்தரிப்புகளை செய்வதற்கு இந்தியாவும் நிலைமைகளை சாதகமாக்கிக் கொண்டுள்ளது.

இந்நிலைமையில் அரசாங்கத்தின் பிரதான பங்காளியாக இருக்கும் ஜே.வி.பி. (இடதுசாரி தோற்றத்தை கொண்டிருக்கும்) அமெரிக்கா ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாக இல்லை. அது என்றுமில்லாதவாறு இந்தியாவின் தாசராகிவிட்டது. இந்தியா இல்லாவிட்டால் இங்குஎதுவும் நடக்காது என்று கூறுமளவிற்கு அதன் தலைவர்கள் இந்திய மேலாதிக்கத்திற்கு தலைவணங்கியுள்ளனர். அரசாங்கத்தின் இன்னொரு இடதுசாரி கட்சி எனப்படும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அமெரிக்கப் படைகள் இலங்கையில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே இங்கு வந்திருப்பதாக வெட்கமின்றிக் கூறிக் கொண்டது.

இந்நிலையில் சுனாமியைப் பாவித்து இலங்கையில் ஆக்கிரமிப்பை செய்யும் வகையில் இங்கு வந்திருக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் வேறு அந்நிய தலையீடுகளுக்கும் எதிராக வெளியிடப்பட்டுள்ள இடதுசாரி கட்சிகள் அமைப்புகள் தொழிற்சங்கங்களுடைய மேற்படி கூட்டறிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் இந்நாட்டு விவசாயிகள் தொழிலாளர்கள் அடக்கப்படும் தேசிய இனங்களின் சார்பில் சுனாமிக்குப் பின்னான அரசியல் நிகழ்ச்சி நிரலும் வேலைத்திட்டமும் செயற்பாடும் அவசியமாகிறது. அதன் மூலம் பலவீனமானதாகக் காணப்படும் நேர்மையான இடதுசாரி ஜனநாயக சக்திகளின் முன் நோக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என நம்புகின்றோம்.

–ஆசிரியர் குழு–

# தாராள- தனியார் - பூகோளமயத்தால் இலங்கையில் மீண்டும் கொலனித்துவம்

தாயையும் தாரத்தையும் விற்றுப் பிழைப்பு நடாத்த முற்படும் எவரையும் சமூகம் மனிதர்களாக மதிப்பதில்லை. அத்தகையோரை மனித மிருகங்களாகவே கணிப்பிட்டு மக்கள் காறி உமிழ்ந்து நிராகரித்துக் கொள்வர். ஏறத்தாள அவ் வகையான விற்றுப் பிழைப்பு நடாத்தும் செயல்களையே ஆட்சி அதிகாரத்தில் மாறி மாறி இருந்து வரும் ஆளும் வர்க்க ஆதிக்க கட்சிகளும் அவற்றின் ஆண்ட பரம்பரை தலைமைகளும் செய்து வருகின்றன. நாட்டு வளங்களையும் மக்களின் உழைப்பு சக்தியையும் உற்பத்தித்துறைகளையும் மீண்டும் முதலாளித்துவ ஏகாதிபத்திய பல்தேசியக் கம்பனிகளுக்கும் சுரண்டல் கொள்ளையிடுவோருக்கும் விற்றுப் பிழைப்பு நடாத்தும் திட்டங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றனர். இது நாட்டை மறு கொலனித்துவமாக்கி ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியான நவ கொலனித்துவ அமைப்பு முறைக்குள் நாட்டையும் மக்களையும் இறுக்கிக் கொள்வதாகும்.

இலங்கை இரண்டாயிரத்து ஐந்நூறு வருடகால வரலாற்றுத் தொடர்ச்சியுடைய நாடாக இருந்து வந்துள்ளது. பல்லின பல மொழி மதங்களைக் கொண்ட இந்நாடு அடிப்படையில் ஒரு விவசாய நாடாகும். நிலவுடமையின் கீழான வர்க்க முரண்பாடுகளும் தென்னிந்தியப் படையெடுப்புகளிலான இனத்துவ விரிசல்களும் சாதிய அமைப்பு முறை கொண்ட ஏற்றத்தாழ்வுகளும் அவற்றின் அடியான ஒடுக்குமுறைகளும் இருந்து வந்த போதிலும் இலங்கை ஒரு நாடாகத் தனது தனித்துவங்களை பேணியும் வளர்த்தும் வந்துள்ளது. இவற்றில் மக்களின் பங்களிப்பே முதன்மையானதாகும்.

இத்தகைய இலங்கையில் வெள்ளை ஆதிக்க ஐரோப்பிய கொலனித்துவவாதிகள் கால் பதித்து நேரடியாக 450 ஆண்டுகளாக கொலனியாதிக்கம் செய்து வந்துள்ளனர். போர்த்துக்கேயர் டச்சுக்காரர் பின்பு பிரித்தானியர்கள் இலங்கையை ஆண்டு வந்திருக்கிறார்கள். பிரித்தானியர் 150 ஆண்டுகளாகத் தமது துப்பாக்கி பீரங்கி முனைகளில் இலங்கை மக்களை வைத்து வளங்களைக் கொள்ளையிட்டு சுரண்டலையும் அரசியல் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்தி வந்துள்ளார்கள். இத்தகைய வெள்ளை ஆதிக்க வெறிபிடித்த கொலனித்துவ வாதிகளுக்கு சேவகம் செய்து சொத்து சுகங்களை அனுபவித்து வந்தவர்கள் இலங்கையின் நிலவுடமை வழி வந்த சிங்கள தமிழ் உயர் சாதிய மேட்டுக்குடியினராவர்.

இவ்வாறு அடிமை விசுவாசிகளாக இருந்து வந்த பரம்பரையினரிடம் தான் 1948ல் பிரித்தானிய வெள்ளை எசமானர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைமாற்றிக் கொடுத்து விட்டுச் சென்றனர். ஆனால் அக் கொலனித்துவ வாதிகளின் பொருளாதார அடிப்படைகளும் அதன் சுரண்டல் முறைமைகளும் லாபங்களும் தொடர்ந்தும் அவர்களுக்கே உரித்தானதாக இருந்தும் வந்தது. இந் நிலை தொடரப்படுவதை அரசியல் விழிப்படைந்து வந்த இலங்கை மக்கள் எதிர்க்க ஆரம்பித்தனர். சர்வ தேசிய சூழலின் சோஷலிசப்போக்குகளால் உலக மக்கள் ஈர்க்கப்பட்டனர். அதன் பிரதிபலிப்பாகக் கொலனித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்புகள் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தன.

இத்தகைய பின்புலத்திலே இலங்கையில் தேசிய பொருளாதாரம் தேசிய பாதுகாப்பு தேசிய நலன்கள் தேசியப் பண்பாடு சுய சார்பு சொந்தக் கால்களில் எழுந்து நிற்றல் என்பன முன் வைக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டன. அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டுத் துறைகளில் சுதந்திரம் சுயாதிபத்தியம் தனித்துவம் பேணப்படுவதன் பாதையில் தேசிய முதலாளித்துவ சக்திகள் மக்கள் சார்பாக எழுச்சி பெற்று ஆட்சி அதிகாரத்திற்கும் வந்தன. இது 1956ல் ஆண்டுடன் பிறப்பெடுத்து முன்னோக்கிச் சென்ற வரலாற்றுத் திருப்பு முனையாகிக் கொண்டது. அன்றைய கொலனித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்பு உலகப் பொது நீரோட்டத்தில் மேற்கூறிய தேசிய முதலாளித்துவப் போக்கானது மிகவும் முற்போக்கானதாய் அமைந்து கொண்டது. ஆனால் இத்தகைய பொதுத் தேசிய நீரோட்டத்தில் இனவாதம் பேசுதற்குரிய பிரதான பொருளாகி ஐக்கியப்படுத்தப்பட்வேண்டிய தமிழ் முஸ்லீம் மலையக இனங்கள் புறக்கணிக்கப்பட்டன. அதன் எதிர் விளைவை இன்று முழு நாடும் மக்களும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றமை

**வெகுஜனன்**

மற்றொரு முக்கிய அம்சமாகும்.

இத்தேசிய முதலாளித்துவ எழுச்சிக் காலத்தில் இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளின் இடையிறாத வற்புறுத்தல்கள் மத்தியில் கொலனித்துவ சுரண்டல் துறைகள் யாவும் தேசிய மயமாக்கப்பட்டு அரசாங்க பொதுத்துறைகளாக மாற்றப்பட்டன. புதிய துறைகள் அரசாங்க கட்டுப்பாடு மேற்பார்வையிலான கூட்டுத்தாபனங்களாக்கப்பட்டன. நாட்டின் அந்நியச் செலவாணியைத் தேடித்தந்து கொண்டிருந்த பெருந்தோட்டத் துறை தொட்டு வங்கிகள் துறைமுகங்கள் உள்ளிட்ட அந்நிய கொலனித்துவ வாதிகளிடமிருந்து வந்த யாவும் அரசாங்கத்தால் ஒன்றன்பின் ஒன்றாகப் பொறுப்பேற்கப்பட்டன. உள்நாட்டில் தனியார் போக்குவரத்து தேசிய மயமாக்கப்பட்டது. தனியார் பாடசாலைகள் அரசால் கையேற்கப்பட்டன. மக்கள் பங்களிப்புடன் கூட்டுறவுக் கொள்கை பலம் பெற்றது. அந்நிய இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகி உள்ளூர் உற்பத்திகள் ஊக்கம் பெற்றன. விவசாயமும் சிறுகைத்தொழில்களும் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தி தேசிய பொருளாதாரத்திற்குப் பங்களித்தன. சோஷலிச நாடுகளின் உதவிகளுடன் பெரும் தொழிற்சாலைகள் அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டன. தேசிய பொருளாதாரம் முன்னோக்கிய நகர்வுகளைக் கொண்டிருந்தது.

> நாட்டு வளங்களையும் மக்களின் உழைப்பு சக்தியையும் உற் பத்தித்துறைகளையும் மீண்டும் முதலாளித்துவ ஏகாதிபத்திய பல்தேசியக் கம்பனிகளுக்கும் சுரண்டல் கொள்ளையிடு வோருக்கும் விற்றுப்பிழைப்பு நடாத்தும் திட்டங்களையும் செயற்பாடுகளையும் ஆளும் வர்க்க ஆண்டபரம்பரைத் தலைமைகள் முன்னெடுத்து வருகின்றன.

1977ம் ஆண்டு வரை கொலனித்துவத் பிடிகளில் இருந்து வந்த பொருளதாரத்தை விடுவித்து வந்த போக்கிற்கு ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி முடிவு கட்டியது. ஜே.ஆர் அமெரிக்க அடிவருடியாக இருந்தவர். 1977ல் பதவிக்கு வந்து தனக்கிருந்த ஆறில் ஐந்து பாராளுமன்றப் பெரும்பான்மை மூலம் அரசியலமைப்பை மாற்றி தன்னைத் தானே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக்கியும் கொண்டார். அதன் ஊடாக அமெரிக்க ஏகாதிபத்தியம் வகுத்துக் கொண்ட உலகப் பொருளாதார ஒழுங்கமைப்புக்கான நிகழ்ச்சித்திட்டத்தை இலங்கையில் நிறைவேற்றும் முகவராக ஜே.ஆர். ஆகிக் கொண்டார். சோவியத் யூனியனின் பின்னடைவும் வீழ்ச்சியும் சோஷலிசத்திற்கு பலவீனத்தைக் கொண்டு வந்தது. இந்நிலையிலேயே எண்பதுகளின் ஆரம்பத்துடன் தாராளமய தனியார் மய பூகோளமயமாதல் நிகழ்ச்சித்திட்டம் இலங்கையிலும் புகுத்தப்பட்டது. அரசாங்கத்தால் பொதுத்துறைகளாகவும் கூட்டுத்தாபனங்களாகவும் முன்னெடுக்கப்பட்டுவந்த யாவும் ஒவ்வொன்றாக தனியார் மயமாக்கப்பட்டு வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகளுக்கும் முதலாளித்துவ நிறுவனங்களுக்கும் கையளிக்கப்பட்டன. முகாமைத்துவம் மறுசீரமைப்பு நிர்வாக மேற்பார்வை என்ற பெயர்களில் அவை தனியார் மயப்படுத்தப்பட்டன. கடந்த கால்நூற்றாண்டு கால ஐக்கிய தேசியகட்சி ஆட்சியிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சியிலும் ஜே.ஆர். ஆரம்பித்துவைத்த தாராள தனியார் மயம் எவ்வித தடங்கலும் இன்றித் தொடராக முன்னெடுக்கப்பட்டு வந்தள்ளன. இவை மீண்டும் நாட்டை மறு கொலனித்துவமாக்கும் செயற்பாடாகவே முன் சென்றது.

பெரும் தோட்டத்துறை தொடக்கம் இப்பொழுது பிரச்சினையாகி நிற்கும் பெற்றோலியத்துறை வரையிலான நூற்றுக்கு மேற்பட்ட அரசாங்க பொதுத் துறைகள் தனியார் மயமாக்கப்பட்டு பல்தேசியக் கம்பனிகளிடமும் முதலாளித்துவ வாதிகளிடமும் கையளிக்கப்பட்டு விட்டன. எஞ்சியிருக்கும் அரசாங்க பொதுத் துறைகளையும் தனியார் மயப்படுத்துவதே இன்றைய ஆட்சியினது போக்காக இருக்கிறது. அவற்றுள் மிகவும் முக்கிய மானவையாகவும் நேரடியாக மக்களோடு சம்மந்தமுடையதாகவும் இருந்து வரும் கல்வி. சுகாதாரம் புகையிரதபோக்குவரத்து அரச வங்கிகள் மின்சாரம் துறைமுகம் நீர்ப்பாவனை மற்றும் வளமுள்ள நிலங்களும் நீர் நிலத்தடி கனியவளங்களுமாகும்.

ஏற்கனவே தனியார் மயத்தைச் செய்து தாராள பொருளாதாரக் கொள்கைத்திட்டங்களை முன்னெடுப்பதை மக்களின் கவனத்திலிருந்து திசை திருப்பவே ஜே.ஆர் தேசிய இனப் பிரச்சினையை கொடிய பேரினவாத யுத்தமாக்கிக் கொண்டார். அதனையே சந்திரிகாவும் முன்னெடுத்தார். இப்போது ஒரு தற்காலிக புரிந்துணர்வு யுத்தம் நிறுத்தச் சூழலில் தனியார் மயப்படுத்தலுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் பரவி வருகின்றமை கவனத்திற்குரியவையாகும். உண்மையில் தாராளமயம் தனியார் மயம் என்பன ஏகாதிபத்திய பூகோளமயமாதல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மறு கொலனித்துவ மயமாக்கும் போக்கேயாகும். இது இலங்கையில் மட்டுமன்றி மூன்றாம் உலக நாடுகளை நிர்ப்பத்தித்து திணிக்கும் ஏகாதிபத்திய ஆதிக்கப் போக்குமாகும். ஏகாதிபத்திய மறு கொலனியாக்கத்திற்கு நாட்டையும் மக்களையும் விற்றுப் பிழைப்பு நடாத்தி தமது ஆண்ட பரம்பரை மேட்டுக்குடி சொத்து சுகபோகங்களைப் பாதுகாத்து நிற்கும் ஆளும் வர்க்கங்களுக்கு எதிராகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் பல்வேறு தளங்களிலும் தொழிலளார்கள் விவசாயிகள் உழைக்கும் அறிவு ஜீவிகள் உட்பட சகல தேசிய இனங்களும் ஒன்றினைந்து போராட வேண்டியது இன்றைய அதிமுக்கிய தேவையாகும்.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை அரசியலில்

# விஜேவீர முதல் வீரவன்ஸ வரை

ஜனதா விமுக்தி பெரமுனயை ஒரு இடதுசாரிக் கட்சியாக மட்டுமன்றி ஒரு மாக்ஸியக் கட்சியாகவும் காட்டுவதில் அந்தக் கட்சிக்கும் இல்லாத அளவு அக்கறை மாக்ஸிய விரோதிகளிடம் இருக்கிறது. தீவிர யூ என். பி. ஆதரவு ஏடான சண்டே லீடர் போன்றவை மிகக் கவனமாக ஜே. வி. பியை ஒரு மாக்ஸியப் புரட்சிகர இயக்கம் என்றே குறிப்பிட்டு வருகிறது. சண்டே ற்றைம்ஸ் போன்ற முதலாளிய ஏடுகளில் பல வலதுசாரிப் பக்தி எழுத்தாளர்களும் அதே நோக்குடன் ஜே. வி. பியை ஒரு மாக்ஸிய அமைப்பாகச் சித்தரிப்பதை நாம் காணலாம். தமிழ்ப் பத்திரிகைகளும் இதற்கு விதிவிலக்கல்ல இலங்கை இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றின் முக்கியமான பகுதியான அதன் வளர்ச்சியையும் உச்ச நிலையையும் அடையாளப்படுத்திய காலம், சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகவும் சமூக நீதிக்காகவும் அது துணிந்து நின்ற காலமேயாகும். பாராளுமன்றச் சேற்றில் சமசமாஜக் கட்சியும் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட்டுகள் எனப்பட்ட திரிபுவாதக் கட்சியும் அமிழ்ந்து சில ஆண்டுகளின் பின்னரே பேரினவாதத்துடன் அவை சமரசம் செய்தன. நேர்மையான இடதுசாரிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சமூக நீதி, இனங்களிடையி லான சமத்துவம் ஆகிய விடயங்களில் என்றுமே விட்டுக் கொடுத்தவர்களல்ல. இது வலதுசாரிப்பத்திரிகையாளர்களும் வலிந்து இடதுசாரிகளைத் தாக்குகிற எழுத்தாளர்களும் அறியாததல்ல.



இடதுசாரிகளை எப்படி அடையாளப்படுத்தினால் அவர்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்த இயலுமோ அப்படியெல்லாம் அவர்களை அடையாளப்படுத்துவதில் மாக்ஸிய விரோதிகள் கண்ணுங்கருத்துமாக இருந்து வந்திருந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் தமிழ், மக்களிடம் பாராளுமன்ற இடதுசாரிகளைக் காட்டி இப்படிப்பட்டவர்களே இடதுசாரிகள் என்று தமிழ்த் தேசியவாதிகள் பிரசாரம் செய்தனர். குறிப்பாகத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையை வைத்துப் பாராளுமன்ற ஆசனங்களைப் பெற விரும்பியவர்களுக்கு இது மிகவும் தேவைப்பட்டது. தமிழ்த் தேசியவாதத்தின் பேரால் பிழைப்பு நடத்துகிற சில விஷமிகட்கு இப்போது ஜே. வி. பி. மிகவும் வசதியான ஒரு அமைப்பாகிவிட்டது. ஜே. வி. பி. என்பது குறுகிய தேசியவாத நோக்கங்களையும் சிறு முதலாளியப் பார்வையையும் கொண்ட ஒரு அமைப்பு என்பது 1969-70 அளவிலேயே மாக்ஸிய லெனினியவாதிகளால் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டவிடயம்.

1980களில் எந்த விதமாகச் சில தமிழ்த் தேசியப் போராளிகளின் அமைப்புக்கள் தம்மை மாக்ஸியவாதிகள் என்று கூறிக்கொண்டனவோ, அந்தவிதமாகவே ஜே. வி. பியும் தன்னை அறிமுகப்படுத்தியது. மேலோட்டமான முறையில் சில சுலோகங்களை முன்னிறுத்தி ஒரு விதமான மாக்ஸிய ஆய்வோ அணுகுமுறையோ இல்லாமற் சிங்களப் பேரினவாதத்துக்கு மாக்ஸிய முகத்திரை அணிவித்ததன் மூலம் ஜே. வி. பி. விரக்தியடைந்த சிங்கள வாலிபர்களைக் கவர முற்பட்டது. அதன் தலைவரான விஜேவீர, தோழர் சண்முக தாசன் தலைமையிலான மார்க்ஸிய லெனினிசக் கம்யூனிஸ்ற் கட்சியில் நுழைந்து, பேரினவாத நோக்கில் செயற்பட்டு, 1966ம் ஆண்டு பேரினவாத ஊர்வலத்தில் பங்கு பற்றியதற்காகக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டவராவார். கட்சிக்குள்ளிருந்த சில இளைஞர்கள் அவரால் தவறாக வழி நடத்தப்பட்டு அவருடன் போனார்கள். சோவியத் சார்பு கம்யூனிஸ்றகட்சிப் பின்னணியை உடைய மஹிந்த விஜேசேகர போன்றவர்களும் அவருடன் இணைந்தனர்.

மாக்ஸியம் பற்றிய ஜே. வி. பியின் அணுகுமுறையை விளங்கிக் கொள்வதென்றால், அவர்கள் எப்படி ஐந்தே விரிவுரைகளில் இலங்கையின் வரலாறு, பொருளாதாரம் என்பனவற்றையும் மாக்ஸியத்தையும் கற்பித்தார்கள் என்பதிலிருந்தே விளங்கிக் கொள்ளலாம். 1960களில் எழுச்சி பெற்ற இந்திய விஸ்தரிப்புவாதம் பற்றித் தோழர் சண்முகதாசன் மூலம் அறிந்த ஜே. வி. பி தலைவர் விஜேவீர, அதே கருத்தைத் திரித்து மலையகத் தமிழர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கரங்கள் என்று விளக்கினார். அவர்களின் ஐந்து விரிவுரைகளில் இந்திய விஸ்தரிப்பு வாதம் என்பது ஒன்றாகும்.

ஜே. வி. பியின் வேலைத்திட்டமும் அரசியற்பணிகளும் முழுக்கச் சிங்களப் பெரும்பான்மை மக்களை மட்டுமே தளமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டது. மக்கள் யுத்தம், வெகுசன அரசியல், தொழிலாளி வர்க்கத் தலைமை என்பனவற்றை முற்றாகவே நிராகரித்த ஜே. வி. பி. லத்தின் அமெரிக்காவில் சே குவேரா பயன்படுத்திய தந்திரோபாயத்தைப் பயன்படுத்தப் போவதாகக் கூறிக் கொண்டு ஆயுதமேந்திய குழுக்கள் மூலம் அரச அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்று கனவு கண்டது. சே குவேராவின் இன, மத, தேசிய வேறுபாடு கடந்த உலக நோக்கை மட்டும் ஜே. வி. பி. அறிய விரும்பவில்லை.

1970 தரப்படுத்தலை ஜே. வி. பி. கண்டிக்க மறுத்ததும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும். ஜே. வி. பி. பற்றிய கவர்ச்சி ஒரு சில தமிழ் இளைஞர்களிடம் இருந்த போதும், ஜே. வி. பி. தமிழ்ச் சமூகத்தின் பொதுவான பிரச்சனைகள் பற்றியோ அதற்குள்ளான சமூக ஒடுக்குமுறைகள் பற்றியோ என்றும் அக்கறை காட்டவில்லை. எனினும் சில தமிழ் மாக்ஸிய விரோதிகள் ஜே. வி. பியினரையே உண்மையான மாக்ஸியப் புரட்சிவாதிகளாக அன்றும் இன்றுங்கூடக் காட்டமுயல்வதன் நோக்கத்தை நாம் அறிவது கடினமில்லை.

ஜே. வி. பி யின் 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் தோல்விக்கு அதன் தொழிலாளிவர்க்க விரோத நிலைப்பாடு, வெகுசன அரசியலை மறுத்து ஆயுதக் குழுக்களின் அரசியலை வற்புறுத்தியது. அரச இயந்திரம் பற்றிய தெளிவீனம் போன்ற பல காரணங்களைக் கூறலாம். இவை எல்லாமே மாக்ஸியத்தை அறிய விரும்பாமல் சனரஞ்சக அரசியலை மாக்ஸியத்தின் பேரால் முன்னெடுத்ததன் விளைவுகள் தாம். 1960களில் பாராளுமன்ற இடதுசாரிகளின் துரோகங்களும் தென்னிலங்கையின் இளைஞர்களிடையே மாக்ஸிய அறிவும் வாசிப்பும் போதாமலிருந்ததும் ஜே. வி. பிக்கு வசதியாகிவிட்டது.

ஜே. வி. பியின் தலைமையில் லயனல் போப்பகே போன்று ஓரளவு மாக்ஸியத் தெளிவுள்ளவர்கள் இருந்தாலும் அவர்களும் விஜேவீரவின் இனவாத அரசியலை அனுசரித்தே நடந்தனர். 1971 கிளர்ச்சியின் தோல்வியின் பின்பு பழைய தலைமையிற் பெரும் பகுதி ஜே. வி. பி யினின்று விலகிவிட்டது. பல சிறு குழுக்கள் உருவாயின. எனினும் என்றுமே தன்னை ஒரு மாக்ஸிய- லெனியக் கட்சியாகவோ வெகுசன இயக்கமாகவோ உருவாக்கிக் கொள்ளவில்லை. இதனால் ஜே. வி.பிக்குப் பின்னால் அணி திரண்ட பல நல்ல சக்திகள் சிதறடிக்கப்பட்டன.

1977க்குப் பின்பான ஜே. வி. பி யின் அடுத்த வளர்ச்சிக்கு ஜே. ஆர். ஜயவர்த்தனவும் பாலாதம்பு என்கிற முன்னாள் ட்றொட்ஸ்கிய தொழிற்சங்கவாதியும் மிகவும் உதவினர். யூ என். பியின் அரசியல் எதிரிகளின் கூட்டங்களைக் குழப்புவதற்கு ஜே. வி. பியின் குண்டர் படைகள் பயன்பட்டன. பாராளுமன்ற இடதுசாரிகளோ, ஸ்ரீ. ல. சு. கட்சியோ பெரிய பொதுக்கூட்டம் எதையும் நடத்த இயலாத விதமாக ஜே. வி. பியினர் யூ என். பி அரசாங்கத்தின் ஆசியுடனும் அனுசரணையுடனும் கூட்டங்களிற் குழப்பம் விளைவித்தனர்.

ஜே. வி. பி - யூ என். பி ஒத்துழைப்பு 1980க்குப் பின்பு பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்கியது. யூ என். பி. ஆட்சி ஜே. வி. பியை மேலும் வளரவிடாமல் மறிப்பதில் கவனங்காட்டியது. அதே வேளை ஜே. வி. பி. தனக்கான ஒரு புதிய அரசியல் தளத்தை விரிவுபடுத்தத் தொடங்கியது. ஸ்ரீ. ல. சு. க, பாராளுமன்ற இடதுசாரிகள் போன்றோரின் நலிவு ஜே. வி. பிக்குச் சாதகமாக இருந்தது. எனினும் ஜே. வி. பி. தனது பேரினவாத அரசியலைக் கைவிடுவதாக இல்லை. றோஹண விஜேவீர 1982 சனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போது, யாழ்ப்பாணஞ் சென்று தமிழீழத்தை ஏற்பதாகச் சொல்லித் தமிழ் மக்களது வாக்குகளைப் பெறலாம் என்று நினைத்திருந்தார். ஆனால் அவரது உரை தென்னிலங்கை ஊடகங்களில் வெளியான உடனேயே தான் உயிருடன் உள்ளவரை பிரிவினையை ஏற்கமாட்டேன் என்று பிரகடனம் செய்தார். இந்த விதமான ஏமாற்றை விட்டால், ஜே. வி. பி. உண்மையில் தமிழ் மக்களது சுயநிர்ணயத்தை என்றுமே மதிக்கவில்லை. தேசிய இனப்பிரச்சனைக்குச் சுமுகமான தீர்வு பற்றி 1980களின் நடுப்பகுதியில் லயனல் போப்பகே முன்வைத்த ஆலோசனைகள் ஜே. வி. பியின் தலைமையால் மறுக்கப்பட்டன. போப்பகே அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

1983க்குப் பின்பான இனஒழிப்புப் போரும் விடுதலைப் போராட்டச் சூழலும் ஜே. வி. பியின் வெவ்வேறு முகங்களைக் காட்டின. புளொட் போன்ற அமைப்புக்களுடைய அனுசரணையுடன் ஜே. வி. பி இந்தியாவில் தனது உறுப்பினர்கட்கு ஆயுதப் பயிற்சி வழங்குவித்ததாகவும் அக்காலத்திற் கூறப்பட்டது. எனினும் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு வழங்கப்படுவதை ஜே. வி. பி ஏற்க ஆயத்தமாக இருக்கவில்லை. 1987ல் இந்திய - இலங்கை உடன்படிக்கை ஏற்பட்ட போது ஜே. வி. பி. அதை எதிர்த்தது. அந்த எதிர்ப்பில் இந்தியா, இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கையின் இறைமைக்குப் பங்கமாக விதித்த நிபந்தனைகள் எதைப் பற்றியும் ஜே. வி. பி. பேசவில்லை. வடக்கு- கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டதையே ஜே. வி. பி. வன்மையாக எதிர்த்தது. 1987 முதல் 1989 வரை ஜே. வி. பி. தன்னை ஒரு பச்சை இனவாதக் கட்சியாக அடையாளங் காட்டியது. அதன் வெகுசன அமைப்பான டி. ஜே. வி (தேசபக்த மக்கள் இயக்கம்) மூலம் பல அரசியற் படுகொலைகளை நடத்தியது. இக்காலகட்டத்தில் ஜே. வி. பி தீவிரமான இந்திய விரோத அரசியலை முன்னெடுத்ததும் கவனிக்க வேண்டிய விடயமாகும். இக்காலகட்டத்தில் ஜே. வி. பி. எந்த வகையிலும் தனது செயல்களிலோ அறிக்கைகளிலோ எவ்விதமான மாக்ஸிய அடையாளத்தையும் காட்டிக் கொள்ளவில்லை.

1989ல் பிரேமதாச சனாதிபதியான பிறகு எடுத்த மனிதாபிமானமற்ற கடும் நடவடிக்கைகளின் விளைவாக ஜே. வி. பி. பெரும் அழிவைச் சந்தித்ததுடன் விஜேவீர உட்பட சோமவன்ஸ என்பவர் தவிர்ந்த முழு ஜே. வி. பி தலைமைப்பீடமும் கொன்றொழிக்கப்பட்டது. 1994ல் யூ என். பி ஆட்சி மக்களால் அகற்றப்பட்ட பின்பு மீளக்கட்டியெழுப்பப்பட்ட கட்சியானது 1971 கிளர்ச்சியுடன் தொடர்பற்ற 1987- 89 கால கட்டத்தில் கட்சியின் கீழ் நிலையில் இருந்திருக்கக் கூடியவர்களை கொண்ட ஒரு தலைமையையே கொண்டிருந்தது. அதற்குள் பேரளவில் மாக்ஸியம் பேசுகிற ஒரு சிலர் இருந்தாலும், அடிப்படையில் அதன் நிலைப்பாடு சிங்களப் பேரினவாதம் சார்ந்ததே. இரண்டு முதலாளியக் கட்சிகளும் ஊக்குவித்து வளர்த்த பேரினவாத அரசியலில் தனக்கு ஆதாயம் தேடுவதற்கும் பேரினவாதத்தை மேலும் வளர்ப்பதற்கும் ஜே. வி. பி திட்ட மிட்டுச் செயலாற்றத் தொடங்கியது. எனினும், விரக்கிரபாகு கருணாரத்ன என்ற ட்றொட்ஸ்கிவாதி ஜே. வி. பியின் பேரினவாதம் திருத்தப்படக் கூடியது என்றும் ஜே. வி. பிக்குள் ஒரு மாக்ஸியத் தளம் உள்ளது என்றும் வாதித்தார். ஜே. வி. பி. யைப் பயன்படுத்தித் தனக்கு ஒரு பாராளுமன்ற ஆசனத்தை வெல்லுகிற கனவு 1994ல் தோல்விகண்டதும் போதாமல் அவரது பதவி ஆசையைப் பயன்படுத்தி ஜே. வி. பி. புதிய இடதுசாரி முன்னணியை அவரைக் கொண்டே சிதைப்பித்தது.

ஜே. வி. பி. என்றுமே இடதுசாரி ஒற்றுமையை வற்புறுத்திய கட்சியல்ல. மாக்ஸியத் தலைமைகளை ஓரங்கட்டி இடதுசாரித் தோற்றத்துடன் பேரினவாத அரசியலை முன்னெடுத்துப் பாராளுமன்ற அதிகாரத்தைப் பிடிப்பதே 1977க்குப் பின்பான அதன் இலக்காக இருந்தது.

1994ல் தேர்தலில் வெற்றி பெற்ற பொதுசன முன்னணியின் தவறுகளால் தேசிய இனப்பிரச்சனை மேலும் மோசமாகியது. 1999ல் இடதுசாரி ஒற்றுமையையும் போர் எதிர்ப்பையும் முன்னெடுத்து இடதுசாரி இயக்கத்தை மீள வலுப்படுத்தும் முயற்சிகட்கு விக்கிரமபாகு கருணாரத்ன மூலம் ஜே. வி. பி ஆப்பு வைத்த பிறகு யூ என். பிக்கும் ஸ்ரீ. ல. சு. கட்சிக்கும் மாற்றான மூன்றாவது பெரிய சக்தியாக ஜே. வி. பி தன்னை அடையாளப்படுத்திக் கொண்டது. இக்கால இடைவெளியில் நடுத்தர வர்க்கத்தினரிடம் வலுப்பெற்று வந்த தீவிர சிங்களப் பேரினவாதத்தை அரசியலாக முன்னெடுக்கும் அமைப்பாக சிஹல உறுமய உருவானது.

அப்போது ஒரு மாக்ஸியக்கட்சி சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நின்றிருக்கும். ஆனால் ஜே. வி. பியோ நேர்மாறான திசையிற்சென்று சிஹல உறுமயவை மீறிய பேரினவாதக் கட்சியாகத் தன்னை அடையாளப்படுத்த முற்பட்டது. இந்தச் சூழலிலேயே, 2000ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும், அதைவிட முக்கியமாக 2001ம் ஆண்டுத் தேர்தலிலும் ஜே. வி. பி. ஒரு சிங்கள பௌத்த அடையாளத்தைத் தனக்கு வழங்கிக் கொண்டது.

போர்மூலமே தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு என்ற கொள்கையில், சிஹல உறுமய மட்டுமே யூ என். பியையும் ஸ்ரீ. ல. சு. கட்சியையும்விட வித்தியாசமாக நின்றன. 2002ம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்தமும் புரிந்துணர்வு உடன்படிக்கையும் ஜே. வி. பி யை மேலும் பேரினவாதத்தின் திசையிலேயே தள்ளின. இதன் விளைவாக ஜே. வி. பியின் சிங்கள பௌத்த இனவெறியின் முகமான விமல் வீரவன்ஸ இன்று அக்கட்சியின் பிரதான பேச்சாளராக உள்ளார். இது தற்செயலானதல்ல. ஜே. வி.பி இந்த முகத்தையே நாட்டின் மக்களுக்குக் காட்ட விரும்புகிறது.

கடந்த மூன்றாண்டுக் காலமாக அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க விடாமல் தடுப்பதில் ஜே. வி. பி. முழு மூச்சாக உள்ளது. 2004 இறுதியில் நடத்த சுனாமிப் பேரழிவின் பின்பு ஜே. வி. பி தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குக் கூடத் தடைகளை விதிக்கிறநோக்கிலும் தமிழ் முஸ்லீம் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை நடைமுறைப்படு த்தும் நோக்கிலும் செயற்பட்டு இனக்குரோதத்தைக் கிளறிவிடுகிறது.

ஜே. வி. பி யின் முப்பத்தேழாண்டுக் கால வரலாறு நமக்குச் சொல்லுவது என்ன? மாக்ஸிய முகமூடியுடன் அரசியலைத் தொடங்கிய ஜே. வி. பியின் சீரழிவு தவிர்க்க இயலாது. அதன் தத்துவார்த்தப் பாதையில் கீழ் நோக்கிச் சென்றது. ஜே. வி. பியின் சீரழிவைத் தனிமனிதர்களது சீரழிவுடன் ஒப்பிட இயலாது. இது அமைப்பு அடிப்படையிலான ஒரு சீரழிவாகும். சமசமாஜக் கட்சியினதும் சோவியத் சார்பு திரிபுவாதிகளதும் சீரழிவு பாராளுமன்றச் சறுக்குப் பாதையில் அடிவைத்ததால் ஏற்பட்டது. அக்கட்சிகளின் கொள்கைகள் பேரினவாத அடிப்படையில் வகுக்கப்பட்டவையல்ல.ஆனால் அவர்கள் தேசிய முதலாளி வர்க்கத்துடன் செய்த சமரசங்கள் அவற்றைப் பேரினவாதத்தின் முன்பு மண்டியிடச் செய்தன. இன்று ஜே.வி.பியோ தனது இந்திய எதிர்ப்பை மட்டுமில்லாமல் அமெரிக்க எதிர்ப்பையும் கைவிட்டுவிட்டது.



ஜே. வி. பியின் மனமாற்றம் வெறும் அதிகார வேட்கையால் ஏற்பட்ட ஒன்று மட்டுமே. ஒரு சிறு முதலாளியப் பேரினவாதக் கட்சி இன்னொரு பேரினவாதக் கட்சியுடன் செய்கிற சமரச மாகவே ஜே. வி. பியின் அண்மைய கூட்டணி அமைந்தது. இது போல ஒரு கூட்டணிக்கான முயற்சி 1987ல் எடுக்க ப்பட்டது. எனினும் ஜே. வி. பி தனது கை ஓங்குகிற நிலையில் இன்னொரு வலிய பங்காளியுடன் கூட்டுச்சேர விரும்ப வில்லை.

ஜே.வி.பி க்கு மாக்ஸிய அடையாளமும் அங்கீகாரமும் வழங்கியது ஒரு ட்ரொட்சிய நாலாவது அகிலம் என்பதையும் இலங்கையில் முதலாளியத்தையும் தேசியவாதிகளையும் தவிர்த்தால் ட்ரொட்ஸ்கியவாதிகளோ 1990களில் ஜே.வி.பிக்கு ஒரு முற்போக்கு முத்திரை குத்தினர். இதுவும் கவனத்துக்குரிய ஒரு விடயமாகும்.

ஜே. வி. பிக்கு இடதுசாரி அடையாளம் இடுவதை நேர்மையான மாக்ஸிய வாதிகள் முற்றாகவும் தொடர்ச்சியாகவும் விமர்சிப்பது மிகவும் அவசியம். அல்லது போனால் ஜே. வி. பியைக் காட்டி நேர்மையான இடதுசாரிகளைத் தனிமைப்படுத்துவதில் பிற்போக்காளர்கள் வெற்றி பெறுவர்.

அடுத்த கேள்வி ஜே. வி. பியின் அடிப்படை பற்றியது. ஜே. வி. பி சிறு முதலாளியக்கட்சியாக இருந்து இப்போது பேரினவாத தேசிய முதலாளியக் கட்சியாக மாறுகிறதா என்ற கேள்வியும் கவனமாக ஆராயப்பட வேண்டும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும் (19)

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

# தனியார் மயமாக்கலை நோக்கிய சறுக்குப் பாதையில் கல்வித்துறை

பேராசிரியர் சி.சிவசேகரம்

இலங்கையில் தேசியக்கல்வி முறை சரியாகத் திட்டமிடப் படாதது நாட்டின் பல வேறு துறைகளில் இருந்தது போன்ற பலவீனங்கள் தொடர்பானது. தேசிய முதலாளி வர்க்கம் தூர நோக்கற்றதாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற கொள்கையிற் தளராது உறுதியாக நிற்க வலுவற்றதாயும் இருந்ததன் விளைவுகளை நாம் பலவாறு அனுபவித்துள்ளோம். எனினும், 1977 வரை, தேசிய முதலாளியம் சிறுமுதலாளிய, தொழிலாள, விவசாய வர்க்கங்களது ஆதரவை நம்பியிரு ந்தாலும் 1956ல் எழுச்சி பெற்ற அதன் ஏகாதிபத்திய விரோத முனைப்பு பல வேறு சமூகப் போராட்டங்களின் விளைவாக ஓரளவு வலுவுடன் இருந்தாலும் இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி போன்ற விடயங்களில் வெளிவெளியான விட்டுக் கொடுப்பில்லாது அரசாங்கங்கள் நடந்து கொண்டன. 1965- 1970 கால யூ என். பி ஆட்சியாற் கூடக் கடும் பொதுசன எதிர்ப்பைக் கருதிக் கல்விமுறையைத் தனியார் மயமாக்கலை நோக்கியோ ஆங்கில ஆதிக்கத்தை நோக்கியோ திருப்ப இயலவில்லை.

1978ம் ஆண்டு பிரகடனஞ் செய்யப்பட்ட பொருளாதாரத் தாராளமாக்கற் கொள்கையும் திறந்த பொருளாதாரமும் வெறுமனே உற்பத்தியும் வணிகமும் பற்றியன அல்ல. அவை சமூகத்தின் பண்பாடு, கல்வி, சமூக நலன்கள் உட்பட்ட பல வற்றையும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு ஏற்றவாறு மாற்றும் நோக்கத்தின் அடிப்படையிலான நடவடிக்கைகளாகும். முதல் முயற்சியாக 1980 அளவில் ராகம வைத்தியசாலையைத் தளமாகக் கொண்ட ஒரு தனியார் மருத்துவ பீடம் தொடக்கப்பட்டது. அதன் அனுமதி விதிகள் பணம் படைத்தவர்களது தகுதி குறைந்த பிள்ளைகட்கு அயல் நாட்டில் வசிக்கும் வசதிபடைத்த இலங்கையர்களது பிள்ளைகட்கும் ஏற்றவாறு தளர்த்தப்பட்டன. எனினும் இலங்கைப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் வழங்கப்பட வேண்டிய தேவையால் பல்கலைக்கழக மருத்துவத்துறை சார்ந்த விரிவுரையாளர்கள் பலரது எதிர்ப்பாலும் பொது சனங்களிடையே இருந்த கசப்புணர்வாலும் அந்தத் தனியார் மருத்துவ பீடம் கைவிடப்பட்டது.

1960 ஆண்டு பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட பின்பு கல்வித்துறை ஏறத்தாழ முற்றுமுழுதாகவே அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்தது. அயல்நாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்தோரதும் அயல் நாட்டு நிபுணர்கள் வணிகர்கள் போன்றோரது பிள்ளைகட்கான கல்வி வசதிக்கு என்ற பேரில் நியாயப்படுத்தப்பட்டு உருவான தனியார் பாடசாலைகள் பணம் படைத்த எல்லாருக்கும் திறந்து விடப்படுவதற்கு 1977 க்குப் பிறகான அரசாங்கக் கொள்கை வசதி செய்தது. 1980களில் ஒரு சில 'சர்வதேசப் பாடசாலைகள்' கொழும்பில் இருந்தன. 1980களில் அவற்றின் தொகை படு வேகமாகக் கூடியது. இன்று சிறு நகரங்களிற் கூட 'சர்வதேசப் பாட சாலைகள்' முளைத்து விட்டன.

இந்தச் சர்வதேசப் பாடசாலைகள் அயல்நாட்டுப் பரீட்சைக்காக மாணவர்களைப் பயிற்றுவிப்பது, ஆங்கிலக் கல்வி, அயல் நாட்டு உயர்கல்வி என்ற நோக்கங்களை நிறைவு செய்வதற்கானவை என்பதால் வசதிபடைத்த நடுத்தர வர்க்கத்தினர், குறிப்பாக ஆங்கில, மேலை நாட்டு மோகம் கொண்டோர், 1978க்குப் பிறகும் போர்ச் சூழலிலும் உருவான புதிய பணக்காரர், அரசியற் பிரமுகர்கள் போன்றோரது பிள்ளைகளைக் கவர்ந்தன.

இன்று இத்தகைய பாடசாலைகளிற் படிக்கிறவர்களது தொகை பெரிதும் வளர்ந்த சூழலில் எல்லாருக்கும் அயல் நாட்டுப் பல்கலைக்கழகங்களில் இடம் பெறுவது பல வேறு காரணங்களால் இயலாதுள்ளதாலும் உள்நாட்டிலேயே இந்தப் பாடசாலை மாணவர்கள் பட்டப்படிப்பை மேற் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் என்ற பேரில் கல்வி நிறுவனங்கள் இயங்குகின்றன. இவை போக, இந்தியாவின் பல்கலைக்கழகக் கல்லூரிகளும் வேறு அயல் நாட்டு நிறுவனங்களும் 'மலிவு விலையில் குறைந்த தகுதியுடைய மாணவர்கட்குப் பட்டங்களை விற்கிற வணி கத்தை முடுக்கிவிட்டுள்ளன.

இவை போக, தகவல் தொழில் நுட்பம் என்ற பேரில் பல்கலைக்கழகங்களே வணிக நோக்கிற் பட்டப்படிப்புத் துறைகளை இயலுமாக்கி வெளிவாரிப்பட்டங்களை வழங்குகின்றன. மாணவர்களைப் பயிற்றுவிக்கிற தனியார் கல்விக் கூடங்கள் பாடசாலை ற்யூட்டறிகள் போல வணிகத்தில் கவனமாக இருக்கின்றன.

எவ்வாறாயினும் இந்த ஊடுருவல் மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் சிறிது கடினமானது. ஏனெனில் தகவல் தொழில் நுட்பத்துறை போன்றவற்றுக்கு வேண்டியதை விட அதிகளவு மூலதனம் மருத்துவமனை வசதி போன்றவை தேவைப்படுகின்றன. இந்தப் பின்னணியிலேயே அண்மையில் ஒரு இந்தியத் தனியார் மருத்துவமனைக் கொம்பனி மூலம் இலங்கையில் மருத்துவப்பட்டப் படிப்பைத் தொடங்கும் முயற்சி மேற் கொள்ளப்பட்டு மருத்துவ பீட மாணவர்களது கடும் எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளது.

அதே வேளை, வசதி படைத்த பெற்றோர் தமது பிள்ளைகளை அந்நிய நாடுகட்கு அனுப்பி விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், நிருவாகம், போன்ற துறைகளில் பட்டம் பெறச் செய்கிறார்கள். அவர்கள் ஆங்கில மூலம் கல்வி பெறுவதால் இன்றைய ஆங்கில ஆதிக்கச் சூழலில் அவர்களுக்குத் தனியார் துறையில் வேலைவாய்ப்புச் சிறப்பாக உள்ளது. அதைவிட அவர்கள் செல்வாக்குள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களது பட்டங்களை இலங்கையில் அங்கீகரிப்பதற்கான பல வேறு தந்திரங்கள் மருத்துவம், பொறியியல், நிருவாகம் போன்ற துறைகளில் கல்வியின் தகுதியை மதிப்பிடுகிற அமைப்புக்களுக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்கங்கள் வேண்டுமென்றே பாடசாலைக் கல்வியிலும் பல்கலைக்கழகக் கல்வியிலும் முதலீட்டைச் குறைத்து வருகிறது. ஒரு பட்டதாரிக்கான அரசாங்கச் செலவு தொடர்ந்தும் குறைந்து வருகிறது. இதன் மூலம் இலங்கைப் பட்டதாரிகளின் தரம் மேலும் சரிவடையும். இந்தப் பின்னணியில் தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டால், அவை கூடிய சம்பளத்தைத் தருவதன் மூலம் பல நல்ல விரிவுரையாளர்களையும் பேராசிரியர்களையும் தம் பக்கம் திருப்ப இயலும், இது அரசாங்க ஆதரவில் இயங்கும் இலவசக்கல்விப் பல்கலைக்கழகங்களை மேலும் பலவீனப்படுத்தும். இதன் நேரடியான விளைவாக வசதியுள்ளோர் தங்களது பிள்ளைகளை, அயல் நாட்டில் மட்டுமன்றி, உள்ளூரிலும் தாங்கள் விரும்பிய துறைகளில் பயிற்றுவித்து அரசாங்கப் பல்கலைக்கழகங்களிற் கற்கும் வசதி குறைந்த மாணவர்களை விடச் சிறப்பான பட்டதாரிகளாக அவர்களைச் சமூகத்திற்கு முன் நிறுத்த முடியும்.

அமெரிக்காவில் எவ்வாறு தனியார் பல்கலைக்கழகங்களே முன்னிலையிலும் அரசாங்கப் பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் பிற்பட்டும் நிற்கின்றனவோ அது போன்ற ஒரு சூழல் விரைவில் இலங்கையில் உருவாகும் ஆபத்து மிக நிசமானது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டால், அதன் விளைவு, அமெரிக்காவில் உள்ள ஏழைகளது பிள்ளைகளின் உயர்கல்வியின் நிலையை விட மோசமான நிலையை கீழ்- நடுத்தர, ஏழை மக்களது பிள்ளைகட்கு ஏற்படுத்திவிடும். இங்கே ஏற்றத் தாழ்வுகளின் தன்மை அமெரிக்காவை விடச் சிக்கலானது.

ஒரு புறம் இங்கே வசதிபடைத்தோரின் விகிதம் அமெரிக்காவில் உள்ளதிலும் குறைவு. அதோடு இங்கே உயர்கல்வி வாய்ப்புக்களும் குறைவு. மேலதிகமாக, வசதிபடைத்தோர் ஆங்கில மூலமே கல்வியைப் பாடசாலை மட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் வரை பெறுவர். மற்றவர்கட்கு ஆங்கிலக் கல்வி மிகவும் பலவீனமாகவே இருக்கும். இவை யாவும் அயல் மூலதனம் மேலாதிக்கஞ் செய்யும் ஒரு சமூகச் சூழலில் பட்டதாரிகளை வர்க்க அடிப்படையில் வேறுபடுத்திக்காட்டி வர்க்க ஒடுக்குமுறையை வலுப்படுத்தும்.

பாடசாலைக் கல்வியின் சீர் குலைவு இளைய தலைமுறையின் சிந்திக்கும் ஆற்றலைச் சிதைத்து வருகிறது. சுதந்திர சிந்தனையை ஊக்குவிக்காத பல்கலைக்கழகங்களில் உருவாகிற பட்டடதாரிகள் எந்த அநீதியையும் தட்டிக் கேட்க இயலாதவர்களாக இருப்பார்கள். ஏகபோக முதலாளியத்துக்கு இதை விட வேறு என்ன வேண்டும்! அதற்குத் தேவையான மலிவாக உழைக்கும் மறு கேள்வி கேளாத இயந்திர மனிதர்களைத் தான் நாம் உருவாக்கப் போகிறோமா?

இன்று கல்வித்துறையில் ஒவ்வொரு மட்டத்திலும் திட்டமிட்ட சீர்குலைப்பு மேற் கொள்ளப்படுகிறது. அந்நிய நிபுணர்களும் அரசாங்க ஆலோசகர்களும் கடந்த இரு தசாப்தங்கட்கும் மேலாகக் கல்வித்துறைகளின் சீரழிவிற்கு உடந்தையாகவே இருந்து வந்துள்ளனர். கல்வி பற்றிய அக்கறையும் அறிவும் அனுபவமும் உள்ளவர்கள் பலர் இந்த நாட்டிலிருந்தும் கல்வித் துறையின் சீரழிவையும் அது எதிர் நோக்கும் சிதைவையும் யாராலும் தடுத்து நிறுத்த இயலாதுள்ளது ஏன்?

எந்த ஒரு தனி மனிதரிடமோ, நிபுணர்களிடமோ நமது கல்வித்துறையின் மீட்சிக்கான தீர்வுகள் இல்லை. பயனுள்ள எதாவது இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்த ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் கருவியாக இயங்கும் ஒரு அரசாங்கம் துணியாது. எனவே தான் கல்வி என்பது இன்று முழுமையாகவே ஒரு அரசியற் பிரச்சனையாயுள்ளது. அதன் தீர்வைச் சரியான அரசியல் மார்க்கத்தின் மூலமே காண இயலும். என்னுடைய மதிப்பீட்டில் நமது கல்விப் பிரச்சனை ஒரு வெகுசனப் பிரச்சனை. அரசியலிற் போன்று கல்வியிலும் வெகுசனப் பாதையைக் கடைப்பிடிக்காமல் கல்வியைச் சீரழிவினின்று மீட்டுச் சமூகப் பயனுடையதாக்குவது இயலாத காரியம்.

முற்றும்

# யாருடைய பொருளாதார மேம்பாடு?

## பொருளாதார மேம்பாட்டுச் சிந்தனைகள் - நூல் மதிப்பீடு

**பொருளாதார மேம்பாட்டுச் சிந்தனைகள், என். சிறிரஞ்சன், குமரன் புத்தக இல்லம், கொழும்பு- சென்னை, 2004, ப. 166 + xv, ரூ. 250.00.**

இந்த நூலில் உள்ள முப்பத்து நான்கு கட்டுரைகளும் வீரகேசரியிலும் தினக்குரலிலும் வெளியானவை. நூல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதி 'பொருளீட்டலும் நாமும்' என்ற தலைப்பிற் பெரும்பாலும் நாட்டின் பொருளாதார விருத்தி பற்றி ஆசிரியரின் கருத்துக்களைத் தருகிறது. 'வியாபார உருவாக்கமும் விருத்தியும்' என்ற இரண்டாவது பகுதி வணிக நிறுவனங்களது நிருவாகமும் வளர்ச்சியும் பற்றிய விடயங்களைப் பேசுகிறது. இறுதிப் பகுதி 'சேமிப்புகளும் முதலீடுகளும்' எனும் தலைப்பில் முதலீட்டாளர்கள் மனதில் எழும் ஐயங்கட்கு விளக்கமளிக்கிறது.

நூலின் ஆசிரியர், கட்டுரைகள் ஒவ்வொன்றும் எவருக்கும் ஏதாயினும் வகையிற் பயன்படும் எனவும் இந் நூல் ஒவ்வொருவரும் தன்னையும் சமூகத்தையும் மேம்படுத்துவதற்கு உதவ வேண்டும் என அவாவுறுவதாயும் கூறியுள்ளார். முன்னுரை எழுதியுள்ள பொருளியற் பேராசிரியர் பாலகிருஷ்ணன் பொதுத் தராத மட்டங்களிற் பயிலும் மாணவர்கட்கும் பொருளியல், நிதி, வர்த்தகம் ஆகிய துறைகளில் ஈடுபாடுடையவர்கட்கும் நல்ல வழிகாட்டியாகப் பயன்படும் என்றும் பரிந்துரைத்துள்ளார். எளிமையான, தெளிவான, பெருமளவும் திருத்தமான எழுத்து நடை பற்றி முன்னுரையிற் கூறப்பட்டவற்றுடன் நான் மிகவும் உடன்படுகிறேன். அதே வேளை எந்த ஒரு அறிவுத்துறையும் தகவல்களைப் பெறுவதையும் அவற்றை ஒழுங்கு படுத்துவதையும் பக்கச்சார்பற்றுச் செய்ய இயலாது என்பதை மனதிற் கொண்டு மதிப்பீட்டைச் செய்கிறேன். குறிப்பாகச், சமூதாயத்தின் நிலை மீதும் அதன் விருத்தி மீதும் நேரடியாகவே பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு துறை பொருளியல் என்பதைக் கருதியே இந் நூலிற் கூறப்பட்டுள்ள கருத்துக்களை மதிப்பிட வேண்டியுள்ளது.

ஒரு மொழியியலாளரோ, அரசியல் விஞ்ஞானியோ பொருளியலாளரோ, தன் ஆய்வுக்குட்பட்ட பொருளை ஒரு நிலைப்பாடு சார்ந்தே அணுகுகிறார். தனது ஆய்வுக்குட்பட்ட பொருளில் எத்தகைய மாற்றங்கள் விரும்பத்தக்கன என்பது பற்றிய மதிப்பீடுகளும் அவரிடம் இருக்கும். எனவே அவரது பரிந்துரைகள் மட்டுமன்றி, ஆய்வுமுறையும் அவரது உலக நோக்கிலேயே முடிவாகிறது.

முதற் பகுதியின் முதல் கட்டுரைகளும் இறுதிக்கட்டுரையும் பிற நாடுகளிற் கடைப்பிடிக்கப்படும் அணுகுமுறைகளை நாமும் கடைப்பிடித்து முன்னேறலாமே என்ற தொனியில் அமைந்துள்ளன. சந்தைப்படுத்தல், ஏற்றுமதிப் பொருளாதாரம் போன்றவற்றின் மூலம் நமது பொருளாதாரத்தை உய்விக்கலாம் என்று அவர் கூறுகிற கருத்துக்கள், அவர் குறிப்பிடும் பல வேறு பொருட்களது சந்தை எவ்வாறு செயற்படுகின்றன என்று போதிய கவனிப்பின்றியே கூறப்படுகின்றன. உதாரணமாக உள்ளூர் ஒடியல் கூழை உலகச் சந்தையில் சரியாக அறிமுகப்படுத்தினால் மேல்நாட்டவரின் வரவேற்பினைப் பெறும் என்ற கருத்து (ப-22) மேலோட்டமானது என்பது போக, மேல்நாட்டவருக்கு ஏற்றுமதி செய்தே நமது பொருளாதாரம் முன்னேறலாம் என்ற எண்ணம் ஆசிரியரிடம் ஆழமாக உள்ளதையே காட்டுகிறது.

தொழில்சார் உயர் கல்வி தொடர்பாகவும் பட்டதாரிகளின் வேலையின்மை தொடர்பாகவும் நூலாசிரியரது பொதுவான அவதானிப்புக்கள் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலரும் ஏற்கக் கூடியனவே. எனினும் நாட்டின் பொருளாதார விருத்திக்குப் பிரதான தடையாக இருப்பது எது என்ற கேள்வியைத் தவிர்த்தே நூலாசிரியர் விடைகளைத் தேடுகிறார்.

பண்டைய இலக்கியத்தில் பயனுள்ள விஞ்ஞான சிந்தனைகள் என்ற கட்டுரையில் நூலாசிரியர் எவ்வளவு எளிதாகப் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கூற்றுக்களைக் கேள்வியின்றி ஏற்கிறார் என்று நம்பக் கடினமாக இருக்கிறது. மரபிலிருந்து எதையெதை எடுக்கக் கூடாதோ அதை யெல்லாம் மரபுவாதிகளும் பழம்பெருமை பேசுகிறவர்களும் தேடி எடுத்து எல்லாமே எம் முன்னோர் எப்போதோ கண்டு பிடித்தவை தாம் என்று மக்களை ஏமாற்றி வருகிறார்கள். 'பல்லாயிரம் வருடச்' சரித்திரத்தைக் கொண்ட நாம் 'சில நூறு வருடச்' சரித்திரங் கொண்ட பல மேலைநாடுகட்குப் பின் நிற்கக் காரணம் நமது பழைய அறிவைச் சரிவரப் பயன்படுத்தாததுதான் என் றால், இந்தியத் துணைக்கண்டமும் சீனாவும் பாரசிகமும் உலகத்திற்கு நவீன அறிவைப் பரப்பிய அராபியாவும் தங்களுடைய பழைய அறிவைத் தூசுதட்டித் துடைத்து மெருகூட்டி மேலை நாடுகளை முந்திவிட முடியுமா? நூலாசிரியரின் பார்வை ஒருபுறம் உலகமயமாதலின் யதார்த்தத்தைக் கேள்வியின்றி ஏற்று அதற்கமைய நம்மை மாற்றுமாறு வற்புறுத்துகிறது. மறுபுறம் பழைமைக்காக ஏங்குகிறது.

உலகமயமாக்கல் என்பது திறந்த பொருளாதாரம் என்ற பேரில் வலிய முதலாளிய நாடுகள் தமது பொருளாதார நலன்களைப் பேணுவதில் ஒரு விதமாகவும் மூன்றாமுலக நாடுகளின் நலன்களைப் பேணமுடியாதவாறு இன்னொரு விதமாகவும் விதிகளைப் பாவிப்பதை அறிந்துள்ள நூலாசிரியர்

தொடர்ச்சி 8ம் பக்கம்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சுனாமிக்குப் பின்பான அரசியல் நிலையும் சர்வதேச நாடுகளின் தலையீடுகளும்

2004 டிசம்பர் 26ல் இடம் பெற்ற சுனாமிப் பேரழிவானது இந்தோனோசியாவிற்கு அடுத்ததான அதிகரித்த உயிர் உடமை அழிவுகளை இலங்கையில் ஏற்படுத்தி விட்டது. நாட்டின் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு கரையோரங்களை சுனாமிப் பேரலை அடித்துச் சென்றதினால் சுமார் நாற்பத்தி இரண்டாயிரம் பேர் வரை பலியாகினர். சுமார் பதினையாயிரம் கோடிரூபா வரையான சொத்தழிவுகள் ஏற்பட்டன. பத்து லட்சம் மக்கள் அகதிகளாகினர். தமது உறவினர்களை இழந்தவர்கள் இன்னும் உளரீதியான அதிர்ச்சிகளில் இருந்த மீளாதவர்களாகவே இருந்து வருகின்றனர். இந்த சுனாமிப் பேரழிவில் ஆழ்ந்து அவதானிக்க வேண்டிய விடயம் யாதெனில் அழிவுகளுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளான மக்களில் ஏகப் பெரும்பான்மையோர் சாதாரண உழைக்கும் மக்களான மீனவர்கள், சிறுதொழில் புரிவோர், விவசாயிகள் மற்றும் கீழ் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தோராவர். சுனாமிப்பேரழிவு இடம் பெற்று மூன்று மாதங்கள் ஆகப் போகின்ற நிலையில் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மீட்சி பெறுவதற்குரிய மாற்று செயற்பாடுகள் எதையும் அரசாங்கம் அக்கறையுடனோ பொறுப்புடனோ இதுவரை செய்து கொள்ளவில்லை என்பது முக்கியமானதாகும். குறிப்பாக ஏற்கனவே யுத்தத்தால் அழிந்து காணப்படும் வடக்கு கிழக்கை சுனாமி ஆகக் கூடுதலாக அழித்துக் கொண்டது. இதில் முல்லைத் தீவு அம்பாறை மாவட்டங்கள் மிகப் பாரிய அழிவுகளைக் கண்டது. ஆனால் அரசாங்கம் மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே செயலாற்றி வருகின்றது. இச் சுனாமிப் பேரழிவு பற்றி ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் உட்பட ஆளும் வர்க்க தலைவர்கள் எவ்வளவிற்கு அழுது வடிப்பது போன்று நடந்து கொண்டாலும் அவர்கள் இதன் ஊடாக தத்தமது ஆளும் வர்க்க அரசியல் காய் நகர்த்தல்களிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர். ஜனாதிபதிக்கும் ஐ. ம. சு. முன்னணி அரசாங்கத்திற்கும் சுனாமிப் பேரழிவு ஒரு வகை வரப்பிரசாதமாக அமைந்து கொண்டது. கடந்த அரசாங்க காலத்தில் உதவி வழங்கும் நாடுகள் வாக்குறுதி அளித்த நாற்பத்தையாயிரம் கோடி ரூபா பணத்தை பேச்சு வார்த்தையை ஆரம்பித்துப் பெறமுடியாத சூழலில் சிக்கித் தவித்து வந்த இன்றைய ஆட்சியினருக்கு அதற்குப் பதிலாக சுனாமி உதவி நிவாரண நிதியாக உலக நாடுகள் நிதி வழங்கக் கூடிய புதிய நிலை உருவாகிக் கொண்டது. உலக வங்கி பழைய சில கடன்களை ரத்து செய்து புதிய கடன் தொகைகளை அறிவித்துக் கொண்டது. வேறும் சில நாடுகள் தமது கடன்களை ரத்துச் செய்து இலகு கடன்களையும் நிதி உதவிகளையும் வழங்க முன் வந்தன. அவை உள்நோக்கம் கொண்ட உதவிகளாயினும் அரசாங்கத்தின் நிதி நெருக்கடிக்கு மாற்று வழியாகிக் கொண்டன.

சுனாமி இடம் பெற்று சில நாட்கள் மட்டுமே ஆளும் வர்க்க தலைமைகள் இன மொழி மத பிரதேச வேறுபாடு அற்ற இயற்கை அழிவு பற்றியும் சகலதும் கடந்த மனித நேயம் பற்றியும் பேசிக் கொண்டனர். ஆனால் இருவாரங்கள் கழிவதற்குள் "சாத்தான் வேதம் ஓதியது" போன்று தத்தமது கொடிய வர்க்க இனத்துவ சுயரூபங்களைக் காட்டிக் கொண்டனர். தெற்கு மேற்கு மக்கள் வர்க்க ரீதியில் உழைக்கும் மக்கள் என்ற அடிப்படையில் கவனிக்கப்படவில்லை. அதே நேரம் வடக்கு கிழக்கு மக்கள் இன மொழி பிரதேச அடிப்படையிலும் வர்க்க நோக்கிலும் புறக்கணிக்கப்பட்டனர். இந் நிலை இன்றும் தொடர்கிறது. ஆளும் ஐ. ம. சு. முன்னணியின் பிரதான பங்காளியான ஜே. வி. பி. பேரினவாத வெறி கிழப்பி வடக்கு கிழக்கிற்கான பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதை எதிர்த்து வருகிறது. ஏற்கனவே யுத்தத்தாலும் பின்பு சுனாமியாலும் அழிந்து காணப்படும் வடக்கு கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம்- புலிகள் இயக்கம் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பு அவசியம் என்பது இன்றைய யதார்த்தம் இதில் புலிகள் விட்டுக் கொடுப்பைச் செய்த போதிலும் ஜே. வி. பி யின் மூர்க்கத்தன எதிர்ப்பால் ஜனாதிபதி பொதுக் கட்டமைப்பு உருவாக்கத்தில் தாமதம் காட்டி வருகிறார்.

அதேவேளை அடுத்து வர உள்ள ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு எதிர் கொள்வது என்பதிலேயே ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் முனைப்பாக நிற்கிறார்களே தவிர நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகள் பற்றி எவ்வித அக்கறையும் காட்டப்படவில்லை. ஒரு புறம் பொருட்களின் விலை உயர்வுகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றன. மறு புறம் தனியார்மயப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றன. நாடு எதிர்நோக்கி நிற்கும் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்கான பேச்சு வார்த்தை பற்றிய பேச்சே சுனாமியுடன் அடித்துச் செல்லப்பட்டு விட்டது போன்றே காணப்படுகிறது. அதேவேளை ஆளும் தரப்பினுள் முரண்பாடுகளும் முறுகலும் காணப்படுகிறது. நீதிமன்ற ஆணை மூலமோ அன்றி சர்வசன வாக்கெடுப்பு மூலமோ அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டு அதிகாரம் கொண்ட பிரதமராகவே சந்திரிகா அம்மையார் முற்பட்டுள்ளார். ஆனால் ஐ.தே.கட்யோ நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர வேண்டும் என்றே வற்புறுத்துகிறது. இனப்பிரச்சினையை யுத்தமாக்கியதன் மூலம் இலங்கைக்குள் புகுந்து கொண்ட அந்நிய நாடுகள் இப்போது சுனாமியின் பெயரில் வெளிப்படையாகவே இறங்கிக் கொண்டு போட்டி போட்டு தத்தமது உள்நோக்கங்களை நிறைவேற்றி வருகின்றன. இதில் அமெரிக்கா ஐரோப்பிய யூனியன், யப்பான், பிரிட்டன், கனடா என்பன ஒரு புறமாகவும் இந்தியா மறுபுறமாகவும் போட்டி போட்டு நிற்கின்றன. அமெரிக்கப் படைகள் முதல் தடவையாக மீட்புப்பணி என்ற பெயரில் இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்துக் கொண்டன. பிரித்தானிய, கனடாப் படைகளும் வந்து கொண்டன. மறுபுறத்தில் சுனாமி அடித்த இரண்டு நாட்களில் இந்தியப் படைகள் வந்து இறங்கிக் கொண்டன. இவ் அந்நியப் படைகள் செய்து கொண்ட மீட்புப் பணிகள் தான் என்ன? தத்தமது ஆதிக்க நோக்கங்களுக்கான நோட்டங்களை முன்னிறுத்திய வேலைகளையே அவை செய்து கொண்டன. இன்று அப்படைகள் வெளியேறி விட்டதாகவே கூறப்படுகின்றது. ஆனால் சீருடைதரிக்காத எத்தனைபேர் ஆலோசனை, வழிகாட்டல், உளவு நடவடிக்கை என்பனவற்றில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது எவருக்கும் தெரியாத இரகசியங்களாக இருந்து வருகின்றன. நமது நாட்டின் பிரதான சிங்கள தமிழ் முஸ்லீம் அரசியல் தலைமைகளது கோழைத்தனமும் இயலாமையும் யாதெனில் இவ் அந்நியப் படைகளின் வருகைக்கு எவ்வித எதிரப்போ கண்டனமோ தெரிவிக்கவில்லை என்ற துரதிஷ்டமாகும். பாராளுமன்றத்திற்கு அப்பாலான இடது சாரிக் கட்சிகள் மட்டுமே அந்நியப் படைகள் வெளியேற வேண்டும் என வற்புறுத்திக் கொண்டன. அந்நியப் படைகளின் வருகையால் அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டியின் களமாக நமது நாடு மாற்றப்பட்டிருக்கின்றமை மேலும் உறுதியாக்கப்பட்டுள்ளது. இவர்கள் சுனாமிக்குப் பின்னான இலங்கையின் அரசியல் பொருளதார சூழலை தத்தமக்குரியவையாக மாற்றுவதில் மும்மரமாகி நின்கின்றனர். இவர்களுக்கிடையில் போட்டி நிலவுகின்ற போதிலும் தாராளமயம் தனியார்மயம் உலகமயமாதல் ஆகியவற்றின் ஊடாக இலங்கை முழுவதையும் மறு கொலனித்துவ மாக்கிக் கொள்வதில் முனைந்து நிற்கின்றன. இத்தகைய இந்திய அமெரிக்க ஆதிக்கப் போட்டிக்கு ஐக்கிய தேசியக் கட்சி அமெரிக்காவிற்கு தன்னை நெருக்கமாக்கி நிற்கிறது. ஜே. வி. பி உட்பட சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்தியாவுடன் இணங்கிப் போக நிற்கிறது.



இன்று இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படுவதைத் தாம் விரும்பவில்லை என்பதை அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் யப்பானும் வற்புறுத்தி வருவது போன்று காட்டிக் கொள்கின்றன. இது ஏற்கனவே யுத்தத்தின் மறைவில் நாட்டிற்குள் புகுந்து கொண்டு தாரளமய தனியார் மய உலகமயமாதல் நிகழ்ச்சி திட்டங்களை மேலும் விரிவுபடுத்தி அமுலாக்கி வளங்களைச் சுரண்டி கொள்ளையடித்துச் செல்வதற்கு சமாதான சூழல் அவர்களுக்கு தேவைப்டுகிறது.

## யாழ்ப்பாண அரசியல் கருத்தரங்கில் தோழர் சி. கா. செந்திவேல் உரை

அதேவேளை யுத்த தளபாடங்கள் ஆயுதங்கள் வழங்கிக் கொள்வதிலும் உள்ளார்ந்த அக்கறைகளுடன் ஆளும் வர்க்க பேரினவாத அரசைப் பலப்படுத்தியும் வருகின்றனர்.

இவ் அந்நிய சக்திகளின் ஊடுருவல்களுக்குரிய பின்புலத்தைத் தயார்படுத்திக் கொடுப்பதில் உலகங்கி சர்வதேச நாணய நிதியம். ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட அரசு சார்பற்ற நிறுவனங்கள் சுனாமிப் பேரழிவுடன் தமது கரங்களை மேலும் விரிவுபடுத்தி நிற்கின்றன. அரசாங்கத்தினால் முறையாகக் கவனிக்கப்படாத எமது மக்கள் இந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பணம் பொருள் உதவிகளால் ஏமாற்றப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. இது ஆபத்திற்கு உதவும் கொள்ளையரின் நிலைக்கு ஒப்பானதாகும்.

இந் நிலையில் சுனாமிக்கு பின்பான அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு நிலையானது மேலும் நெருக்கடிகளைக் கொண்டதாக வளர்ச்சி பெற்று வரும் மக்கள் விரோதப் போக்காகவே காணப்படுகின்றது. புரிந்துணர்வு - யுத்த நிறுத்தம் ஏற்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பேச்சுவார்த்தை என்பது உருப்படியாக முன்னெடுக்கப்படவில்லை. யுத்தத்தாலும் சுனாமிப் பேரழிவினாலும் அழிந்து காணப்படும் வடக்கு கிழக்கு, அரசாங்கத்தால் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. இந் நிலையில் விடுதலைப் புலிகள் சில படிகள் இறங்கி வந்து பொதுக் கட்டமைப்புக்கு முன் வந்த போதிலும் அதனையும் அரசாங்கம் வழங்காது ஏமாற்றி இழுத்தடித்து வருகின்றது. அதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தை மையப்படுத்திய ஒரு வகை ராஜதந்திர நகர்வுகளை விடுதலைப்புலிகள் முன்னெடுத்து வரும் போக்கையும் காணமுடிகிறது. எவ்வாறாயினும் விடுதலைப் புலிகள் சில தீர்க்கமான முடிவுகளுக்கு வரவேண்டிய முச்சந்திக்கு வந்துள்ள ஒரு யதார்த்ததையும் காணமுடிகின்றது. அவர்கள் எடுக்கும் தீர்மானம் எவ்வாறு அமையப்போகின்றது என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு சுனாமிக்குப் பின்னான அரசியல் நிலையானது முழு நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரான திசையில் அதே வேளை சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் தமிழ் மக்களுக்குப் பாதகமான திசையிலும் செல்லும் அபாயப் போக்கையே வெளிப்படுத்தி நிற்கிறது. இவ் போக்கிற்கு வலுச் சேர்ப்பது போன்றே அந்நிய நாடுகளின் தலையீடுகள் இடம் பெற்றும் வருகின்றன. இவற்றையிட்டு மக்கள் குறுகிய நிலைப்பாடுகளில் இருந்து விடயங்களை நோக்காது அரசியல் தூர நோக்குடன் செயற்பட வேண்டிய அவசியத்தையே காண வேண்டியுள்ளது.

இவ்வாறு கடந்த 20- 03-2005 அன்று யாழ் ப.நோ.கூ.சங்க கேட்போர் கூட மண்டபத்தில் புதிய ஜனநாயக கட்சி ஏற்பாடு செய்திருந்த "சுனாமிக்குப் பின்பான அரசியல் நிலையும் சர்வதேச நாடுகளின் தலையீடுகளும்" என்னும் தலைப்பிலான அரசியல் கருத்தரங்கில் பிரதான உரை நிகழ்த்திய கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் கூறினார். வட பிரதேச செயலாளர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் அரசியல் குழு உறுப்பினர் க. தணிகாசலம் மனித நேய தொழிற்சங்க செயற்பாட்டாளர் மு.தியாகராசா ஆகியோரும் உரையாற்றினர்.

---

## யாருடைய பொருளாதார..........

7ம் பக்க தொடர்ச்சி

உலகமயமாதலில் எதிர்க்க வேண்டியதை எதிர்த்து எடுக்க வேண்டியதை எடுத்து உலகமயாதலை எதிர்வு கொள்ளவேண்டும் என்று பரிந்துரைக்கிறார். உண்மையில், உலகமயமாதல் ஏற்பட்ட விதத்தை அதன் வரலாற்று வளர்ச்சி அடிப்படையில் நூலாசிரியர் விளங்கிக் கொள்ளாததாலேயே முதலாம் உலக நாடுகட்கு முன்னுள்ள தெரிவுகள் மூன்றாம் உலகுக்கு முன்னும் உள்ளதாகக் கற்பனை செய்கிறார். மூன்றாமுலகின் முன்னுள்ள தெரிவு ஏகாதிபத்திய உலக மயமாதலினின்று மூன்றாமுலக மக்கள் தனித்தனிச் சமூகங்களாகவும் ஒரு உலச் சமுதாயமாகவும் எவ்வாறு சுயசார்பான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது என்பது பற்றியதே. உலகமயமாதலை ஒட்டிப்போவது என்பது பகுதி பகுதியாகச் செய்யக் கூடிய ஒன்றல்ல.

இரண்டாம் பகுதியில் தனிமனித முயற்சி மூலம் ஏகாதிபத்திய, முதலாளியச் சூழலில் எல்லாரும் வெற்றியடையலாம் என்கிற நோக்கு வற்புறுத்தப்படுகிறது. இங்கே முயற்சியாண்மை, உழைப்பு என்பன வற்புறுத்தப்படுகிறன. எனினும் முதலாளிய முறையின் கீழ் மிகச் சிறிய சிறுபான்மை ஒன்றே வெல்ல இயலும் என்பதை நூலாசிரியர் மறந்து விடுகிறார். விருத்தியடைந்து வரும் நாடுகள் சில (சிங்கப்பூர் போன்று) துரித வளர்ச்சி பெற்றுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டும் போது, சிங்கப்பூரோ, தாய்வானோ, தென்கொரியாவோ வளர்ச்சி பெற்ற உலக அரசியற் சூழல் என்ன என்பது பற்றிய கவனமோ கணிப்போ காட்டப்படவில்லை. தகவல் தொழில்நுட்பம் போன்ற விடயங்கள் பற்றியும் நூலாசிரியரிடம் மிகுந்த மயக்கம் உள்ளது. சேமிப்புக்களும் முதலீடும் பற்றிய கட்டுரைகள் ஒரு புறம் பங்குச் சந்தையில் முதலிடுமாறு சிறு சேமிப்பாளர்களையும் ஊக்குவிக்கும் நோக்கையுடையவை. பல விடயங்களில் நூலாசிரியர் வரலாற்று நோக்கில் தகவல்களைப் பார்ப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக மேலை நாடுகளிலும் யப்பானிலும் மத்திய வங்கி வட்டி வீதம் எப்போதுமே குறைவானது என்ற தோரணையில் அவர் எழுதுகிறார் (ப.106). ஆயினும் இந்த நாடுகள் பணவீக்கம், பொருளாதாரத் தேக்கம், போதிய முதலீடும் உற்பத்தியுமின்மை என்பன காரணமான வேலையின்மை என்பனவற்றைக் கட்டுப்படுத்தத்தம் நாணயத்தின் பெறுமதியையும் வட்டி வீதத்தையுமே பயன்படுத்துகின்றன. பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு பிரித்தானியாவில் வட்டி வீதம் 10%க்கும் மேலாக இருந்தது. இன்று அமெரிக்க வட்டி வீதம் குறைவாகயிருக்கக் காரணம் அமெரிக்காவின் பொருளாதாரத் தேக்கமே ஒழிய வளர்ச்சியல்ல.

பொருளியல் விடயங்கள் தொடர்பான கட்டுரைகளும் நூல்களும் மேலும் வருவது நல்லது. அவ்வகையில் சிறிரஞ்சனுடைய நூலை நாம் வரவேற்க வேண்டும். அதே வேளை, இவ்வாறான நூல்கள் மேலைத்தேய ஏகபோக முதலாளிய நலன் சார்ந்து செய்யப்படும் ஆய்வுகளினின்று பெறும் தகவல்களை மீளாய்வுக்குட்படுத்தி நமது மக்களுக்கு வழங்குவது நல்லது. அல்லது புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாக முடியும்.

இந் நூலில் நம்முடைய சிந்தனையை விரிவடையச் செய்ய அவர் ஒரு கதையைக் கூறி இருக்கிறார். அதில் ஒரு குளத்திலிருந்த ஆமை ஊரொன்றுக்குப் போய் மீண்டும் வந்து நீரில்லாமலே உயிர்கள் வாழுவதாகச் சொன்னதை மீன்கள் நம்ப மறுத்து ஆமையை விரட்டி விட்டதாக வருகிறது. மீன்களுடைய அறியாமையை நம்மிற் பலருடைய வரையறைக் குட்பட்ட சிந்தனையுடன் அவர் ஒப்பிடுகிறார். ஆனாலும் ஒரு முக்கியமான உவமையை அவர் தவறவிடுகிறார். அறிவாளி ஆமை தேவையானால் அமெரிக்கா போயும் பிழைத்துக் கொள்ளும். ஆனால் எவ்வளவு தான் அண்டவெளி பற்றி அறிந்திருந்தாற் கூட மீனாற் குளத்தை விட்டு வெளியேற முடியுமா? புற உலகை அறிந்திருப்பது முக்கியமானது. ஆனால் அங்கே நடக்கிற ஒவ்வொன்றையும் நமது சூழலிற் பிரயோகிக்க இயலாது. அதைவிட நல்லது போலத் தெரிகிற ஒன்று உண்மையிலேயே நல்லதாக இருக்கவும் தேவையில்லை.

நம்முடைய பொருளாதார விருத்திக்குப் பொருளியல் வல்லுநர்களது பங்களிப்பு முக்கியமானது. சமூக யாதார்த்தத்தைத் தேசிய, பிறதேசிய மட்டங்களில் மட்டுமன்றி பல மட்டத்திலும் முழுமையாக உள்வாங்கிக் கொள்வதன் மூலமே பொருளியலாளர்களால் நமது சமுதாயத்தின் பொருளியல் நிலைமைகளையும் தேவைகளையும் தீர்வுகளையும் சரிவர அடையாளங்காட்ட இயலும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சமூகப் பொறுப்புணர்வுடன் சிந்திக்க மலையக இளந் தலைமுறையினர் முன்வரல் வேண்டும்

மலையகத் தமிழ் சமூகம் 175 வருட கால வரலாற்றை வழிநடந்து வந்த ஒரு சமூகமாகும். இலங்கையின் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது இன்றும் பின்தங்கிய ஒரு சமூகமாகவே இருந்து வருகின்றது. இவ்வாறு பின்தங்கிய சமூகம் என அடையாளப்படுத்திக் கூறுவதை மலையகத்தின் சில புத்திஜீவிகளும் மேன்நிலையாக்கம் அடைந்த மேல் நோக்கிய சிந்தனையுடையவர்களும் விரும்புவதில்லை. ஆனால் மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டுக் கூறுகள் ஒவ்வொன்றையும் உட்புகுந்து நோக்கும் போது தான் உண்மை நிலைகளையும் யதார்த்த சூழலையும் விளங்கிக் கொள்ள இயலும். கடந்த 175 வருடகால வரலாற்றை நோக்கும் போது மலையத் தமிழ் மக்கள் தமது வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமான வாழ்க்கைப் பாதையில் வர்க்க இனத்துவ போராட்ட எதிர் நீச்சலிட்டே வந்திருக்கிறார்கள். அதன் காரணமான வளர்ச்சிகள் வேகமற்றவையாக இருந்த போதிலும் படிப்படியானவையாகி குணாம்சத்தில் தேசிய இன அடையாள மாற்றத்தைப் பெற்றிருக்கிறார்கள். தாமே மலையக மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொடுத்ததாகத் தம்பட்டம் அடித்து தம்மை வளர்த்து வந்த தொழிற்சங்க அரசியல் தலைமைகளின் செயற்பாடுகளுக்கும் அப்பால் தொழிலாளர்களின் மக்களின் போராட்டங்களும் எழுச்சிகளும் தான் அவர்களின் உரிமைகளுக்கும் எல்லைக்குட்பட்ட வளர்ச்சிகளுக்கும் அடிப்படைகளாகும். இவ் அடிப்படைகளில் ஒரு முக்கிய பங்கினை இலங்கையின் இடதுசாரி இயக்கம் குறிப்பாக மாக்சிச லெனினிச இயக்கம் வகித்து வந்துள்ளமையை வரலாறு என்றும் மறுத்துவிடாது. மலையகத் தொழிலாளிவர்க்கத்தையும் மக்களையும் சுயசிந்தனை, சுய பலம், சுய போராட்டம், சுயஎழுச்சிப் பாதை, இந்த மண்ணிற்குரியவர்கள், மண்ணையும் பொருளாதாரத்தையும் வளப்படுத்திய தொழிலாளர் வர்க்கம் என்ற போதமூட்டி புரட்சிகரப் பாதையில் வழிநடக்க வைத்த ஒரு காலகட்டத்தை மாக்சிச லெனினிச இயக்கம் திசைகாட்டியாகக் கொண்டிருந்தது. அது ஐம்பது அறுபதுகளிலான இரு தசாப்தங்களை வெற்றிகரமானதா முன்னெடுத்தது. எழுபதுகளுக்குப் பின்பான காலப்பகுதியின் வளர்ச்சி அல்லது சில முனை முன்னேற்றங்கள் என்று கூறப்படுவனவற்றில் அந்த ஐம்பது அறுபதுகளிலான மாக்ஸிச லெனினிசப் புரட்சிகர சிந்தனை செயற்பாட்டு வீச்சுக்களின் தாக்கம் செறிந்திருந்தமையை எந்த வரலாற்றாசிரியரும் மறுக்க மாட்டார். அவ்வாறு மறுத்தால் அது வஞ்சகத்தனமானதும் நேர்மையற்றதுமாகவே அமையும்.

## புதியவன்

இவை ஏன் இப்பொழுது சுட்டிக் காட்டப்பட வேண்டுமெனில் மலையகத்தின் இன்றைய நிலையில் கடந்த காலம் உரியவாறு கண்டறியப்படல் வேண்டும் என்பதற்காகவேயாகும். இன்று மலையகத்தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற நிலைக்கு வந்துள்ளனர். அவ்வாறெனில் சுய நிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கு எவ்வாறான மார்க்கத்தில் எத்தகைய அரசியல் வழிகாட்டலில் மலையக மக்கள் வழிநடப்பது என்ற தேடல் ஒன்று உருவாகி வருகின்றது. அதில் மலையக இளந்தலைமுறையினரான இளைஞர்களும் யுவதிகளும் முன்னணியில் நிற்க வேண்டிய சமூக நிர்ப்பந்தம் எவ்வகையிலும் தட்டிக்கழிக்கப்பட முடியாத ஒன்றாகும்.

பின் தங்கிய சமூகச் சூழல் நிலவுகின்ற முரண்பாடுகள் ஒடுக்குமுறைகள் மேலெழும்பி நிற்கின்ற எந்தவொரு சமூகத்திலும் இளம் தலைமுறையினரின் சிந்தனை வேகமும் செயல் வீச்சும் அவசியமானதாகும். இந் நிலையிலேயே ஒவ்வொரு இளைஞனையும் யுவதியையும் சமூகப் பொறுப்புணர்வு எதிர்நோக்கியுள்ளது. மலையக மக்களது கடந்த கால நிகழ்காலப் பின்தங்கிய நிலைமைகளும் ஒடுக்குமுறைகளும் இருந்து வருவதற்குரிய காரணகாரியங்களையிட்டு ஏன்? எப்படி? எதற்காக? யார்? யாருக்கா? போன்ற அடிப்படையான கேள்விகள் எழுப்பப்படல் வேண்டும். கேள்வி எழுப்பும் ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் அவற்றுக்குரிய சரியான விடைகளையும் தேடி நிற்க வேண்டும். இதுவரை விடை தேடிநின்றவர்களில் பலர் பழைமை வாய்ந்ததும் ஒரு சிலருக்கு மட்டுமே நன்மை பயப்பதான அரசியல் பொருளாதார குறுகிய வட்டத்திற்குள்ளேயே நின்று விரக்தியடைந்து கொண்டனர். நமது சமூகத்தின் கடந்தகால வரலாறு சரியான படி கண்டறியப் படவில்லை. வரலாற்றைப் படிப்பது என்பது வெறுமனே நிகழ்வுகளை எடுத்துச் சொல்வதோ சுட்டிக் காட்டுவதோ மட்டுமல்ல. அந்த வரலாற்று நிகழ்வுகளின் ஊடே மலையக மக்கள் சமூகத்தின் பொருளதார அரசியல் சமூக பண்பாட்டு வாழ்வியல் எவ்வாறு கட்டமைக்கப் பட்டு முரண்பாடுகள் எதிர்ப்புகள் போராட்டங்கள் என்பனவற்றின் ஊடாக வாழ்வியலாகி வழி நடந்து வந்தது என்பதை மக்கள் சார்பான பரந்த ஒரு உலக நோக்கின் ஊடே பார்ப்பதாகும்.

கடந்த காலத்தை உரியவாறு நமது இன்றைய இளைய தலைமுறையினர் படிப்பார்களேயானால் பின் தங்கிய நமது சமூகத்தை மாற்றியமைக்க வேண்டிய சமூகப் பொறுப்பை ஒவ்வொரும் பெறமுடியும். நான் எனது என்ற குறுகிய சிந்தனையிலோ அன்றி சமூகம் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன? நாம் படித்தோ அல்லது தொழில் செய்து கொள்வதால் மட்டும் முன்னேறி விடலாம் என்ற சுயநலப் போக்கினாலோ அல்லது ஏற்கனவே இருந்து வரும் தொழிற்சங்க அரசியல் தலைமைகளுக்குப் பின்னால் இழுபட்டுச் செல்வதாலோ மலையக சமூகத்தின் பின் தங்கிய நிலையினை மாற்றியமைக்க முடியாது என்ற உண்மையை இளைய தலைமுறையினர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பின் தங்கிய நிலையில் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு அடிமைச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுள்ள ஒரு சமூகம் தமது அடிமை நிலையையும் கண்களுக்கு தெரிந்தும் தெரியாததுமாக இருந்து வரும் அடிமைச் சங்கிலிகளை அறுத்தெறிய முன்வராது விட்டால் எந்த சமூகமும் அடிமைகளாகவும் வாய் பேசும் மந்தைகளாகவும் இருந்து கொள்வதற்கே தகுதியுடையனவாக இருக்கும் என்ற உலகப் பொது உதாரணத்தை நமது மலையக இளம் தலைமுறையினர் ஆழ்ந்து நோக்கிச் சிந்திப்பது அவசியமாகும்.

மலையகத்தின் இன்றைய இளம் தலைமுறையினரிடையே பரந்தளவிலான சமூகச் சிந்தனையும் செயற்பட வேண்டும் என்ற உத்வேகமும் கொண்ட ஒரு தொகுதியினர் முன்னரங்கிற்கு வர ஆரம்பித்துள்ளனர். அதே வேளை சமூகத்தை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லும் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுப் பிற்போக்குத் தனங்கள் பெரும்பான்மையான இளைஞர்கள் யுவதிகளை திசைதிருப்பிச் செல்லக் கூடிய அபாயங்கள் இருந்துவருவதைக் காணமுடிகின்றது. மேற்கூறிய அம்சங்களின் நச்சுத்தனங்கள் பற்றி ஒவ்வொன்றாக நோக்கவும் இளைஞர் யுவதிகளுக்கு எடுத்துக் கூறி அறிவூட்டவும் பரந்த செயற்பாடுகள் அவசியம். இத்தகைய செயற்பாட்டிற்கு அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் என்ற மாயமான் அமைப்புகளால் எதனையும் சாதிக்க முடியாது. மாக்ஸிச உலக நோக்கினை வரித்துக் கொண்ட மாக்சிச லெனினிச வழிகாட்டலில் முன்செல்லக் கூடிய பாட்டாளி வர்க்க அரசியல் உணர்வு பெற்ற இளம் செயல் வீரர்கள் வீராங்கணைகளாலேயே சாதிக்க முடியும். அத்தகையோரே சமூகப் பொறுப்புள்ளவர்களாக முன்னோக்கிச் செல்வோராவர்.

# பாரிஸ் கலைச்செல்வன் மறைவுக்கு அஞ்சலி!



கடந்த 05- 03- 2005 அன்று பாரிஸ் நகரில் நண்பர் க. கலைச்செல்வன் மாரடைப்பினால் சாவடைந்தார் என்ற செய்தி பெரும் அதிர்ச்சியாக அமைந்தது. கலைச்செல்வன் இலங்கையின் வடபுலத்தைச் சேர்ந்தவர். புலம் பெயர்ந்து பாரிஸ் நகரில் வாழ்ந்து வந்தவர். தானுண்டு தன் வாழ்வுண்டு என சராசரி மனிதராக வாழ்ந்த ஒருவரல்லர். பரந்த சமூக அக்கறை கொண்டவராகவும் சமூக முரண்பாடுகளை ஆழ்ந்து நோக்குபவராகவும் தன்னை தகவமைத்துக் கொண்டு சமூக விடுதலை நோக்கிய கருத்தியல் தேடல்களில் ஈடுபட்டு வந்தவர். அந்த வகையில் முற்போக்கான கருத்தியல் கூறுகள் எங்கிருந்து கிடைப்பினும் அவற்றைப் படிப்பதிலும் அவற்றிலிருந்து பெறக் கூடியவற்றைப் பெறுவதிலும் ஆர்வம் காட்டி வந்தவர். புலம் பெயர் சூழலில் வாழ்ந்து வந்த நம்மவர்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முற்போக்கான ஜனநாயக ரீதியான கருத்தியல் கூறுகளை அறிமுகப்படுத்தி வளர்த்தெடுக்கவும் தன்னாலான முன் முயற்சிகளை ஏனைய நண்பர்களுடன் இணைந்து முன்னெடுத்து வந்தவர் கலைச்செல்வன். அத்தகைய இயங்கு தளத்திலே பல்வேறுபட்ட கருத்தியல் முரண்பாடுகள் ஏற்பட்ட சூழலிலும் சமூக அக்கறை மனிதநேய அடிப்படை இடதுசாரி சார்பு போன்றவற்றின் ஊடே ஒரு ஜனநாயக ரீதியான கருத்துரைப்புகளை முன்னெடுப்பதில் கலைச்செல்வன் முன்னின்று வந்தார். அதன் வெளிப்பாடுகளையும் நடைமுறைச் செயப்பாடுகளையும் கருத்தரங்குகள் கலந்துரையாடல்கள், சஞ்சிகை வெளியீடு போன்றவற்றின் மூலம் நண்பர்களுடன் இணைந்து முன்னெடுத்து வந்தவர்களில் முக்கியமானவராக கலைச்செல்வன் இருந்தும் வந்தார். கலை இலக்கியத்திலும் சமூக அரசியல் பண்பாட்டுத்தளங்களிலும் தனது பங்களிப்பை வழங்கி வந்த கனகசிங்கம் கலைச்செல்வனின் மறைவு புலம் பெயர் சூழலில் ஒரு இடைவெளியை ஏற்படுத்தி சோக நிகழ்வாகிக் கொண்டது. அவரது மறைவுக்கு புதிய பூமி தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவரது மறைவால் துயரடைந்து நிற்கும் துணைவியார் லக்ஷ்மிக்கும் தாயார் சகோதரர்களுக்கும் மற்றும் உறவினர்கள் நண்பர்களுக்கும் புதிய பூமி தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றது.

-ஆசிரியர் குழு-

# குத்துக் கரணங்கள்

பட்டணத்தடிகள்

## சத்திர சிகிச்சை நிபுணர்களின் சமுதாய அறுவைச் சிகிச்சை

அண்மைக் காலங்களில் பல்கலைக் கழகங்களில் பகிஷ்கரிப்பு, போராட்டம் என்பன சாதாரணமானதாக உள்ளது. ஆனாலும் அவற்றில் மிகுந்த அக்கறையுடன் கவனிக்க வேண்டிய பிரச்சனை ஒன்று யாழ்- பல்கலைக் கழகத்தில் கொழுந்து விட்டு எரிகின்ற மருத்துவ பீட மாணவர்களின் போராட்டமே அது.

இலங்கையின் எந்தப் பல்கலைக்கழகத்திலும் மருத்துவ பீட மாணவர்கள் பிரச்சனைக்கு உரியவர்களாக மாறுவது குறைவு. அதிலும் யாழ் மருத்துவ பீடம் ஒரு சாதனையின் அடையாளமாகத் திகழும் ஒரு நிறுவனம். கடந்த இரு தசாப்த காலத்தில், மிகக் கொடிய யுத்த காலத்திலும் இடையறாது இயங்கியதுடன், யுத்த கால நெருக்கடிகளைச் சமாளிக்கும் வகையில் மருத்துவர்களையும் உருவாக்கிக் கொண்டிருந்தது.

அந்த வரலாற்றின் தொடர்ச்சியிலேயே இன்று சிக்கல் நிலை தோன்றியுள்ளது. அதாவது மருத்துவ பீட மாணவர்களைப் பொறுத்தவரையில் நிறுவனம் சார் கல்வியுடன் புலம் சார் பயிற்சி அதிகம் தேவையானது.

அதனை போதனா வைத்தியசாலையில் சேவையாற்றும் விசேட வைத்திய நிபுணர்களாகிய போதனாசிரியர்களாலேயே வழங்கப்பட வேண்டும்.

இதில் சத்திர சிகிச்சை சார் வைத்திய நிபுணர்கள் தமது வைத்தியசாலை மட்ட போதனை நடவடிக்கைகளைத் தவிர்ப்பதுதான் மாணவர்களின் போராட்டத்துக்குக் காரணம். யாழ்- பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் போதனாசிரியராக நியமிக்கப்பட்டதன் எதிர் வினையே வைத்தியசாலை மருத்துவ நிபுணர்களின் பகிஷ்கரிப்புக்குக் காரணம்.

முன்னர் இந்த நிலை எழுந்த போது பல்கலைக்கழக உயர் நிர்வாகம் அந்த நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணரை சேவையில் இருந்து இடை நிறுத்தியது. பாதிக்கப்பட்ட வைத்திய நிபுணர் நியாயம் கேட்டு நீதி மன்றத்தை நாடினார். நீதிமன்றம் அவரை மீண்டும் நியமனம் செய்யும் படி பல்கலைக் கழக நிர்வாகத்தைப் பணித்தது. இதன் பின் விளைவே அண்மைக்கால பிரச்சனைகளுக்கு ஏதுவானது.

மருத்துவ பீடத்தின் 3ம், 4ம் ஆண்டு மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது நிலை தர்ம சங்கடமானது.அவர்கள் இறுதிப்பரீட்சைக்குத் தயாராகும் விதத்தில் தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த இக்கட்டான நிலையை அவர்களது போதனாசிரியர்கள் பகடைக்காயக வைத்து சதுரங்கம் ஆடினால் மாணவர்கள் என்ன செய்வார்கள்?

ஆர்ப்பாட்டம் செய்து, ஊர்வலம்போய், பல்கலைக் கழக மாணவர்கள் ஆணைக்குழு வரை பேச முயன்றும் விடை கிடைக்கவில்லை. யாழ்- மருத்துவ பீட மாணவர்களுக்கு மட்டும் ஏன் இந்த அவல நிலை?

போதனாசிரியர்களாக இருக்கும் வைத்திய நிபுணர்களுக்கு ஒன்று சொல்லலாம். சட்ட ரீதியாக ஏற்பட்ட முறுகல் நிலைக்கு தீர்வு காண சட்ட ரீதியாகவே மாற்று நடவடிக்கையை முன் கொண்டு செல்ல வேண்டும். அதாவது நீதி மன்றத்தை நாடுதல் தகும். அதை விடுத்து அப்பாவி மாணவர்களைப் பழி வாங்குவது என்பது எந்த நியாயநீதிக்கும் உட்பட்டதன்று. சில பிற்குறிப்புகள், இன்று யாழ்- மருத்துவ பீடத்தின் 2ம், 3ம் ஆண்டுகளில் இருக்கும் மாணவர்களில் சிங்கள, முஸ்லீம் மாணவர்களும் அடங்குகின்றனர். அவர்களுக்கு பின்னால் யாழ்- பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முஸ்லீம், சிங்கள மாணவர்கள் அங்கு செல்வதைத் தவிர்க்கும் விதத்தில் போராடி வருகின்றனர்.

அதாவது முன்னர் சென்றவர்கள் தேசிய ஒற்றுமையின், மொழி வழி சமூகப் புரிந்துணர்வின் அடிப்படையில் சுமூகமாக கல்வி கற்று வருபவர்கள். பின்னர் செல்ல மறுப்பவர்கள் குறுகிய இனவாத அரசியல் போக்காளர்களின் பின்புலத்தில் நின்று பொருந்தாத காரணங்களுக்காகப் போராடுபவர்கள். இந்த நிலையில் யாழ்- மருத்துவ பீட போதனாசிரியரிகளின் குளறுபடி நிலை பொய்யான காரணங்களுக்கு தீனி போடுவதாக அமைந்துவிடும்.

அடுத்தது, பிரதி வருடமும் சில நூறு வைத்தியர்கள்- யாழ் மருத்துவ பீடத் தினால் உருவாக்கி வெளிவிடப் படுகின்றனர். அப்படி இருக்கையில் வடபகுதி வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு மருத்துவர்கள் பற்றாக்குறை என்ற துன்பம் தொடர்கதையாக இருப்பதற்குரிய காரணத்தை தேடிப் பார்க்க வேண்டிய ஒரு கட்டாயம் ஒன்று இன்று எழுந்துள்ளது. இப்படியான அற்ப காரணங்களுக்காக அந்த மாணவர்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு வெளியேற்றப்படும் போது, அவர்கள் புதிய எல்லைக்களுக்கான தேடலுடன் வெளிவருகின்றனர். அதாவது தமது 'குருவானவர்களின்' குதர்க்கங்களுள் நின்று பிடிக்க முடியாது என்ற புரிதல்களுடன் வடபகுதிக்கு வெளியேயான வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதுடன் தமது எதிர்கால மேற்படிப்புக்களையும் தொடர்வது சுலபம் என்ற நிலையில் வெளியேறுகின்றனர்.

எனவே போதனாசிரியர்களாக இருக்கும் மருத்துவ நிபுணர்களின் கைகளிலேயே நமது சமுதாயத்தின் நோய் நீக்கும் பணி தங்கியுள்ளது. பிழையான சத்திர சிகிச்சையைத் தொடர்ந்து செய்வதன் மூலம் தமது மக்கள் திருப்பணியின் புனிதத் தன்மையை தரம் குறைத்து கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# நேபாள முடியாட்சியை எதிர்த்த மக்கள் விடுதலைப் போராட்டம்

-ஸ்ரீ-



இரண்டு தடவைகள் தலைநகர் காத்மாண்டுவில் விடுதலைப் படையினர் தடை செய்யப்பட்ட போது நவீன ஆயுதம். ஆளணியுடன் கூடிய அரச படைகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

நேபாளத்தில் மாவோவாதிகள் என்று கூறப்படும் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியினது விடுதலைப் படையினரின் ஆயுதப் போராட்டம் கடந்த பத்து வருடங்களாக இடம்பெற்று வருகிறது. 1991ல் இடம் பெற்ற முதலாவது தேர்தலில் 205 ஆசனங்களைக் கொண்ட சபையில் 9 ஆசனங்களை மாவோ வாதிகள் வென்றனர். அச்சமயம் அவர்களது அரசியல் கட்சியாக விளங்கிய ஜான் மோச்சா சில உள்ளூராட்சி மன்றங்களையும் வென்றது.

ஆனால் நேபாள காங்கிரசும் அரச அதிகாரிகளும் மாவோ வாதிகளுக்கு எந்த ஒத்துழைப்பையும் வழங்கவில்லை. அவர்களின் தொகுதிகளுக்கான நிதிகளை முடக்கிவைத்தனர். பாடசாலைகள் இல்லை, வீதிகள் இல்லை, நன்னீர்திட்டமும் இல்லை. ஜான் மோச்சா எம். பிக்களில் பலர். மொழியிலும் பண்பாட்டிலும் நேபாள மொழி, பண்பாடு என்பனவற்றிலிருந்து வேறுபட்டிருந்தனர்.

அந்த எம். பிக்கள் பாராளுமன்றத்திற்கு அவர்களின் தேசிய உடையில் சென்றபோது பொலீசாரால் பாராளுமன்றம் செல்லவிடாது தடுக்கப்பட்டனர். இதன் காரணமாக அடுத்து இடம் பெற்ற தேர்தலை ஜான் மோச்சா பகிஷ்கரித்தது. நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோ பிரிவு) **CPN(MAO)** 1995ல் மக்கள் யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியது.

எவ்வாறாயினும் மேற்கூறிய ஜான் மோச்சா கட்சியனரில் ஒரு பகுதியினர் ஆரம்பத்திலிருந்தே ஆயுதப்போராட்டத்தை வலியுறுத்தி வந்தனர். பொலீஸ் நிலையமொன்றைத் தாக்கிய முதலாவது சம்பவம் 1986ம் ஆண்டிலேயே இடம் பெற்றதாக பதிவுகள் உண்டு. 1995ல் ஆயுதப் போராட்டத்திற்கு புத்துயிர் கொடுத்ததிலிருந்து மாவோவாத விடுதலைப் படையினர் பெருவளர்ச்சி கண்டுள்ளனர்.அவர்களின் எண்ணிக்கை 29,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. நேபாள அரசின் தகவலின்படி இதில் 8000 படையினரும் 20000 பேர் அடங்கிய துணைப்படையும் உள்ளது.

என்ன வார்த்தை மாய்மாலம் கொட்டினாலும் நேபாளத்தின் தலைநகரான காத்மாண்டுவிற்கு வெளியே போனால் நாட்டின் பெரும் பகுதியில் விடுதலைப் படையினரின் ஆட்சி இடம் பெறுகிறது.

நேபளகுஞ் என்ற நகரம் இந்திய எல்லையிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நேபாளத்தின் மத்திய மேற்குப்பகுதியின் நிர்வாக தலைமையகமாகவும் பிரதான சந்தை நகரமாகவும் விளங்குகிறது. அத்தோடு பாங்கே மாவட்டத்தின் தலைமையகமாகவும் விளங்குகிறது.

இங்கு நேபாள அரசின் பெரிய படைப்பிரிவும் ஆயுதந்தாங்கிய பொலீசாரும் சாதாரணப் பொலீசாரும் உள்ளனர். ஒவ்வொரு வீதி மூலையிலும், சந்திகளிலும் நிரந்தரமான வீதித் தடைபோடப்பட்டுள்ளன. கனரக ஆயுதங்களுடன் கால் நடையாக இராணுவ காவல் இடம் பெறுகிறது. நேபாளருஞ் நகரத்தில் இரண்டு அர

## இமயத்தின் உச்சியில் ஒரு செம்புரட்சி



சாங்கங்கங்கள் இயங்குகின்றன. ஒன்று முடிக்குரிய அரசாங்கம். மற்றது விடுதலைப்படையினரின் அரசாங்கம். ஆனால் கிராமப்புறங்களில் ஒரு அரசாங்கமே உண்டு. அங்கே விடுதலைப்படையின் ஆட்சி மட்டுமே இடம் பெறுகிறது. நேபாளத்தில் 75 மாவட்டங்கள் உள்ளன. அதில் ஆகக் குறைந்தது 45 மாவட்டங்கள் விடுதலைப் படையினர் வசம் உள்ளன.

ஏனைய மாவட்டங்களில் கூட மாவட்ட நகரம் அரசின் கட்டுப்பாட்டின் கீழும் கிராமங்கள் விடுதலைப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளன. நேபாளத்தின் தலைநகரான காத்மாண்டுவிற்கூட முன்னூறு ஆயுதந்தரித்த விடுதலைப் போராளிகள் உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பங்கே, பார்டியா மாவட்டங்களின் கிராமங்களில் விடுதலைப்படையினர் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களை சுவீகரித்து காணியற்றவர்களுக்கு கொடுத்துள்ளனர். ஒருவர் வைத்திருக்கும் நிலம் அவரது குடும்பத்தவர்களாலேயே பண்படுத்தப்படவேண்டும். வேறு எவரையும் கூலிக்கு அமர்த்தக்கூடாது. பெரும் நிலச் சுவாந்தர்கள் நேபாளருஞ், காத்மாண்டு நகரப்பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். முன்பு தாழ்த்தப்பட்ட மக்களாகிய தாறுஸ் காமியாஸ் நிலத்தைப் பண்படுத்தினார்கள். விளைச்சலில் அரைவாசி நிலச் சொந்தக்காரனுக்குப் போனது. அந்த முறை இப்போது ஒழிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்படையினர் நேபாளத்தில் ஒரு மாற்று ஆட்சி முறையை ஏற்படுத்தியுள்ளனர். அவர்களுக்கென்ற நீதி அமைப்பொன்றுள்ளது. நிலச்சுவாந்தர்கள் பலர் தண்டனை பெற்றுள்ளனர். மிகப் பெரும்பாலானவர்கள் வேலை செய்யுமாறு பணிக்கப்பட்டனர். வரியும் அறவிடப்படுகிறது. பெரிய முதலாளிகளிடமிருந்தும் வனப்பகுதி ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் பெருவரி அறவிடப்படுகிறது.

அவர்களுக்கென ஜன கானந்திரிக் என்ற எவ் எம் வானொலி உண்டு. இப்போது அவர்கள் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். றொல்பா மாவட்டம் நேபாளத்தின் மத்திய மேற்குப்புறமாயுள்ளது. அங்கே 92 கி. மீட்டர் நீளமான மலைப்புற நெடுஞ்சாலை அமைக்கப் படுகிறது. நெடுஞ்சாலை அமைப்பு வேலையில் தினமும் பத்தாயிரம் பேர் வரை வேலை செய்கிறார்கள். ஏற்கனவே மூன்று மாதத்தில் முப்பது கி. மீட்டர் நெடுஞ்சாலைக் கட்டுமான வேலை முடிவடைந்து பயன் படுத்தப்படுகிறது.

அவர்கள் ஒரு கூட்டுறவு வங்கியையும் ஒரு மருத்துவக் கல்லூரியையும் ஆரம்பித்துள்ளனர். றுக்கும் மாவட்டத்தில் அமைந்துள்ள சிஸ்னே வாவியில் ஒரு சிறிய நீர்மின் திட்டத்தை ஏற்படுத்தி சில ஆயிரம் மக்களைக் கொண்ட பக்கத்து கிராமத்திற்கு மின்சாரம் வழங்குகிறார்கள். கிராமப்புறத்தில் தங்களுக்கென ஒரு தளத்தை அமைப்பதில் விடுதலைப் படையினர் வெற்றி கண்டுள்ளனர். கிராமப்புறமக்களில் கால்வாசிப் பேர் பல்வகைப்பட்ட சமூகப் புறக்கணிப்புக்குள்ளானவர்கள். அதில் சில "தீண்டாமை" -வேறு சில பல்வகைப்பட்ட சமூகப்புறக்கணிப்பு என்ற வடிவில் உள்ளன. தீண்டாமை, சாதிப் புறக்கணிப்பு என்பவை போன்றவற்றைக் கடைப்பிடிப்பவர்களுக்கு கடுந் தண்டனை வழங்கப்பட்டுள்ளன. மிகவும் பாரதூரமான சந்தர்ப்பங்களில் மரண தண்டனையும் வழங்கப்பட்டுள்ளன.

அரசியற்கட்சிகள் 1991ம் ஆண்டிலிருந்து செய்யத் தவறிய வேலைகளை விடுதலைப்படையினர் செய்வதால் அவர்களுக்கு கிராமங்களில் நல்லாதரவுண்டு.

விடுதலைப் படையினருடன் போரிட்டு மாண்ட அரச படையினரின் குடும்பங்களுக்கும் காணிகளை வழங்கியுள்ளனர். அரச படையில் உள்ளவர்கள் வறுமையின் காரணமாகவே படையில் சேர்ந்தனர். அவர்களின் நலன்களை விடுதலைப்படையினரே கவனிக்கின்றனர். இது மரணித்த விடுதலைப்படையினரின் குடும்ப நலன்களைக் கவனிப்பது போன்றதாகும்.

அரசின் நடவடிக்கைகளால் விடுதலைப்படையினருக்கு ஆட்களைத் திரட்டுவதில் எதுவித சிக்கலுமில்லை. இறந்த ஒவ்வொரு முடிக்குரிய அரச படையின் குடும்பத்தவர்களும் விடுதலைப் படையினருடன் சேர்ந்த வண்ணமிருக்கின்றனர்.

விடுதலைப்படையனரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஜனநாயகம் இல்லையெனக் கூறும் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் என்பன மன்னர் பெப்ரவரி முதலாம் திகதி பாராளுமன்றத்தைக் கலைத்து மூன்று வருடங்களுக்கு தனது நேரடிக் கட்டுப்பாட்டில் அரசைக் கொண்டு வந்து பிரதான அரசியற் கட்சித்தலைவர்களைச் சிறையில் வைத்த போது ஏனோ தானோ வென்று அறிக்கை விட்டு அமைதியாய் உள்ளனர். இந்த நாடுகள் எல்லாம் நேபாளத்தில் ஒரு சுதந்திரமான சுய சார்புள்ள அரசாங்கம் வருவதை உள்ளூர விரும்பவில்லை. அங்கு ஒரு பொம்மை ஆட்சியையே விரும்புகின்றனர். அப்பேற்பட்ட ஆட்சியே இந்த நாடுகள் நேபாளத்தைச் சுரண்ட அனுமதிக்கும்.

இச்சந்தர்ப்பத்தில் விடுதலைப்படையினர் ஒரு பரந்த ஐக்கிய முன்னணிக்கு அழைப்பு விடுத்துள்ளனர். மன்னராட்சிக்கும் முடிக்குரிய அரச படைகளுக்கும் எதிராக மக்கள் நலனில் அக்கறையுள்ள அனைவரையும் அணி திரளுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நேபாள விடுதலைப்படையினரின் அனுபவங்களில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை ஏராளமாய் உள்ளன. அதே வேளை தென்னாசியச் சூழலில் மாக்ஸிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை அடி ப்படையிலான ஒரு செம்புரட்சி நேபாள மண்ணிலே வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறமை எல்லோரினதும் கவனத்திற் குரியதாகும்.

# இந்து இராச்சியத்தில் சாதியம்

உலகிலே ஒரே ஒரு இந்து நாடாக நேபாளம் விளங்குவதாகக் கூறி பெருமைப்படுபவர்கள் ஏராளம். அந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் அனுபவிக்கும் சமூகக் கொடுமைகள் ஏராளம்.

சாதியம் இந்தியாவில் இலங்கையில் மட்டும் தான் இருந்து வருவதாகச் சிலர் நம்புவதுண்டு. ஆனால் சாதியமும் அதன் உடன் பிறப்பான தீண்டாமையும் வெவ்வேறு அளவுகளில் தென்னாசிய நாடுகளில் இருந்து வருகின்றன என்பதே உண்மையாகும். முஸ்லீம் நாடுகளான பாகிஷ்தான், பங்களாதேஷ் நாடுகளில் கூட வெவ் வேறு அளவுகளிலும் நடைமுறைகளிலும் சாதியம் இருந்து வருகின்றது. நேபாளத்தில் இச்சாதியம் தீண்டாமை கடுமையானதாகக் கடைப்பிடிக்கப்பட்டும் வருவதை அண்மைக் காலங்களில் ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன. சாதியம் தீண்டாமை மற்றும் சமூக நீதி மறுப்புக்களை நேபாளத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்துள்ளனர் என்பது இப்போது வெளிப்பட்டு வருகிறது.

நேபாளத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக ஜனநாயகம் நிலவிய காலத்திற் கூட சாதியின் அடிப்படையில் நேபாளத்தில் மக்கள் துன்புறுத்தப்பட்டனர்.

நேபாளத்தில் சமூக பொருளாதார பண்பாட்டு ரீதியில் அநீதிகளை அனுபவிக்கும் மக்களைப் பற்றிய சிறு குறிப்புகளை கீழே தருகிறோம்.

1990ம் ஆண்டு "ஜனநாயக" அரசியற் சட்டத்தில் சகல மக்களும் சமமானவர்கள் எனக் கூறப்பட்டபோதும் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் சமூகப் புறக்கணிப்பை நீக்கும் வகையில் எதுவித சரத்தும் காணப்படவில்லை.

அரச உத்தியோகத்தில், கல்வியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதுவித ஒதுக்ககீடும் இல்லை. காணிச்சீர் திருத்தம் இல்லை. அரசியற் கட்சிகளின் தலைமைப் பீடத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் இல்லை.

நாட்டில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த எவரும் நீதித்துறையில் இல்லை. 205 பாராளுமன்ற அங்கத்தவர்களில் ஒருவராவது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரில்லை. நிர்வாகியாகவோ, வியாபாரியாகவோ துறைசார் நிபுணர்களாகவோ எவருமே தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இல்லை.

நேபாள ஆசிரிய சங்கத்தில் மாத்திரமே ஒரேயொரு உத்தியோகத்தர் இருக்கிறார்.

கிராமப்புறத்தில் 85 வீதமான மக்கள் வாழ்கின்ற போதும் நாட்டிற்கு ஜனநாயக ஓட்டத்தை வழங்கிய 1989, 90 ஜனநாயக இயக்கம் சமூக ஒடுக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. அரசியற் கட்சிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை அபிவிருத்தி, பண்பாடு சம்பந்தப்பட்ட வையாகவே கருதுகின்றன. 1990 களில் தாழ்த்தப்பட்ட மக்களை சமூக கொடுமைகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் பாராளுமன்றத்திற்கு ஒரு தனிப்பட்ட பிரேரணை வந்தது. அந்தப் பிரேரணையை சபையில் சமர்ப்பிப்பதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியது.

நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாஓ)யின் தலைமையிலான மக்கள் விடுதலைப்படையினரே இந்த மக்களின பிரச்சினைகளை அரசியற் பிரச்சினையாக எடுத்துள்ளனர். கிராமப் புறத்தில் விடுதலைப்படையினர் செல்வாக்குடன் திகழ்வதற்கு ஒரு காரணம் அவர்கள் தீண்டாமை, கேவலமான சமூக நடைமுறைகள் என்பவற்றைத் தடைசெய்து அதை மீறுபவர்களுக்கு தண்டனையும் வழங்கியுள்ளனர். முதற் தடவையாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

விடுதலைப் படையினரின் நிர்வாகத்தில் பத்து வீதமானவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் இருக்கிறார்கள். விடுதலைப்படையில் கணிசமான எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட மக்களும் ஏனைய பின் தங்கிய மக்களும் உள்ளனர்.

விடுதலைப்படையினரின் கட்டுப்பாடில்லாத பகுதிகளிற்கூட இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு அமைப்புகளில் அணி திரண்டுள்ளனர். அரசியல் விழிப்பு பெற்றுள்ளனர்.

-சிறீ-

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஆன்மிக வறுமையின் அவலத்தை காட்டும்

## மு.பொன்னம் பலத்தின் விசாரம் நூல்

விசாரம் (கட்டுரைகள்), மு.பொன்னம்பலம், சொந்த வெளியீடு, தெஹிவளை, டிசெம்பர் 2004, ப.136, ரூ. 200.00.

விஞ்ஞானத்தையும் பொருள் முதல் வாதத்தையும் மறுத்துக் கொண்டே, ஆன்மிகக் கருத்துக்களை, விஞ்ஞானரீதியாக, நிறுவுகிறவர்கள் நெடுங்காலமாகவே இருந்து வந்துள்ளனர். முற்பிறவி, மீள்பிறப்பு, முடிவிலாத ஆன்மா, விதி என்பன, மனிதருக்குச் சில நேரங்களில் ஆறுதல் தருகின்ற கருத்துக்கள் தாம். சோதிடமும் மூடநம்பிக் கைகளும் வாஸ்து போன்ற பலவும் அப்படிப்பட்டவை தாம். வழி தெரியாத நிலையில் அவை வழிகாட்டுவது போலத் தெரிவதால், அவற்றைப் பலர் பற்றிக் கொள்ளுகிறார்கள், ஆன்மிகம் என்பதும் தப்பி ஓடுவதற்கு ஒரு வழியாகவே பலருக்கும் பயன்பட்டு வந்துள்ளது. பொதுவாக, ஆன்மிகச் சிந்தனைகளும் மதங்களை ஏதோவகையிற் சார்ந்தே அமைந்துள்ளன. ஆன்மிகத்தை நிலைநிறுத்துவதற்காகப் பொய்களைப் பயன்படுத்தப் பல ஆன்மிகவாதிகள் கூசுவதில்லை. விஞ்ஞானத்துக்குச் சவால்விட இயலாத சூழ்நிலையில், விஞ்ஞான அறிவையும் தகவல்களையும் திரிக் கவும் அவர்கள் முற்படுகின்றனர்.

மதச் சடங்கு சம்பிரதாயங்களோ அனுட்டானங்களோ ஒருவரது தனிப்பட்ட நம்பிக்கையாக உள்ளள வில் அவற்றை மறுக்கிற தேவை எவருக்கும் வேண்டியதில்லை. எனினும் அவை சமூகக் கேடான முறையில் அமைகிறபோது அவற்றைக் கேள்விக்குட்படுத்தக் கூடாது என்று யாரும் மறிக்க முடியுமா? அவ்வாறே, ஆன்மிகத்தின் பேரால் மனித விடுதலைக்கான போராட்டச் சிந்தனைகள் எதிர்க்கவும் மறுக்கவும் படும் போது, ஆன்மி கத்தின் பேராற்பரப்பப்படுகிற பொய்களை யாரும் புறக்கணிக்க முடியுமா? முக்கியமாக இக்காரணங் கருதியே மு.பொன்னம்பலத்தின் "விசாரம்" எனும் நூலை விமர்ச்சிக்க முற்படுகிறேன்.

பொன்னம்பலத்தின் சிந்தனைமீது அவரது தமையன் தளையசிங்கத்தின் ஆதிக்கம் ஏறத்தாழ முழுமையானது. பொன்னம்பலத்தின் குழப்பமான சிந்தனைகள் பலவற்றின் ஊற்றுமூலமாகத் தளையசிங்கமே அமைகிறார். எனினும், தளையசிங்கத்திடம் இருந்தளவு சிந்தனை வீச்சு, அவரது தம்பியிடம் இல்லை என்றே கூற வேண்டும்.

"விசாரம்" என்ற இக் கட்டுரைத் தொகுப்பில் உள்ள கட்டுரைகளிற் பொன்னம்பலத்தின் மாக்ஸிய விரோதமும் மாக்ஸியத்திற்கு மாறாக அவர் முன்வைக்கிற ஒரு வகையான 'ஆன்மிகப்' பாதையும் வற்புறுத்தப்படுகின்றன. இலக்கியம் பற்றிய அவரது பார்வையில் எழுதப்பட்ட கட்டுரைகள் நூலின் பிற்பகுதியிலுள்ளன. இக் கட்டுரைகளில் சில தொடர்பான விமர்சனங்களை முன்னரே எழுதியுள்ளேனெனினும், இக் கட்டுரைத் தொகுப்பில் தவறான தகவல்களின் அடிப்படையில் பல வாதங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுவதால் அவை விளைவிக்கக் கூடிய சிந்தனைக் குழப்பங்களைக் கருதி இந் நூலை விமர்சிப்பது தகும் என நினைக்கி றேன்.

முதலில் ஆன்மிக வலிமையை நிருபிப்பதற்காகவும் ஆன்மா ஒன்று இருப்பதற்கு ஆதாரமாகவும் அவர் தரும் சான்றுகள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். யூரி கெல்லர் என்பவர் ஆற்றலைக் கொண்டு இரும்பை வளைத்த கதையை வைத்து யோகிகள் "கூடு விட்டுக் கூடு பாய்வதை" நிறுவ அவர் முயலுகிறார் (ப.14)

யூரி கெல்லர் ஒரு கரண்டியை வளைப்பதாக ஒரு பிரமையை உண்டாக்கினாரே ஒழிய அதை வளைக்கவில்லை என்பதை 1980களில் பிரித்தானிய தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் விளக்கியிருந்தார்கள். கரண்டி வளைவான பொருள். அதனைப் பார்க்கிற கோணத்தை மாற்றுவதன் மூலம் அது மேலும் வளைவது போல ஒரு மயக்கம் ஏற்படுத்தப்படுகிறது. யாரும் நினைப்பது போற், கரண்டி மடக்கினாற் போல வளையவில்லை. யூரி கெல்லரால் நேரான ஒரு மெல்லிய கம்பியை வளைத்துக் காட்ட இயலாது. ஏனெனில் நேரான ஒரு பொருள் எப்போதும் நேராகவே தெரியும்.


யூரி கெல்லரின் "சித்து" விளையாட்டுகளை விடப் பெரிய விளையாட்டுக்களை நாம் தொலைக்காட் சியிற் காணலாம். எத்தனையோ புகழ் பெற்ற "மந்திரவாதிகள்" பல பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். இவர்களில் எவருமே தமது ஆன்ம சக்தி பற்றிப் பேசுவதில்லை. உள்ளுர்க் குறளி வித்தைக்காரர்கள் கூட அப்படிப்பட்ட பாசாங்குக்காரர் களல்லர்.

ஆவிகள், பேய், பிசாசுக் கதை களை எல்லாவற்றிலும் "உண்மை" இருப்பதாக விஞ்ஞானிகள் இப்போது ஏற்கிறார்களாம் (ப.14-15). எந்த விஞ்ஞானி என்பது ஒரு கேள்வி. அதை விட எந்த அடிப்படையில் ஏற்கிறார்கள் என்பது இன்னொரு கேள்வி. ஒருவர் உயிரோடு இருக்குக் போது அவரது உடலைச் சுற்றி வீசும் "கருமை யான? செம்மையான நீலமான மஞ்சளான ஒளி வட்டங்கள்" பற்றியும் அவர் பேசுகிறார். இவையெல்லாம் மனவளர்ச்சியில் முன்னேறினவன் கண்களுக்கு எளிதாகப் புலப்படுமாம் (ப.16). "இராசாவின் புதிய ஆடை" கூட அப்படிப்பட்ட வர்களுக்குத்தான் தெரிந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

விஞ்ஞானிகள் எலியொன்றை மெல்ல மெல்லச் சாகவைத்து அது சாகும் போது அது போன்ற வடிவுடைய இன்னொரு எலி வடிவில் வெளியேறுவதைத் தமது நுண் கருவிகளால் பதிவு செய்திருப்பதாகவும் அவர் தகவல் தருகிறார் (ப.12-13). இவ்வாறான போலி விஞ்ஞானப் புனைவுகள் எப்போதுமே இருந்து வந்துள்ளன. பவ்வொவ் என்ற சோவியத் விஞ்ஞானி யின் அகச்சார்பான விஞ்ஞானப் பரிசோதனை முடிவுகள் பற்றிக் கறாராக இருக்கக்கூடிய நூலாசி ரியருக்கு (ப.8) ஏன் பிறவற்றைப் பற்றிக் கொஞ்சமாவது விழிப்புடன் இருக்க இயலவில்லை?

"கீழைத் தேய உளவியல்" பற்றி அவர் எழுதும் போது, ஆரியர் இந்தியாவுக்கு வருமுன் வாழ்ந்ததா கக் கூறப்படும்(!) கபிலர், பதஞ்சலி போன்றோர் வழிவந்த 'உளவியல் சிந்தனை' இன்று மேற்கின் நவீன மாயாவாதங்களுள் ஒன்றான பராசைக்கோலொஜி எனும் போலி உளவியலுக்கு நெருக்கமானது என்று காட்ட முயலுகிறார். ஆரியருக்கு முந்தின எந்தச் சிந்தனை மரபின் ஆக்கங்களும் இந்தியாவில் ஆவணப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. பிந்திய வேத காலமும். உபநிடதங்கள் உருவான காலமுமே இந்திய மெய்யியல் மரபின் அறியப்பட்ட தொடக்க காலங்களாகக் காணப்படுகின்றன. ஏறத்தாழ இக்காலத்திலேயே, ஆசியாவின் பிற பகுதிகளிலும் மனித சிந்தனை முக்கியமான சில திருப்பு முனைகளைக் கண்டுள்ளது. வாழ்வியற் சூழ்நிலை மாற்றங்கள் பெருமளவில் இதற்குப் பங்களித்திருக்க வேண்டும். எனினும் மேற்கிற் கண்டுபிடிக்கப்படுகிற ஒவ்வொன்றுக்கும் "எங்கள் தாத்தாவின் தாத்தாவின்......... தாத்தா அப்பவே சொன்னார்" என்கிற வாதம் இந்தியாவில் மிக மலிவு. பொதுவாகவே வரலாற்றைப் பதிவு செய்வதில் அக்கறை குறைந்த ஒரு பாரம்பரியம், பல வகையான புளுகுகளை எளிதாகவே ஏற்புடையனவாக்கிவிடுகிறது. அது போக, பராசைக்கோலொஜி நம்பகமானது என்பதற்கு என்ன ஆதாரம்?

மேலைநாட்டறிஞர் எவருக்கேன் கீழைத்தேயச் சிந்தனையில் ஈடுபாடு ஏற்பட்டால் நம்மிற் சிலருக்கு அதுவே போதும் என்றாகி விடுகிறது. அவர்களது ஈடுபாடு மட்டுமே நமது தொன்மையான மரபின் மேம்பாட்டுக்குச் சான்றாகிவிடுகிறது. நட்முடைய சிந்தனை மரபில் கட்டுக்கோப்பான தர்க்கரீதியான பகுப்பாய்வுக்கு ஒரு தட்டுப்பாடு இருந்துள்ளது. இந்திய மெய்யியலில் இருந்த அத்தகைய போக்குக்கள் "ஆன்மிகச்" சிந்தனையின் மேலாதி




க்கம் காரணமாக எப்போதோ முடக்கப்பட்டுவிட்டன. பிராமண-சமஸ்கிருத மரபினின்று விலகி நின்ற பௌத்தத்தால் ஒரு வகையான இயங்கியலை உருவாக்க முடிந்தது. பொருள் முதல் வாதத்தை ஏற்காத பௌத்தத்தால் ஒரு எல்லைக்கு அப்பால் அந்த இயங்கியலை வளர்த்தெடுக்க இயலாது போயிற்று.

"கீழைத் தேய" என்ற பேரில் ஒரு பொதுமை நமது புண்பட்டதன் முனைப்புக்கு ஒரு ஒத்தடம் போல அமையலாம். ஆனால் விஞ்ஞான முறையிலான நவீன சிந்தனைக்கு மாற்றாக வெள்ளையர்கள் பாராட்டி மெச்சுகிற நமது பழைய சிந்தனைகள் பயன்படமாட்டா. முதலில்

**-சிவா-**

நாம் நமது தாழ்வு மனப்பான்மையை வெல்ல வேண்டும். ஆன்மிகம் என்ற பேரில் எங்கள் தாத்தாவிடம் ஒரு யானை இருந்தது என்று பேசுவது விவேகமாகாது.

விற்கென்ஸ்ற்றைன் மரணத்தைப் பற்றிச் சொன்னதற்கும் (ப.11-12) நூலாசிரியர் தனது தத்துவ வியாக்கியானச் சோடனைகளைப் பொருத்துகிறார். சொற்களின் பொருள் பற்றிய விரிவான ஆய்வு செய்தவர் விற்கென்ஸ்ற்றைன். சாவு என்பது அனுபவமல்ல என்ற அவரது கூற்று அனுபவம் என்ற சொல் தொடர்பான ஒரு விரிவாக்கம். விற்கென்ஸ்ற்றைன் விஞ்ஞான ரீதியான, தர்க்க அடிப்படையிலான சிந்தனையாளரே, ஒழிய வரட்டு ஆன்ம விசாரக்காரரல்ல.

மேற்குறிப்பிட்டவை, பொன்னம்பலத்தின் சிந்தனைகள் எத்தகைய சத்தியஞ் சார்ந்த அத்திவாரத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளன என்று ஒருவருக்குச் சிறிது உணர்த்துமென நம்புகிறேன். அதை உணரும் ஒருவர் மாக்ஸியம், தேசியம், வரலாறு, காந்தியம் போன்றவை பற்றிய அவரது அகச்சார்பான விளக்கங்களால் வியப்படைய மாட்டார். எனினும் மாக்ஸிய லெனினியத்தைச் சாடுவதற்கு இந்த 'ஆன்மிக வாதி' எந்தச்சாத் தானுடனும் கூட்டுச் சேரக் கூசமாட்டார் என்பதற்கு ஒரு உதாரணமாக, அவர் றோகண விஜேவீர சண்முகதாசன் தலைமையிலிருந்த கட்சியினின்று வெளியேறியதை மெச்சி விளக்குகிறதோடு 1971 ஏப்ரல் கிளர்ச்சிக்குக் கூட ஒரு சிறப்புச் சான்றிதழ் வழங்குகிறார் (ப.52).

றோகண விஜேவீர 1966 பேரினவாத ஊர்வலத்தில் பங்கு பற்றியதன் விளைவாகக் கட்சியினின்று விலக்கப்பட வேண்டிய சூழ்நிலை உருவானது. சண்முகதாசனுக்கு எதிராக இனவாதப் பிரசாரத்தை விஜேவீர பயன்படுத்தியது நமது ஆன்மிக வாதிகட்குத் தெரியாமல் இருக்கலாம். 1967 முதல் 1971 வரை அவர்களது பேரினவாதக் கொள்கை வெளிப்பாடுகளை ஒரு வேளை அவர்களை மெச்சிய மு.தளையசிங்கம் அறியலாமல் இருக்கலாம். அந்த இனவாத அரசியல் இப்போது எங்கே வந்து நிற்கிறது, அது ஏன் இயலுமானது என்று கூட விளங்க இயலாதளவுக்கு 'அண் ணன் காட்டிய வழியில்' போகிற அவரது சிந்தனை ஒரு முட்டுச் சந்தில் வந்து நிற்கிறதா?

விஜேவீர ஆயுதப் புரட்சியை நடத்து முன்னமே வடக்கில் அந்த மாக்ஸிய லெனினியக் கட்சி சாதியத்திற் கெதிரான ஆயுதப் போராட்டத்தை நெறிப்படுத்தியது தெரியாமல், அவர்களது "மூஞ்சியில் காறி உமிழ்வது போல" புரட்சி செய்தது பற்றி நெகிழ்கிற நமது ஆன்மிகவாதியின் உள்ளங் கவர் கள்வனாக விஜேவீர உள்ளார். அந்தப் "புரட்சி" இலங்கையின் அரசியலை எங்கே கொண்டுபோய் விட்டது என்று சிந்திக்க இயலாதளவுக்கு வன்மம் ஒருவரது கண்ணைக் குருடாக் கலாம் என்பது நம்பக் கடினமானது தான். ஆனால் அது அகச்சார்பான சிந்தனையின் ஒரு தர்க்கரீதியான அந்தம்.

ஸ்தாலினின் எல்லா மதிப்பீடுகளும் சரியானவையென்று மாக்ஸிய லெனினியவாதிகள் கொண்ட தில்லை. ஸ்தாலின் பற்றிய மாஓவின் மதிப்பீடு நூற்றுக்கு எழுபது சரி முப்பது பிழை என்பதாகும். எனினும் எந்தவித விசாரணையுமின்றித், த்ரொத்ஸ்கிவாதிகள் சிலரது ஸ்தாலின் விரோதப் பொய்களையெல்லாம் ஒருவர் ஆதாரமா கப்பயன்படுத்துவது அறிவின் பாற்பட்டது மல்ல, ஆன்மிகத்தின் பாற்பட்டது மல்ல.

மிகுதி அடுத்த இதழில்

## எல்லார்க்கும் எல்லாமாய் அமைந்தார் புகழ் மாலை

யாதுமாகி நின்றாய்- ஐயா
எங்கும் நீ நுழைந்தாய்- உலகில்
தீது நன்மை எல்லாம்- காசு
பதவி முன்பு பெறுமோ

இடதுசாரி என்பாய்- முன்னம்
இருந்த கதைகள் சொல்வாய்- கொள்கை
நடுவில் மாறினாலும்- பழியில்
நழுவும் பாதை கண்டாய்

கூட்டணிக்குப் பின்னால்- இன்று
பாட்டுப் பாடும் போதும்- அரசு
ஆட்சியாளரோடும்- அளவாய்
உறவு பேணுகின்றாய்

அறிவிலாத துறைகள்- தமிழும்
பதவி தேடவல்லாய்- யாரும்
பரிசு நிதிய மென்றால்- பகைமை
பார்த்திடாது கொள்வாய்

சொன்ன வார்த்தை தன்னை- யாரும்
என்னவென்று தெளிவாய்ப்- பொருளைக்
கண்டு கொண்டிடாத- வண்ணம்
கதைகள் சொல்ல வல்லாய்

சாதி சமயம் ஊர் உன்- பழைய
பாடசாலை என்றும்- ஒவ்வோர்
பேதம் சொல்லி வாழ்வாய்- வேண்டின்
பேதம் இல்லை என்பாய்

ஆளுக்கேற்ப வண்ணம்- சூழல்
இடத்துக் கேற்ற வண்ணம்- அவ்வவ்
வேளைக்கேற்ற வண்ணம்- கதைகள்
வேறு வேறு சொல்வாய்

முன்னை நாட் பகைவர்- உன்னை
மெச்சவேண்டி நீயும்- முன்னர்
சொன்ன சொற்கள் மாற்றிச்- சொல்லிற்
சித்து வேலை செய்வாய்

எத்தி வாழும் காக்கை- நரியை
எவரும் மெச்சினாலும்- நல்ல
புத்தியுள்ள பேர்கள்- உன்னைப்
புகழ ஞாயம் உண்டோ?

-பாரதீப் பாவாணர்-

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 12 ஏப்ரல் 2005 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 79

தேசிய பேரழிவை ஏற்படுத்தும்
**மேல் கொத்மலை திட்டத்தை உடனே நிறுத்து!**
மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம்

# ஜே. வி. பி. யைக் கட்டியணைத்து நிற்கும் இரண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள்

இந்தியாவின் இரண்டு பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இருந்து வருகின்றன. ஒன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) இரண்டாவது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாக்ஸிஸ்ட்) CPI (M). இவ்விரண்டு கட்சிகளுக்கும் பாராளுமன்றத்தில் ஐம்பது வரையான உறுப்பினர்கள் உண்டு. வெளியில் இருந்து ஆளும் காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு கொடுக்கும் இக்கட்சிகளின் பிரதான கொள்கை இந்துத்துவ பாரதிய ஜனதா கட்சி ஆட்சி பீடம் ஏறுவதைத் தடுப்பதாகும். மதசார்பற்ற கொள்கை என்பதைக் கொண்டு பாராளுமன்ற ஜனநாயகக் கூட்டணிகளை உருவாக்கி மத்தியிலும் மாநிலங்களிலும் செயல்படுகின்றன. தற்போதைய காங்கிரஸ் ஆட்சியில் பாராளுமன்ற சபாநாயகராக இருப்பவர் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்.

இவ்விரு கட்சிகளும் இந்தியாவின் தேசிய இன ஒடுக்குமுறை பற்றியும் அவற்றின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள் பற்றியும் எதிர்நிலைக் கொள்கைகளையே பின்பற்றி வருகின்றன. வடகிழக்கு மாநிலங்களில் இடம் பெறும் போராட்டங்கள் பற்றியும் காஷ்மீரிய மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் சம்மந்தமாகவும் இந்திய ஆளும் வர்க்க கண்ணோட்டத்திற்கு இணைவான போக்கையே கடைப்பிடித்தும் வருகின்றன. முற்று முழுதான பாராளுமன்ற சந்தர்ப்பவாதமும் இந்தியப் பெரும் தேசியவாதத்திற்கு துணை போகும் கொள்கையையுமே பின்பற்றி வருகின்றன. அரிவாள் சம்மட்டி சிகப்பு கொடி என்பன வெறும் அடையாளத்திற்கானவையே அன்றி மாக்சிச லெனினிசக் கொள்கை கோட்பாடு நடைமுறை உள்ளிட்ட இலட்சியத்திற்குரியனவாக இல்லை என்பது பொதுவான கருத்தாகும்.

இவ் இரு கட்சிகளினதும் தேசிய மாநாடுகள் இந்தியாவில் நடைபெற்றன. அதில் கலந்து கொள்ளும் சகோதரக் கட்சிகளில் இலங்கையின் பேரினவாத வெறி கிளப்பி வரும் ஜே. வி. பி. யும் அழைக்கப்பட்டிருந்தது. இம் மாநாடுகளில் கலந்து கொள்ள ஜே. வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்காவும் மத்தியகுழு உறுப்பினர் பிமால் இரத்தினநாயக்காவும் சென்றனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் ஜே. வி. பிக்கும் ஏற்பட்ட உறவும் ஊடலும் எதன் அடிப்படையில் ஏற்பட்டுள்ளன என்பது சிலருக்கு திகைப்பாக இருக்கும்.



பரதன் சேமவம்சா சுர்ஜித்

ஆனால் சீரழிந்த இவ் இரு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளைப் புரிந்து கொண்டவர்கள் எவரும் ஆச்சரியப்படமாட்டார்கள்.

முன்பு ஜே. வி. பி யை இவ்விரு கட்சிகளும் தூரத்தே வைத்திருந்தன. காரணம் ஜே. வி. பி இந்தியாவை விஸ்தரிப்புவாத நாடு எனக் கொண்டிருந்தமையாகும். முன்பு இந்தியாவை கடுமையாக எதிர்த்து வந்த ஜே. வி. பி இப்போது இந்தியப் பிராந்திய மேலாதிக்கத்தின் நட்பு சக்தியாகவும் கருவியாகவும் மாறி நிற்கிறது. அதன் காரணமாகப் பிராந்திய மேலாதிக்கத்தின் துணைவர்களாகி நிற்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஜே. வி. பி யுடன் தோழமை பூண்டு நிற்பது ஆச்சரியத்திற்குரிய தொன்றல்ல. அத்துடன் ஜே. வி. பி. யின் புலி இயக்க எதிர்ப்பும் அவர்களுக்கு உவப்பானதாக இருக்கிறது.

அண்மையில் இந்திய மாக்ஸிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் வரதராஜன் பி. பி. சிக்கு வழங்கிய செவ்வியில் ஜே. வி. பி. ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இடதுசாரிக் கட்சி எனக்குறிப்பிட்டார். ஜே. வி. பி. பேசும் பேரினவாதம் பற்றி பி. பி. சி நிருபர் கேட்டபோது அது பெரிய பிரச்சினை இல்லை என்றும் புலிகளின் பிரிவினைச் செயற்பாடுகளுக்கான எதிர்வினையே அவை என்றும் கூறிக்கொண்டார். ஜே. வி. பி. யை ஒரு மாக்சிய இடதுசாரிக் கட்சி என்றும்அதனிடம் இருந்து வரும் சில தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும் என்றும் கூறிக் கொண்டதைக் கேட்க முடிந்தது. இது அக்கட்சியின் சீரழிவையும் அகண்ட பாரதத்திற்கான பிராந்திய மேலாதிக்கத்திற்கு துணை போகும் போக்கையுமே எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய ஐரோப்பிய சீரழிந்த ஆளும் வர்க்கப் பெரும் தேசியத்திற்குத் துணைபோன கட்சிகளையே அன்று லெனின் கடுமையாகக் கண்டித்து மாக்சிச விரோத ஒடுகாலிகள் திரிபுவாதிகள் எனச் சாடினார். அதன் வழியில் செல்லும் இந்தியாவின் இரண்டு பாராளுமன்றக் கட்சிகளுக்கும் திரிபுவாத அடையாளம் முற்றிலும் பொருத்தமானதாகும். ஆனால் இவ்விரு கட்சிகளுக்கும் அப்பால் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் விடுதலைப் போராட்டங்களையும் சரியான மாக்சிச லெனினிச நிலை நின்று ஆதரித்து வரும் கம்யூனிஸ்ட் கட்சிகள் இருந்து வருகின்றன. அவற்றில் சில கட்சிகள் ஆயுதப்போராட்டத்திலும் ஈடுபட்டும் வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

எனவே இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து அவர்களது நியாயமான போராட்டங்களை எதிர்த்து கேடுகெட்ட பேரினவாத வெறியைக் கிளப்பி பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் புரிந்து வரும் ஜே. வி. பியை மாக்சிசத்தின் பெயரால் இடதுசாரிக்கட்சி என இந்தியத் திரிபுவாதக் கட்சிகள் கட்டியணைத்து நிற்கின்றன. இது இலங்கையில் நேர்மையான மாக்சிச லெனினிசவாதிகள் ஜே. வி. பியை நிராகரித்து நிற்கும் நிலைப்பாட்டிற்கு முற்றிலும் மாறானதாகும். அதே போன்று சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்து எதிரியுடன் கூடிக் குலாவி நிற்பதுமாகும். எவ்வளவிற்கு இந்தியப் பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சிகள் நற்சாட்சிப்பத்திரம் கொடுத்தாலும் ஜே. வி. பி. யின் பேரினவாத வெறித்ததனத்தையும் மாக்சிச லெனினிச விரோதத்தையும் மறைத்து நியாயப்படுத்த முடியாது.

ஜே. வி. பி யைக் கட்டித் தழுவி நிற்பதால் இந்தியப் பாராளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் தங்களின் சீரழிந்த சந்தர்ப்பவாத திரிபுவாத சுய ரூபத்தை மேலும் இந்திய இலங்கை மக்கள் மத்தியில் அம்பலமாக்கி நிற்கின்றன என்பதே உண்மையாகும்.

## மேல் கொத்மலைத்........

1ம் பக்கம் தொடர்ச்சி

பண்பாட்டுப் பாதிப்புகள் நிறையவே ஏற்படும்.

இத்திட்டத்தை நேர்மையான அரசியலாளர்கள், மக்கள் செயற்பாட் டாளர்கள், சூழலியலாளர்களும் எதிர்க்கின்றனர். இத்திட்டத்தினால் நேரடியாகப் பாதிக்கப்படவுள்ள மக்கள் பலவிதமான பசப்பு வார்த்தைகளால் குழப்பமடைந்துள்ளனர். அதனால் சமூகரீதியாக ஏற்படும் பாதிப்புகளை விட அத்திட்டம் மூலமான இழப்புகளுக்கு நட்டஈடு வழங்கப்பட்டால் போதுமானதுமாகும் என்ற பிரசாரம் அரசாங்கத்தாலும் அத்திட்டத்தினை ஆதரிப்போராலும் திட்டமிட்டவகையில் முன்னெடுக்கப்படுகிறது.

எனினும் இத்திட்டத்தினை எதிர்ப்போரின் எண்ணிக்கை அதிகமாகும். அவர்களின் எதிர்ப்பினை வெளிக்கொண்டுவரும் வகையிலும் பிரதிநித்துவம் செய்யும் வகையிலும் மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் எதிர்ப்பியக்கங்களை முன்னெடுத்துவருகிறது. அத்திட்டத்தை ஆதரிக்கும் இ.தொ.கா, ம.ம.மு ஆகியவற்றின் பல அங்கத்தவர்களும் சில தலைவர்களும் மே.கொ.ம. இயக்கத்திற்கு ஆதரவை தெரிவித்துள்ளனர். பல என்.ஜி.ஓ.க்களும் இத்திட்டத்தை எதிர்த்து வருகின்றன. இ.தொ.கா, ம.ம.மு தவிர சில தொழிற்சங்கங்கள் இத்திட்டத்தை எதிர்த்தும் வருகின்றன. இவை எல்லாவற்றையும் தொகுத்து பெரும்சக்தியாக செயற்படக்கூடிய வல்லமையை அத்திட்டத்தை எதிரிப்போர் அனைவரும் எதிர்வரும் 10ஆம் திகதி அட்டனில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்வதுடன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ள எதிர்ப்பு இயக்கங்களிலும் பங்கெடுக்கவும் வேண்டும்.

மக்களின் எதிர்ப்புணர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே மேல்கொத்மலைத்திட்டத்தை தடுத்து நிறுத்தமுடியும் என்பதை மனதில் கொண்டு செயற்படுவது அவசியம். இல்லாவிட்டால் அழிவுகளையும் பின்னடைவுகளையுமே மலையக மக்கள் சந்திக்க வேண்டிவரும்.

## கொத்மலை நீர்த்தேக்க அணையில் வெடிப்பு

துரிதப்படுத்தப்பட்ட மகாவலி திட்டத்தின் கீழ் முன்பு கட்டப்பட்ட கொத்மலை நீர்த்தேக்கத்திட்ட அணையில் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. அவ் வெடிப்புக்கு சீமெந்து பூசப்பட்ட போதும் பயனளிக்க வில்லை. இந்த வெடிப்பின் ஊடாக நீர் வெளியேறுவதால் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இரண்டு டேர்பைன்கள் செயலிழந்துள்ளன. ஒரு டேர்பைன் மட்டுமே இயங்குகிறது.

இந்த வெடிப்பினால் அணை உடைக்கப்பட்டால் பாரிய பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொத்மலை திட்டத்திலுள்ள வெடிப்பு மட்டுமல்ல நாட்டிலுள்ள ஏனைய நீர்த்தேக்க அணைகளில் ஏற்பட்டுள்ள வெடிப்புகள் கண்டுப் பிடிக்கப்பட்டுள்ளன. அவையும் உடைப்பெடுத்தால் வெளியேறும் நீரினால் பாரிய பாதிப்புகளும் அழிவுகளும் ஏற்படும். இப்படி இருக்கும் சூழலிலே தான் மற்றொரு திட்டமாக மேல் கொத்மலைத்திட்டத்தை அமுல்படுத்துவதில் அரசாங்கம் விடாப்பிடியாக இருக்கிறது. யார் அழிந்தாலும் எப்பிரதேசம் மூழ்கினாலும் முதலாளித்துவமும் சுரண்டலும் கவலைப்படப் போவதில்லை என்பதற்கு இது ஒரு உதாரணமாகும். மேல் கொத்மலை திட்டத்திற்கான செலவை ஈடு செய்ய ஐப்பான் அரசாங்கம் வட்டியுடன் கூடிய கடனையே கொடுக்க இருக்கிறது. வட்டிக்கு கடன் எடுத்து இத்திட்டத்தை மேற் கொண்டால் மக்களும், நாடும் பெரும் அழிவை எதிர்கொள்ளவே வேண்டிவரும்.



## ஐ. ம. சு. முன்னணி....

1ம் பக்க தொடர்ச்சி

பங்கையும் தனியார் மயப்படுத்தி அந்நியக் கம்பனிகளுக்கு விற்பனை செய்யத் தயாராகி விட்டது. எவர் எதிர்த்தாலும் இத்தனியார் மயத்தைச் செய்தே தீருவதென ஜனாதிபதி சபமதமேற்று நிற்கிறார். இவை மட்டுமன்றி கல்வி, சுகாதாரத்துறைகளையும் வெவ்வேறு பெயர்களில் சாக்குப் போக்குக் கூறித் தனியார்துறையினரிடம் ஒப்படைக்க நிற்கிறது அரசாங்கம்.

இன்று உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன கூறும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களுமே அரசாங்கத்திற்கு வேத வாக்காக இருந்து வருகிறது. எதிர்க்கட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி இன்றைய அரசாங்கத்தின் ஒரு வருடகால ஆட்சியை கண்டனம் செய்து கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றமை மக்கள் சார்பானதோ நாட்டு நலன் கருதியோ அல்ல. அடுத்த ஆட்சிக் கதிரையை நோக்கியேயாகும். ஏனெனில் இன்றைய அரசாங்கம் செய்து வரும் மக்கள் மீது சுமைகளை ஏற்றி பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணாது அந்நிய சக்திகளுக்கு அடிபணிந்து வரும் அதே கொள்கைகளைத் தான் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆட்சியில் செய்து வந்தது என்பதை மக்கள் மறந்து விட வில்லை.

எனவே நாட்டின் சாபக்கேடு எனக் கூறப்படுவதற்கு ஒப்பவே இரண்டு ஆளும் வர்க்க மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் கட்சிகளாலும் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் நாட்டின் எந்தவொரு பிரச்சினையும் தீரமாட்டாது என்பதே உண்மையானதாகும்.

கடந்த ஒருவருடகால ஆட்சியில் நாடும் மக்களும் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு எந்தளவுக்கு தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டன என்று பார்ப்பதற்கு ஐ. ம. சு. முன்னணி ஆட்சியில் பங்கு கொண்டிருக்கும் எந்தவொரு கட்சியும் தயாராக இல்லை. ஆனால் அடுத்து வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் தமது அதிகாரப்பிடியைத் தொடரக் கூடிய அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கான சர்வசன வாக்கெடுப்பு பற்றியுமே சிந்திப்பவர்களாக உள்ளனர். இவற்றையெல்லாம் விட சுனாமிப் பேரழிவுக்கு உட்பட்ட வடக்குகிழக்கு தெற்கு மேற்கின் மக்களுக்கு அரசாங்கம் செய்துவரும் கவனிப்பற்ற போக்கு மிகப் பெரும் மக்கள் துரோகமாகும். அந்த மக்கள் வடிக்கும் கண்ணீரும் சுமக்கும் துயரங்களும் நாளை மாபெரும் வெகுஜன எரிமலையாக ஆட்சியைச் சுட்டெரிக்கவே செய்யும். வெறுமனே மேலெழுந்த வாரியாகச் சிந்தித்து எதிர்த்தரப்பில் இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வரும் முயற்சிகள் வீணானதாகும். மக்கள் புதிய அரசியல் சிந்தனைகளுக்கும் உண்மையான மக்கள் சார்பு மாற்று ஆட்சிக்கான வழிகளில் சிந்திக்கவும் செயல்படவும் முன்வரல் வேண்டும். இல்லாது விடில் மக்களுக்கு கிடைப்பது பழைய செக்கிழுக்கும் பாராளுமன்றப் பாதையாக மட்டுமே இருக்க முடியும்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3 மடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு கொம்பிரிண்ட், 334A.K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.